# உதயன்

கூ.வெ. 32°C
கு.வெ. 23°C
தெளிவான காலநிலை

சுடர் 30 | கதிர் 142 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 4, வெள்ளிக்கிழமை 17.04.2015

# தமிழருக்கு எதிரான பாலியல் வன்முறை ராணுவத்தின் ஆயுதம்

## சுட்டிக்காட்டுகின்றார் ஐ.நா. பொதுச் செயலர் விசாரணை நடத்துமாறும் அரசுக்கு அறிவுறுத்து



கொழும்பு, ஏப்ரல் 17
இலங்கையில் போர் முடிவடைந்து 5 ஆண்டுகள் கழிந்துள்ளபோதும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பாலியல் ரீதியான வன்முறைகள் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது என்று கூறியுள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூன்.
தமிழர்கள் வாழும் பகுதிகள் இராணுவ மயமாக்கல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையாலேயே பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவை தொடர்பில் இலங்கை அரசு விசாரணைகள் நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.
பாலியல் வன்முறைகளை ஆயுதமாகப் பயன்படுத்தும், இலங்கை உட்பட 19 நாடுகள் குறித்து அவர் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தற்போதும் மோதல்கள் நடந்து வரும், ஆப்கானிஸ்தான், மத்திய ஆபிரிக்க குடியரசு, கொலம்பியா, கொங்கோ ஜனநாயக குடியரசு, ஈராக், லிபியா, மாலி, மியான்மார்,

பக்.02

## பாகிஸ்தானுக்கு படையெடுக்கும் சீன நீர்மூழ்கிகள்

கொழும்பு, ஏப்.17
சீன நீர்மூழ்கிக் கப்பல்களின் வருகையை இலங்கை அரசு ஏற்க மறுத்ததால், தற்போது அவை பாகிஸ்தானுக்குச் செல்கின்றன.
குறித்த கப்பல்களின் பராமரிப்பு, விநியோகம் என்பவற்றைப் பாகிஸ்தானின் க்வாடர் துறைமுகம் பொறுப்பேற்றுள்ளது.
க்வாடர் துறைமுகம் இனி வரும் காலங்களில் சீனாவுக்கும்


பக்.02

## கைதடி மாணவன் மஸ்கெலியாவில் நீரில் மூழ்கி சாவு

யாழ்ப்பாணம், ஏப். 17
கைதடியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் மஸ்கெலியா மவுஸாக்கலை நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று வியாழக்கிழமை முற்பகல் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கைதடி மேற்கைச் சேர்ந்த அருளானந்தம் டிலோஜன் (வயது-19) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.
மஸ்கெலியா மொக்கா தோட்டத்துக்குச் சென்ற அவர் நேற்று முற்பகல் சக மாணவனுடன் குளிக்கச் சென்றுள்ளார். அங்கு நீராடிக் கொண்டிருக்கும் போது அவர் திடீரெனக் காணாமல் போனார் என்று அவருடன் சென்றிருந்த நண்பன் மஸ்கெலியா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.
அங்கு சென்ற பொலிஸாரும், படையினரும் நீர்த்தேக்கத்தில் காணாமல் போனவரை

பக்.02

## விலகினார் சோமவன்ஸ



யாழ்ப்பாணம், ஏப். 17
மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, ஜே.வி.பியிலிருந்து விலகிப் புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
ஜே.வி.பியின் கொள்கைகளில் மாற்றம் வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அவர், தான் விலகுவதற்கு அதுவும் ஓர் காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.
கொழும்பு அரசியலில் ஏற்கனவே சிறிலங்கா

பக்.02

## போதையில் சாரத்தியம்: 10 நாள்களில் 21 பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17
யாழ்.குடாநாட்டில் கடந்த 10 நாள்களில் மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில்

பக்.02

## நிமிர்கின்றது வடக்கு

### வங்கிகளில் வைப்புகள் அதிகரித்து கடன்கள் குறைகின்றன

யாழ்ப்பாணம், ஏப். 17
வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம், வங்கிகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை வீழ்ச்சியடைந்து, வைப்புக்கள் அதிகரித்துள்ளன என்று இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. 30 பில்லியனால் கடன் தொகை வீழ்ச்சி கண்டிருப்பதுடன், வைப்புக்கள் 41 மில்லியனால் அதிகரித்துள்ளன.
வடக்கு மாகாணத்தில் கடந்த 5 ஆண்டுகளில் பொருளாதார நிலைமை சரிவடைந்து தற்போது சுமுகமான நிலைமைக்குத் திரும்பியுள்ளது. சரிவடைந்திருந்த வடக்கின் பொருளாதாரம் காரணமாக 2012 – 2013 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில், வடக்கிலுள்ள வர்த்தகர்கள் பலர் கடன் காரணமாகத் தற்கொலை செய்ததுடன், பலர் தலைமறைவாகியிருந்தனர்.
சரிவடைந்த பொருளாதார நிலைமை கடந்த ஆண்டிலிருந்து ஓரளவு ஸ்திர நிலையை அடைந்துள்ளது. தற்போது அதே நிலைமையே நீடிக்கின்றது.
2009 ஆம் ஆண்டு வடக்கிலுள்ள வங்கிகளால் 18.5 பில்லியன் ரூபாவும், 2012 ஆம் ஆண்டு 99.3 பில்லியன் ரூபாவும், 2014 ஆம் ஆண்டு 68.7 பில்லியன் ரூபாவும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
அதே போன்று, வடக்கிலுள்ள வங்கிகளில் கடந்த 2010 ஆம் ஆண்டு 108 பில்லியனும், 2012 ஆம் ஆண்டு 134 பில்லியனும், 2014 ஆம் ஆண்டு 171 பில்லியனும் வைப்பில் இடப்பட்டுள்ளது.

பக்.02

## தங்காலை கார்ல்டனில் கூடியது மஹிந்த ‘படை’

### புதிய கட்சி அமைப்பது குறித்தும் ஆராய்வாம்

கொழும்பு, ஏப்.17
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களான சுமார் 60 சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதியை அவரது தங்காலையில் உள்ள கார்ல்டன் வீட்டில் சந்தித்துள்ளனர்.
இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டவர்களில் முன்னாள் அமைச்சர்களான பந்துல

பக்.02

## தமிழ் மக்களை பாதித்துள்ள துயிலுமில்ல அழிப்பு

பக்கம் 09

## சந்தர்ப்பத்தை கைவிட்டால் மீண்டும் பூச்சிய நிலைக்கே

### தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.17
“சர்வதேச சமூகமும் உள்நாட்டு அரசும் எமக்குச் சாதகமாக இருக்கின்ற சூழ்நிலையில் அந்தச் சந்தர்ப்பங்களை நாம் சரியாகப் பயன்படுத்தத் தவறுவோமானால் நாம் பூச்சிய நிலைக்கே மீண்டும் செல்லவேண்டிய நிலை ஏற்படும்.” – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
“நீண்டகாலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் சம்பந்தமாக உண்மைகள் அறிந்து – நீதி வழங்கி அதன் மூலமாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்றும், நல்லிணக்கம் ஏற்பட்ட பின்பு மீண்டும் இவ்விதமான சம்பவங்கள் இடம்பெறாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் சில திட்டங்களை வகுத்து அதன்படி செயற்பட அரசு தயாராகி வருகின்றது.

பக்.02

## ஒரே ஒருமுறை மாத்திரமே பிரபாவை நெருங்கினோம்

### அப்போதும் அவர் தப்பினார்: உண்மை கூறுகிறார் ஹரிகரன்



கொழும்பு, ஏப். 17
இந்திய அமைதிப் படையினரால், ஒரே ஒருமுறை மாத்திரமே விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மறைவிடத்தை நெருங்க முடிந்தது. ஆனால் அந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் தப்பிவிட்டார். – இவ்வாறு கூறியுள்ளார் இந்திய அமைதிப்படையின் புலனாய்வுப் பிரிவுக்குப்

பக்.02

## வடமராட்சி கிழக்கில் மணல் மேடுகள் அழிவு

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற அகழ்வுகளால் வடமராட்சி கிழக்கில் இருந்த மணல் மேடுகள் முற்றாக அழிவடைந்துள்ளன என்று தெரிவித்துள்ளது கனிய வளங்கள் மற்றும் புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகம்.

பக்.03

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## போதையில் சாரத்தியம்: 10 நாள்களில் 21 பேர் கைது

21 பேருக்கும் தலைக்கவசம் இன்றிப் பயணித்த 102 பேருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புது வருடப் பிறப்பை முன்னிட்டு இருநாள்கள் மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்பட்டிருந்த போதும், மதுப் பிரியர்கள் அவற்றை வேறு வழிகளில் பெற்றுக் கொண்டு போதையேற்றியுள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் யாழ்.குடாநாட்டில் பொலிஸார் போக்குவரத்து விதிமுறை தொடர்பான பணியில் ஈடுபட்டிருந்தனர். புதுவருடப்பிறப்பை முன்னிட்டு இந்தச் சோதனைகளை அவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

அதன்போது போக்குவரத்து விதிமுறைகளை மீறிப் பயணம் செய்த 564 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. அதனை விட மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 21 பேரும் தலைக்கவசம் இல்லாது பயணித்த 102 பேருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தவிர கவனவீனமாக வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 8 பேருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தவிர நாடளாவிய ரீதியில் குடிபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 792 வாகனச் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எ.எஸ்.பி.ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

புதுவருட கொண்டாட்டங்களின் போது எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படாமலிருக்கும் படி பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட முன் எச்சரிக்கை நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கை எதிர் வரும் 20 ஆம் திகதி வரை நடை முறைப்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார். (ற-4)

## கைதடி மாணவன் மஸ்கெலியாவில் நீரில் மூழ்கி சாவு

தேடியபோது சுமார் 5 மணித்தியாலயங்களின் பின்னர் மாணவனின் சடலத்தை நீர்தேக்கத்திலிருந்து மீட்டனர்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த இளைஞன் கடந்த 12 திகதி யாழ்ப்பாணத்திலிருந்து மஸ்கெலியா பகுதியில் நண்பரின் வீட்டிற்குச் சென்றிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. லிப்ட் இயக்குவதற்கான கற்றல், பயிற்சியை அவர் மேற்கொண்டிருந்தார் என்று உறவினர்களால் தெரிவிக்கப்படுகிறது. (ற-4)

## நிமிர்கின்றது வடக்கு

2012 – 2013 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் கடன் கொடுத்தமையால் ஏற்பட்ட சிக்கல் நிலைமைகளை வங்கிகள் உணர்ந்து கொண்டமையாலும், கடன்களை தேவையற்ற விதத்தில் பெற்றமையால் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளை வாடிக்கையாளர்கள் உணர்ந்து கொண்டமையினாலுமே, 2014 ஆம் ஆண்டு வங்கிகளில் கடன் பெறுவது வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# தமிழருக்கு எதிரான பாலியல் வன்முறை ராணுவத்தின் ஆயுதம்



நைஜீரியா, சோமாலியா, தென் சூடான், சூடான், சிரியா, யேமன் ஆகிய நாடுகள் குறித்தும் – போருக்குப் பிந்திய சூழலில் உள்ள இலங்கை, பொஸ்னியா – ஹெர்சகோவினா, ஐவரிகோஸ்ட், லைபீரியா, நேபாளம் ஆகிய நாடுகள் குறித்தும் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பாலியல் வன்முறைகள் நடந்து வருகின்றன. அங்கு போருக்குப் பின்னர், ஆட்கடத்தல்கள், சட்ட விரோதமான தடுத்து வைப்பு, சித்திரவதைகள், பாலியல் வல்லுறவு ஏனைய வழிகளிலான பாலியல் வன்முறைகள் என்பன அதிகரித்துள்ளன. – என்று அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள் ளார்.

இலங்கை பற்றி அவர் தனது அறிக்கையில்:–

முன்னர் விடுதலைப் புலிகளுடன் இணைந்திருந்தவர்களைக் குறிவைத்தே குறிப்பாக இந்த பாலியல் வன்முறைகள் இடம்பெறுகின்றன. குறிப்பாக தமிழ்ப் பெண்கள், தமது வாழ்விடப் பகுதிகள் இராணுவமயமாக்கப்பட்டுள்ளதன் காரணமாக, பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன.

போரின் இறுதி மாதங்களிலும், போருக்குப் பிந்திய காலப் பகுதியிலும், தமிழ்ச் சமூகத்தினருக்கு எதிராக படையினர் மேற்கொண்ட பாலியல் வன்முறைகள் குறித்து விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ள போதிலும், நடவடிக்கைகள் மிக அரிதாகவே எடுக்கப்பட்டுள்ளன.

இன ரீதியாக அவமானப்படுத்தும் வகையிலும், விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தவர்களைக் குறிவைத்தும், பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டதாக, தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட பெண்கள் சாட்சியமளித்துள்ளனர். – என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் அவர் தனது பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளார்.

பாதுகாப்பு மற்றும் ஆயுதப்படைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பாக, புதிய அரசை விசாரணை நடத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

போரினால் கணவரை இழந்த பெண்கள், பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு, இழப்பீடுகள் உள்ளிட்ட பலதுறை உதவிகளை வழங்குமாறும், அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் திட்டங்களை மேற்கொள்ளுமாறும் இலங்கை அரசிடம் கேட்டுக் கொள்கிறேன். – என்று குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## ஒரே ஒருமுறை மாத்திரமே பிரபாவை நெருங்கினோம்

பொறுப்பாகக் கடமையாற்றிய கேணல் ஹரிகரன்.

நிகழ்வொன்றில் உரையாற்றியிருந்த இந்திய முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் வி.கே. சிங், இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பும் முடிவு, கொள்கை ரீதியான உயர்மட்டத் தவறு என்று குறிப்பிட்டிருந்தார் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அழிக்க இந்திய அமைதிப் படையினருக்கு பல முறை சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும், ஒவ்வொரு முறையும் பிரபாகரனை பத்திரமாகத் தப்பிச் செல்ல அனுமதிக்குமாறு உத்தரவு வழங்கப்பட்டதாகவும் கூறியிருந்தார். இது குறித்து பி.பி.சி செய்திச் சேவைக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே ஹரிகரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

"இந்திய அமைதிப்படையின் இராணுவக் குறிக்கோள்கள் தெளிவாக இருக்கவில்லை. எனக்குத் தெரிந்த வரை ஒரே ஒரு முறைதான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மறைவிடத்தை இந்தியப் படையினர் நெருங்கினர். அப்போதும் பிரபாகரன் அங்கிருந்து தப்பி விட்டார்."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"இந்திய – இலங்கை உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் அதிக அளவு உயிரிழப்புக்களை சந்தித்தது. நகர்ப்புறங்களில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை அமைதிப்படை கட்டுப்படுத்தினாலும், காடுகளுக்குச் சென்று பதுங்கிய விடுதலைப் புலிகள் கெரில்லா போர் முறையை கையாண்டு இந்திய அமைதிப் படைக்கு தொடர்ந்து தொல்லை கொடுத்தனர். இந்திய அமைதிப் படை எத்தகைய அரசியல் குறிக்கோள்களை நிறைவேற்றப் போகிறது என்ற தெளிவில்லாத சூழல் ஏற்பட்டதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது. – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## பாகிஸ்தானுக்கு படையெடுக்கும் சீன நீர்மூழ்கிகள்

பாகிஸ்தானுக்கும் இடையில் பொருள்கள் விநியோகத்தில் முக்கிய துறைமுகமாக மாறுமென சங்காய் நிறுவனத்தின் தெற்காசிய கற்கைநெறிகளுக்கான பணிப்பாளர் ஸாவோ கன்சேங் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாகிஸ்தானால் கையகப்படுத்தப்பட்டுள்ள காஷ்மீர் பிராந்தியம் ஊடாக, க்வாடர் துறைமுகம் இணைக்கப்படவுள்ளது என்று கன்சேங் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையானது சீனாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்றாலும், பாகிஸ்தான் பிராந்தியத்தில் நிலவும் தீவிரவாத செயற்பாடுகளால் பாதிப்புக்குள்ளாகலாம் என சீன நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ற-சி)

# தங்காலை கார்ல்டனில் கூடியது மஹிந்த 'படை'

குணவர்தன, சாலிந்த திஸாநாயக்க, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ, டீ.பி.ஏக்கநாயக்க, ஜி.எல்.பீரிஸ், மஹிந்தானந்த அளுத்கமகே, காமினி லொக்குகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, தினேஷ் குணவர்தன, குமார வெல்கம, எஸ்.எம். சந்திரசேன மற்றும் அருந்திக பெர்னாண்டோ உள்ளிட்டவர்களுடன் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோரும் மாகாண சபை உறுப்பினர்கள், நகர சபை, பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களும் அடங்குவர்.

சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அண்மையில் மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்ட 5 பேர் தொடர்பாகவும் அதற்கு மாற்றீடாக இணைத்துக்கொள்ளப்பட்டவர்கள் தொடர்பாகவும் காரசாரமான விவாதம் இடம்பெற்றுள்ளது. அத்துடன், நடைமுறை அரசியல் தொடர்பாகவும் விரிவாகக் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவை எதிர் வரும் பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் பிரதமர் வேட்பாளராகக் களமிறக்கவேண்டும் என்றும் இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது. இது சாத்தியப்படாவிட்டால் அவரை புதிய கட்சி ஒன்றில் பிரதமர் வேட்பாளராகக் களமிறக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட முன்னாள் முக்கிய அமைச்சர் ஒருவரை தொடர்புகொண்டு கேட்ட போது,

"அன்னம் சின்னத்தில் போ[illegible]யிட்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழித்துக் கொண்டிருக்கின்றார். சு.கவின் பழைய அங்கத்தவர்களை இல்லாது செய்யும் வகையில் அவரின் அண்மைக் கால செயற்பாடுகள் அமைந்துள்ளன.

மழைக்கு முளைத்த காளான்களுக்கெல்லாம் கட்சியில் உயர் மட்ட பதவிகளை மைத்திரிபால வழங்கியுள்ளார். இதனை நாங்கள் வன்மையாகக்கண்டிக்கின்றோம்."– என்று குறிப்பிட்டார். (ற-சி)

## சந்தர்ப்பத்தை கைவிட்டால் மீண்டும் பூச்சிய நிலைக்கே



புதிய தேர்தல் முறைமை தொடர்பில் ஒரு முடிவை அரசு எடுக்கும் போது அந்த முடிவின் அடிப்படையில் நடைபெறவிருக்கின்ற தேர்தலில் நாம் பங்குகொள்வோம்."– என்றும் அவர் குறிப்பிட்டார்..

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தரவுகளுடன் ஜனாதிபதியின் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயலணியிடம் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் கிழக்கு மாகாண சபையின் திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நேற்று திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

"இன்று இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகள் அனைத்[illegible] சர்வதேச சமூகத்துக்கு முன்ன[illegible] கொண்டுசெல்லப்பட்டுள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நிலைமைகளைப் பொறுத்தவரை உண்மைகள் கண்டறியப்படவேண்டும்; நீதி நிலைநாட்டப்படவேண்டும்; நடைபெற்ற சம்பவங்கள் இலங்கையில் மீண்டும் நடைபெறக் கூடாது. இது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுதியான நிலைப்பாடாகும்.

விசேட அறிக்கையாளர்கள் கூட சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்கள். எனவே, இவற்றை ஒட்டுமொத்தமாக அவதானிக்கின்றபோது எமக்கொரு நல்லதொரு சந்தர்ப்பம் உருவாகியிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்."– என்றும் அவர் கூறினார்.([illegible])

## விலகினார் சோமவன்ஸ

சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை மீளவும் அரசியலுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் தீவிரம் பெற்றுள்ளநிலையிலேயே, ஜே.வி.பி. மூன்றாவது தடவையாகவும் பிளவைச் சந்தித்துள்ளது.

பத்தரமுல்லையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த சோமவன்ஸ,

"நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையை மக்கள் விடுதலை முன்னணி உரிய முறையில் பயன்படுத்துவதில்லை. ஜே.வி.பியின் கொள்கையில் நடைமுறைக்கேற்ற மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். கட்சியில் பலருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அவர்களுடன் இணைந்து புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளேன்." – என்று குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை குறித்த, ஊடகவியலாளர் சந்திப்புக்கு ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத்தும் சமூகமளித்திருந்ததாகவும், இருப்பினும் அவரை மேடையில் ஏற வேண்டாம் என சோமவன்ஸ தெரிவித்ததாகவும், விரும்பினால் முன்பாக உள்ள கதிரைகளில் அமர்ந்து கொள்ளலாம் எனக் குறிப்பிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஊடகவியலாளர் சந்திப்பு முடிந்த பின்னர் விஜித ஹேரத் கருத்துத் தெரிவிக்கையில், "இது சோமவன்ஸவின் தனிப்பட்ட தீர்மானம். நாம் அவரை கட்சியுடன் சேர்ந்து செயற்படுமாறு தொடர்ந்து வேண்டுகோள் விடுக்கின்றோம்." – என்று குறிப்பிட்டார். (ற-5)

## மின்சார சபை பணியாளர்கள் இருவர் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.17
மாங்குளம்தச்சடம்பனில்நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் மாங்குளம் முல்லைத்தீவு நோக்கி வேகமாக சென்றுகொண்டிருந்த இலங்கை மின்சார சபையின் பிக்கப் ரக வாகனம் தச்சடம்பன் பகுதியில் மாடு ஒன்று வீதியை கடக்க முற்பட்ட போது அந்த மாட்டுடன் மோதுண்டு கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த இலங்கை போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது.

அதில் இலங்கை மின்சார சபையின் ஒப்பந்தப் பணியாளர்களான மட்டுவில் தெற்கைச் சேர்ந்த நவரட்ணம் ஜீவராஜ் (வயது 26), கைதடி நுணாவிலைச் சேர்ந்த துரைராஜசிங்கம் தயாபாலன் (வயது–23) ஆகியோர் உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

விபத்து பற்றிய மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற–21,9)

## திருவிழாவுக்கு செல்வோர் நகைகள் குறித்து அவதானம்

யாழ்ப்பாணம், ஏப். 17
ஆலய திருவிழாக்களில் கலந்து கொள்ள வருகை தரும் பக்தர்கள் தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆலய நிர்வாகங்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றன.

தற்போது குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் வருடாந்த மஹோற்சவங்கள் மற்றும் அலங்காரத் திருவிழாக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. தற்போது திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ள நிலையில் ஆலயங்கள் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுத்துள்ளன.

இரவு நேரத் திருவிழாக்களில் கலந்து கொள்ளும் பக்தர்கள் மீது திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிஅவர்கள் அணிந்திருக்கும் தங்க நகைகளை களவாடிச் செல்லலாம். இதன் காரணத்தால் இரவு நேர திருவிழாக்களுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்க நகைகள் அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

திருவிழாக்கள் நிறைவடைந்து பக்தர்கள் வீடு திரும்பும் சமயத்திலும் திருடர்கள் வீதிகளில் தமது கைவரிசையைக் காட்டலாம். அதனால் அவதானமாக இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–17)

# வடமராட்சி கிழக்கில் மணல் மேடுகள் அனைத்தும் அழிவு

### கடந்த கால முறையற்ற அகழ்வுகளால்

யாழ்ப்பாணம், ஏப். 17
வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தொழிற்துறை சுரங்க உரிமம் வழங்கக் கூடிய வகையில், மணல் மேடுகள் இல்லை என்று கனிய வளங்கள் மற்றும் புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகம் தெரிவித்துள்ளது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் மூலம், மணல் மேடுகள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ்.மாவட்ட அபிவிருத்தி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு வழங்குவதற்காக கனிய வழங்கள் மற்றும் புவி சரிதவியல் திணைக்களத்துக்கு விண்ணப்பித்திருந்தது. கடந்த காலங்களில், அரசியல்வாதிகளின் ஆதரவுடன் இயங்கிய நிறுவனம் முறையற்ற விதத்திலும், முறையான அனுமதியைப் பெறாமலும் மணல் அகழ்வில் ஈடுபட்டது. தற்போது குறித்த நிறுவனத்தின் மணல் அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதன் பின்னர், மணல் அகழ்வதற்கான உரிமத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விண்ணப்பித்திருந்தது. அவர்கள் தொழிற்துறை சுரங்க உரிமத்தைப் பெற்றுக் கொள்வதற்கே விண்ணப்பித்திருந்தனர். ஆனாலும் அதற்கான உரிமம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

"வடமராட்சி கிழக்கில் தொழிற்துறை சுரங்க உரிமம் வழங்கக் கூடிய வகையில் மணல் மேடுகள் இல்லை என்பதாலேயே, அனுமதி வழங்கவில்லை என்று, கனிய வளங்கள் மற்றும் புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகம் தெரிவித்தது."– என்று, வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்க செயலாளர் த.காண்டீபன் தெரிவித்தார்.

அங்குள்ள மணல் மேடுகள் அழிக்கப்பட்டுள்ளன. தற்போது குடத்தனையில் மாத்திரமே ஒரு மணல் மேடு இருக்கின்றது. இதனை இயந்திரங்கள் மூலம் எடுப்பதற்கான அனுமதி (தொழிற்துறைசுரங்கஉரிமம்) வழங்க முடியாது. பழைமையான முறை மூலம், மணலை மனித வலுவைப் பயன்படுத்தி வெட்டி கடகங்களில் கொண்டு சென்று ஏற்றுவதற்கான அனுமதியே வழங்க முடியும் என்று, யாழ்.மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும் இது தொடர்பில் கனிய வளங்கள் திணைக்கள பொறியியலாளரை தொடர்புகொள்ள முயன்ற போதும் முடியவில்லை. (ற–5)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 17ஆயிரம் சந்தன மரங்கள்

### 'எதிர்காலத்தில் பசுமை உலகம்' நிறுவனத்தால் கடந்த இரு வருடங்களில் நடப்பட்டுள்ளன



யாழ்ப்பாணம், ஏப்.17
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரு வருடங்களில் 17 பயனாளிகளின் வீடுகளில் ஆயிரக்கணக்கான சந்தன மரங்கள் நடப்பட்டுள்ளன. அவற்றில் பல தற்போது செழிப்பாக வளர்ந்துள்ளன் என்றும் இந்த சந்தன மரங்களால் எதிர்காலத்தில் மக்கள் அதிக பயன்களை பெறுவார்கள் எனவும் 'எதிர்காலத்தில் பசுமை உலகம்' நிறுவனத்தின் அபிவிருத்தி பணிப்பாளர் தெரிவித்தார்.

'எதிர்காலத்தில் பசுமை உலகம்' நிறுவனத்தினுடைய 'எதிர்காலப் பசுமைக்காக அனைவரும் கைகோர்ப் போம்' என்னும் செயற்திட்டத்தின் கீழ் வடக்கில் பல பகுதிகளில் பல்வேறுபட்ட செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனந்தபுரம், செல்வாநகர், முத் தையன்கட்டு போன்ற பல இடங்களில் பெறுமதி வாய்ந்த சந்தன மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களில் இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு 17ஆயிரம் சந்தன மரக்கன்றுகள் நடப்பட்டள்ளதாகவும், அவற்றில் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, பளை, போன்ற பிரதேசங்களில் உள்ள வீடுகளில் நடப்பட்ட சந்தன மரங்கள் பூத்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் தனது காணியில் 150 சந்தன மரங்களை வளர்த்து வருகின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு வளரும் சந்தன மரங்கள் சரியான போக்கில் வளர்ச்சி அடையுமாக இருந்தால் 16 வருடங்களில் ஒரு மரத்தை ஒன்றரைக் கோடி ரூபா வரையில் விற்பனை செய்யலாம் எனவும், இந்த மரங்கள் வேப்ப மரங்கள் வளரக்கூடிய பகுதிகளில் அதிகமாக வளர்ச்சி அடையக்கூடியவை எனவும் அந்த நிறுவனத்தின் அபிவிருத்தி பணிப்பாளர் தெரிவித்தார். (ற–21)

## 'பருத்தித்துறையூர்' வரலாற்று ஆவணப்படம் நேற்று முதலமைச்சரால் வெளியிடப்பட்டது

நெல்லியடி, ஏப்.17
வடமாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஊடான நிதி ஒதுக்கீட்டில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையின் 'பருத்தித்துறையூர்' வரலாற்று குறும் படம் ஆவணப்படம் மற்றும் இறுவட்டு வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டு இறுவட்டு குறும்படம் மற்றும் ஆவணப்படங்களை வெளியிட்டார்.

மு.ப. 11 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் 'பருத்தித்துறையூர்' வரலாற்று இறுவட்டும் 'எதிர்வினை வெட்டியா' 'ஒரு செல்பி' ஆகிய குறும்படங்களும் தகவல் திரட்டு ஆவணக் களஞ்சியம் ஆகியனவும் முதலமைச்சரால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வின் வரவேற்புரையை கலாசார உத்தியோகத்தர் செல்வசுகுணாவும் தலைமையுரையை பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலனும் நிகழ்த்தினர். தொடர்ந்து வெளியீடு இடம்பெற்றது. வெளியீட்டு உரையை கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் செ.யோகராஜா நிகழ்த்தினார். (ற–108)

## உற்சவங்களில் உணவு விற்பதில் கட்டுப்பாடு

### சுகாதார விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன

தென்மராட்சி, ஏப்.17
ஆலய உற்சவ வேளையில் வீதிகளில் தேன் முறுக்கு போன்ற இனிப்பு வகைகள் தயாரித்து விற் பனை செய்வோர் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகச் செயற்படுமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலில், ஆலய வீதிகளில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டில்களில் இனிப்பு உணவு வகைகள் தயாரித்து பாதுகாப்பு பெட்டிகளில் வைத்து விற்பனை செய்யப்பட வேண்டும்.

தற்காலிக கொட்டில்களின் நிலத்துக்கு நில விரிப்புகள் விரிக்கப்பட்டிருத்தல்வேண்டும். உணவு தயாரிப்பவர் சுகாதார மருத்துவ அதிகாரியின் மருத்துவச் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.

இனிப்பு வகை தயாரித்து விற்பனை செய்வோர் உள்ளூராட்சி சபையின் வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல்வேண்டும்.

இனிப்புப் பண்டங்கள் தயாரிக்கும்போது வெற்றிலைபாக்கு மெல்வதை தவிர்க்கவேண்டும். முகச்சவரம் செய்திருப்பதுடன் தலையில் தொப்பி அணிந்திருக்க வேண்டும்.

இந்த விதிமுறைகளை மீறி இனிப்புப் பண்டம் தயாரிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–9)

## யாழ். ப.நோ.கூ. சங்க புதிய கிளை நல்லூரில்

யாழ்ப்பாணம், ஏப்.17
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நல்லூரில் தனது கிளை விற்பனை நிலையம் ஒன்றை நேற்றுத் திறந்து வைத்துள்ளது. வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்கு அருகில் இந்த கிளை விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சங்க உப தலைவர் என்.எஸ் சத்தியதாசன் கிளை விற்பனை நிலையத்தை திறந்துவைத்து வியாபார நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சங்கத்தின் பணியாளர்கள், இயக்குநர்கள், பொதுச்சபை பிரதிநிதிகள் மற்றும் நுகர்வோர் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த கிளையின் ஊடாக நுகர்வோர் சகலவிதமான அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்யக் கூடியவகையில் அதை செயற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக செயற்பட்டுவரும் மற்றொரு கிளை நிலையமும் விரைவில் நுகர்வோரின் வசதி கருதி தரமுயர்த்தப்படும் – என்று சங்கத்தின் தலைவர் சுஜீந்திரன் தெரிவித்தார்.

தற்போது சங்கத்தின் இருபது கிளை நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. மேலதிகமாக ஐந்துக்கு மேற்பட்ட கிளை நிலையங்களை திறந்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.– என்றும் அவர் தெரிவித்தார். (ற–17)

## நீர்வேலி தெற்கில் புனரமைப்பின்றி இரு வீதிகள்

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 17
நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் வீதி, வெள்ளம் தண்ணி வீதி என்பன கடந்த பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதனால் வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த இரண்டு வீதிகளிலும் மாரிகாலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வீதியால் மக்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. தேங்கும் வெள்ளத்தினால் பாடசாலை செல்லும் மாணவர்கள் கூட சிரமப்படுவதுடன் அவர்களின் சீருடையும் மழை வெள்ளத்தில் நனைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை வலி.கிழக்கு பிரதேச சபை கவனத்தில் எடுத்து அதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்என்றுஅந்தப்பகுதிமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (ற–17)

## சமாதானத்துக்கான ஆய்வு முகாம்

யாழ்ப்பாணம், ஏப், 17
சி.சி.எச். நிறுவனத்தால் சமாதானத்துக்கான ஆய்வு முகாமொன்று நடத்தப்படுகின்றது.

இயன்றளவு சிறுவர்கள் ஈடு படும் இடங்களை மகிழ்வின் இடங்களாக, ஆக்க சிந்தனையை தூண்டும் இடங்களாக மாற்றும் இந்த நிகழ்வு வாதரவத்தையில் அமைந்துள்ள சி.சி.எச்சின் சிறுவர் வள நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி யுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 19ஆம் திகதி வரை நடைபெறும் இந்த முகாமில் ஆர்வமுடையோர் பங்குபற்றலாம் என நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ஸ்ரீகஜேந்திரன் தெரிவித்தார். (ற–10)

## மணல் அகழ்வால் சூழல் பாதிப்பு

கிளிநொச்சி, ஏப்.17

கிளிநொச்சி, அக்கராயன் ஆற்றுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக ஆற்றின் நடுவே காணப்படும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்கள் அழிவடையும் அபாயநிலை உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் ஏழரை கிலோமீற்றருக்கு இந்த மணல் அகழ்வு நடைபெறுகின்றது. மணல் அகழ்வு காரணமாக அக்கராயன் மத்திய பகுதி, கிழக்குப் பகுதி, ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் ஆகிய கிராமங்களின் நிலத்தடி நீர் எதிர்காலத்தில் குறைவடையக்கூடிய நிலைமை காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கராயன் ஆற்றில் மணல் அகழ்வு தொடருமானால் எதிர்காலத்தில் அக்கராயன் பிரதேசத்தில் பெருமளவிலான சூழலியல் ஆபத்துக்கள் ஏற்படுவதுடன், உயிர் ஆபத்துகளும் ஏற்படக்கூடிய அபாய நிலை உருவாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



## சந்தேகத்துக்கு இடமாக நின்றிருந்த இரு பெண்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ். பஸ் நிலையத்தில் அதிகாலை வேளை சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்றிருந்த இரு இளம் பெண்கள் கடந்த சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர் 19 மற்றும் 17 வயதுடையவர்கள் என்றும், மட்டக்களப்பு, செங்கலடி மற்றும் கரடியனாறு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரிடம் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்தமைக்கான காரணத்தையோ, தமது ஆளடையாளத்தையோ நிரூபிக்கவில்லை. அதையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டு பதில் நீதிவான் முன் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களைக் கடந்த செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

அன்றைய தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தபோது குறித்த பெண்களின் பெற்றோர்கள் நீதிமன்றுக்கு சமூகமளித்திருந்தனர். தம்முடன் தர்க்கப்பட்டே குறித்த யுவதிகள் வீடுகளில் இருந்து வெளியேறியிருந்தனர் என்று அவர்கள் தெரிவித்தனர். இரு யுவதிகளையும் எச்சரித்த நீதிவான் பெ.சிவகுமார் அவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ற-103)

# மாறுபட்ட விலையில் பசும்பால் கொள்வனவு

## கால்நடை வளர்ப்போரும், பண்ணையாளர்களும் கவலை

அச்சுவேலி, ஏப்.17

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாலைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் மாறுபட்ட விலைகளில் பாலைக் கொள்வனவு செய்கின்றன.

பாலின் கொள்வனவு விலை லீற்றர் ஒன்றுக்கு 60 ரூபா என அரசு அறிவித்திருந்தது. ஆயினும் யாழ். மாவட்டத்தில் ஒரு லீற்றர் பால் 50 ரூபா முதல் 58 ரூபா வரையிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. பாலைக் கொள்வனவு செய்யும்போதும் அளவை முறையில் முகத்தல் அளவை, நிறுத்தல் அளவை என வெவ்வேறு முறைகளில் கொள்வனவு செய்யப்படுகின்றது என்று கால்நடை வளர்ப்போரும், பண்ணையாளர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பசும்பால் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகச் செயற்படும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (யாழ்கோ) ஆகியவற்றின் மூலமும் 'நெஸ்லே' நிறுவனம், 'ஹார்க்கில்ஸ் பூட் சிற்றி' ஆகியவற்றின் மூலம் கொள்வனவு செய்யப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் ஒரு லீற்றர் பாலின் கொள்வனவு விலை ரூபா 60 என அரசு அறிவித்துள்ளது. அத்துடன் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் அதன் விலையை 70 ரூபாவாக அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. ஆயினும் யாழ்.மாவட்டத்தில் பால் கொள்வனவின்போது மாறுபட்ட விலைகள் காணப்படுவதாலும், அரசு அறிவித்த பெறுமதியில் கொள்வனவு செய்யப்படாததாலும் பண்ணையாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தமக்கு நாளாந்தம் ஏற்படும் பாதிப்பைக் கருத்திற்கொண்டு பாலின் கொள்வனவு விலை அதிகரிப்பதற்கும் தேசிய விலையை நிர்ணயத்துக்கு அமையக் கொள்வனவு செய்வதற்கும் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி அபிவிருத்தி அமைச்சு பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்ய முன்வரவேண்டும் என்று கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் கோரியுள்ளனர். (ற-11)

## பொதுநோக்கு மண்டபத்திலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும்

### வவு. இலங்கைத் திருச்சபைத் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர்கள் கோரிக்கை

வவுனியா, ஏப்.17

வவுனியா இலங்கைத் திருச்சபைத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் உள்ள பொதுநோக்கு மண்டபத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்று அந்தப் பாடசாலையின் பழைய மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த மண்டபம் 1994ஆம் ஆண்டு அப்போதைய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராஜகுகனேஸ்வரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கட்டப்பட்டது. தற்போது அந்த மண்டபத்தில் இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர்.

தற்போது போர்ச் சூழல் ஓய்ந்துள்ள நிலையில் குறித்த மண்டபத்தை மக்கள் பாவனைக்கு விட வேண்டும் என்று அந்தப் பாடசாலையின் பழைய மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-402)

## விபத்தில் நால்வர் படுகாயம்

வவுனியா, ஏப்.17

வவுனியாவிலிருந்து முள்ளியவளை அலுவலகத்துக்குப் பயணித்த யூ.என். ஹபிரற் நிறுவனத்தின் வாகனம் முள்ளியவளை 6ஆம் கட்டைப்பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில் பயணித்த பிரதம பொறியியலாளர் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.



## நற்கருணை நாதர் ஆலயம் ஜோசப்வாஸ் நகரில் திறப்பு

மன்னார், ஏப்.17

மன்னார் ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நற்கருணை நாதர் ஆலயம் நேற்று வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.



மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் தலைமையில் யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை, பதுளை மறைமாவட்ட ஆயர் வின்ஸ்டன் பெனான்டோ, கண்டி மறைமாவட்ட ஆயர் வியானி பெனான்டோ ஆகியோர் இணைந்து ஆலயத்தைத் திறந்து வைத்தனர்.

காலை 7 மணியளவில் ஜோசப்வாஸ் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் இருந்து 6 மறைமாவட்ட ஆயர்களும் மக்களால் வரவேற்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதன்பின்னர் மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் ஆயர்கள் இணைந்து நாடாவை வெட்டி ஆலயத்தைத் திறந்து வைத்தனர்.

அதன்பின்னர் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

ஆலயத் திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகளை ஜோசப் வாஸ் நகர் பங்குத்தந்தை அருட்தந்தை அந்தோனி றொக்சன் குரூஸ் மேற்கொண்டிருந்தார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம் ஆகியோரும், வட மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேசச் செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர்கள், உறுப்பினர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-56,10)

## மன்னார் ஆயரின் 75ஆவது பிறந்த தினம்

### நேற்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டது



மன்னார், ஏப்.17

மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் 75 ஆவது பிறந்த தினம் நேற்றுக் காலை மன்னார் ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் திறக்கப்பட்ட நற்கருணைநாதர் ஆலயத்தில் கொண்டாடப்பட்டது.

75 சிறுவர்கள் தீபங்களை ஏந்தி நிற்க மன்னார் ஆயர் கேக் வெட்டித் தனது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை, பதுளை மறைமாவட்ட ஆயர் வின்ஸ்டன் பெர்னாண்டோ, கண்டி மறைமாவட்ட ஆயர் வியானி பெர்னாண்டோ ஆகியோர் பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அத்துடன் கிராமமக்களும், அரசியல் தலைவர்களும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (ற-56)

## சிறுபோகச் செய்கைக்கு நீர்

கிளிநொச்சி, ஏப்.17


கிளிநொச்சி, அக்கராயன்குளத்தின் கீழான சிறுபோக செய்கைக்குத் தேவையான நீர் கடந்த 14ஆம் திகதி திறந்துவிடப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாவது பெரிய குளமான அக்கராயன் குளத்தின் கீழ் இந்த வருடம் 2 ஆயிரத்து 500 ஏக்கரில் நெல் மற்றும் உப பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தச் செய்கைக்குத் தேவையான நீரே தற்போது திறந்து விடப்பட்டுள்ளது.

அக்கராயன் குளம் முழுமையாகப் புனரமைக்கப்பட்டால் சிறுபோக செய்கையில் 4 ஆயிரம் ஏக்கரில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ள முடியும். குளத்தை முழுமையாகப் புனரமைப்புச் செய்வதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா தேவையென பொறியியலாளர் தெரிவித்தார்.

# தமிழகத்திலும் நடக்கும் தமிழினப் படுகொலை

## ஆந்திராவில் 20 தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு வடக்கு சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் கண்டனம்



வவுனியா, ஏப் 17

உலகின் தொன்மையான இனம் தமிழினம். ஆனாலும் இலங்கையில் மட்டுமல்ல அயல் நாட்டிலும் அடக்கப்படுகின்ற இனமாக எமது இனம் மாறி வருவது வேதனையளிப்பதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

அண்மையில் தென்னிந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 20 கூலித் தொழிலாளர்கள் ஆந்திரமாநில காவல்துறையினரால் ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமை கண்டிக்கப்பட வேண்டியது. கல் தோன்றி மண் தோன்றிய காலத்தின் தொன்மையான வரலாற்றைக் கொண்ட இனம் தமிழினமாகும். எனினும் எமது நாட்டில் கடந்த ஆறு தசாப்த வரலாற்றில் புறக்கணிக்கப்பட்ட இனமாகவே தமிழினம் இருந்து வருகின்றது. வயது வேறுபாடின்றி மிருகத்தனமாக ஈழத் தமிழர்களைச் சுட்டுக்கொன்ற வரலாற்றுப் பதிவுகளை நாம் இன்னும் மறக்கவில்லை. ஈழத்தில் எமக்கிழைக்கப்படும் அனைத்துக் கொடுமைகளையும் நம் தொப்புள் கொடி உறவுகளான தமிழகத் தமிழர்கள் அவ்வப்போது போராட்டங்களை நடத்தி எமது பிரச்சினையை உலகறியச் செய்துள்ளனர். இதற்காகப் பலர் தமது உயிரைக் கூடத் தியாகம் செய்துள்ளனர்.

இன்று அவர்களுக்கும் எமக்கு ஏற்பட்ட நிலைமை ஏற்பட்டுள்ளதோ எனத் தோன்றுகிறது. செம்மரம் வெட்டியவர்கள் என்ற குற்றச்சாட்டில் மிலேச்சத்தனமாக ஆந்திரக் காவல் துறையினரால் ஈவிரக்கமின்றித் திட்டமிட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இந்திய மத்திய அரசு இது தொடர்பில் உரிய விசாரணை நடத்தி தவறிழைத்தவர்களுக்கு தக்க தண்டனை வழங்கவேண்டுமென்பதுடன் தமிழக உறவுகளின் சோகத்தில் நாமும் பங்கெடுக்கின்றோம் – என்றுள்ளது. (த)

# செல்லாக் காசுகளாக முஸ்லிம் அமைச்சர்கள்

## குற்றஞ்சாட்டுகின்றது உலமா கட்சி

கொழும்பு, ஏப். 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மத்திய அரசில் அமைச்சுப் பதவியைப் பெறாமலேயே தமிழ் மக்களின் ஆயிரக்கணக்கான காணிகளை மீட்டுக் கொடுத்துள்ளனர். ஆனால் அமைச்சரவையில் சொகுசாகக் கொலுவீற்றிருக்கும் எமது முஸ்லிம் கட்சித் தலைவர்களான அமைச்சர்களால் ஒரு துண்டு நிலத்தையேனும் மீட்டெடுக்க முடியவில்லை என உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் சிலாவத்துறைக் கடற்படை முகாமை அகற்றி முஸ்லிம்களின் காணிகளைப் பெற்று தரும்படி அமைச்சர் ஹக்கீம் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை நல்லாட்சியிலும் அவர் எதிர்க்கட்சி அரசியல் செய்கிறாரா என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. சிலாவத்துறை கடற்படை முகாமை விலக்கிக் கொள்வது என கடந்த அரசு 2007 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனாலும் முஸ்லிம் சமூகத்தின் பிரதான கட்சிகளின் தலைவர்களாகவும், அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களாகவும் ஹக்கீமும் ரிஷாத்தும் இருந்தும் இவர்களால் இதனை வெற்றி கொள்ள முடியவில்லை. ஆளுமையற்ற இவர்கள் இப்போது கடந்த அரசைக் குற்றம் சொன்னாலும் கடைசி வரை அந்த அரசின் அமைச்சரவையில் செல்லாக் காசுகளாக இருந்து சமூகத்தைக் காட்டிக்கொடுத்துள்ளார்கள் என்பதே உண்மை.

இப்போது அமைச்சர் ஹக்கீம் தமது கையாலாகாத தனத்தை மறைப்பதற்காக எதிர்க்கட்சி உறுப்பினர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்துக்கொண்டு சென்று பிரதமரிடம் அறிக்கை கொடுத்துள்ளமை அமைச்சு அதிகாரம் பெற்ற முஸ்லிம் அரசியலில் வெட்கக்கேடான நிலையாகும்.

இந்த அரசு பதவியேற்று நூறு நாள்களை நெருங்கும் இந்த வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மத்திய அரசில் அமைச்சுப் பதவியை பெறாமலேயே தமிழ் மக்களின் ஆயிரக்கணக்கான காணிகளை மீட்டுக் கொடுத்துள்ளனர். ஆனால் அமைச்சரவையில் சொகுசாக கொலுவீற்றிருக்கும் எமது முஸ்லிம் கட்சித்தலைவர்களான அமைச்சர்களால் ஒரு துண்டு நிலத்தையேனும் மீட்டெடுக்க முடியவில்லை என்றால் இவர்களுக்கு அமைச்சு பதவியை வழங்கினால் போதும் இறுதிவரை வாலாட்டுவார்கள் என்றே இந்த ஆட்சியினரும் இவர்களைப்பற்றி தெரிந்து வைத்துள்ளனர். இனியாவது இந்த முஸ்லிம் கட்சிகளை ஒதுக்க முஸ்லிம் பொதுமக்கள் முன்வருவது பற்றிச் சிந்திக்க வேண்டும்– எனத் தெரிவித்தார். (த–10)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்டத்துக்கான சமூக ஒருமைப்பாட்டுக் கலந்துரையாடல் தலைவர். இரா.சம்பந்தன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை மு.பகல் 10.30 மணிக்கு திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (த–40)

# எஜமானின் வீட்டுக்கு தீ வைப்பு: இலங்கைப் பணிப்பெண் மறுப்பு

கொழும்பு, ஏப். 17

வீட்டை விட்டு ஓடுவதற்கு முன்னர், தன் எஜமானின் வீட்டுக்கு தீ வைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கைப் பணிப்பெண் தன் மீதான குற்றச்சாட்டை நீதிமன்றில் மறுத்துள்ளார்.

வீட்டுக்காரர்கள் நித்திரையாக இருந்தபோது தனது அறையில் பெற்றோலை ஊற்றித் தீ வைத்துவிட்டு ஓடிவிட்டார் என்று இலங்கைப் பணிப்பெண் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பணிப்பெண் தங்கும் பகுதியில் 70 சதவீதம் எரிந்துவிட்டதாகப் பொலிஸார் கூறினர். ஆனால், தான் தீ வைக்கவில்லையென அவர் கூறினார்.

தன் எஜமானர்களின் கொடுமை காரணமாகவே தான் வீட்டை விட்டு ஓடியதாக அவர் ஒப்புக்கொண்டார். 'எனது எஜமானி என்னைக் கொடுமைப்படுத்தினார். எனக்குப் பெருமளவு வேலை கொடுத்தார்' என அவர் வழக்குத் தொடுநர்களிடம் கூறினார்.

தான் முதலில் பாதுகாப்புக் கமெராவைத் துணியால் மறைத்ததாகவும் ஓடுவதற்கு முன்னர் அந்தத் துணியை அகற்றியதாகவும் அவர் கூறினார்.

தனது மகன் முதலில் தீ பரவுவதைக் கண்டு தன்னை நித்திரையில் எழுப்பியதாக 47 வயது பஹ்ரெய்ன் எஜமான் கூறினார். தான் பணிப்பெண்ணின் அறையில் பரவிய தீயை அணைக்க முயன்றதாக அவர் நீதிமன்றில் கூறினார். இந்த வழக்கை நீதிபதிகள் மே மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (த)

# 1,122 சாரதிகள் கைது



கொழும்பு, ஏப் 17

மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளில் 1,122 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோரைக் கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை கடந்த 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் 600 மோட்டார் சாரதிகள், ஓட்டோச் சாரதிகள் 404பேரும், லொறி சாரதிகள் 37 பேரும் கார் சாரதிகள் 33 பேரும் வான் சாரதிகள் 17 பேரும் அடங்குவதாகவும் ஏனையோர் இதர வாகனங்களின் சாரதிகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# தேர்தலில் வாய்ப்பு வழங்காவிடின் புரட்சி

## மகிந்தானந்த எச்சரிக்கை

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களுக்கு, தேர்தலில் போட்டியிடச் சுதந்திரக் கட்சி வாய்ப்பு வழங்காவிட்டால் மாற்றுத் தீர்மானத்தை எடுக்க நேரிடும் என முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி தான் உட்பட சில உறுப்பினர்களுக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்காது போனால், இலங்கையின் அரசியல் வரலாற்றில் புரட்சி ஒன்று ஏற்படும் எனவும் தவறான தீர்மானங்களை எடுத்தவர்கள் அதனை அனுபவிக்க நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெயர் குறிப்பிடாத சிலர் லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு முன்வைக்கும் முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கவில்லை என்றால் அது ஜனநாயகமாக இருக்காது.

நாங்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாகச் செயற்பட்டோம். அவருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தோம் என்பதற்காகத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படாது போனால், போட்டியிட வாய்ப்பு கிடைக்காதவர்களை இணைத்துக்கொண்டு செய்ய முடிந்த சகலவற்றையும் செய்வோம்.

நாங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். இதனால், நாங்கள் அந்தக் கட்சியின் ஊடாகவே போட்டியிடுவோம். ஊழலில் ஈடுபட்டவர்களுக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படமாட்டாது எனக் கூறும் சிலர் கடந்த காலங்களில் தவறுகளைச் செய்து அரசு அபராதம் செலுத்தியவர்கள். எனினும் அவர்களின் பெயர்களை நான் குறிப்பிடப் போவதில்லை. அப்படியானவர்களும் இவ்வாறு பேசுவதற்கும் தார்மீக உரிமையில்லை. போட்டியிடும் வாய்ப்பு வழங்காவிட்டால் அன்று பார்த்து கொள்ளலாம். அப்படி நடந்தால், அது நாட்டுக்குப் பெரும் பாதிப்பாக அமையும். அதன் பிரதிபலன்களை அவர்கள் அனுபவிக்க நேரிடும். யார் எப்படியான அழுத்தங்களைக் கொடுத்தாலும் நாங்கள் அரசியலில் ஈடுபவதை நிறுத்தப் போவதில்லை.

போட்டியிட வாய்ப்பு கிடைக்காவிட்டால், மாற்று வழிகள் உள்ளன. ஒன்றைக் கூற விரும்புகின்றேன். ஐக்கிய தேசியக் கட்சியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து செல்ல முடியாது. அப்படிச் செல்லப் போவதுமில்லை.

மஹிந்தவுக்காகப் பணியாற்றியதன் காரணத்தினால், விமல் வீரவன்ஸ, ரோஹித்த அபேகுணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோருக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்கின்றனர். லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, பவித்ரா வன்னியாராய்ச்சி ஆகியோர் மீதும் தாக்குதல் தொடுத்தனர். அவர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டதால், கோப்பு கீழே சென்று விட்டது–என்றார். (த)

# நவுறுவில் உள்ள அகதிகள் கம்போடியாவுக்கு மாற்றம்



கான்பரா, ஏப் 17

ஆஸ்திரேலியாவில் புகலிடம் மறுக்கப்பட்ட இலங்கையர் உட்பட பல்நாட்டு அகதிகள் நவுறு தீவிலிருந்து கம்போடியாவில் குடியமர்த்துவதற்காக அங்கு அனுப்பப்படவுள்ளனர் என ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கூறியுள்ளது.

கம்போடிய தலைநகரான நாம் பெனில் குடியேற்றப்படுவதற்காக முதல் தொகுதி அகதிகள் விசேட விமானத்தின் மூலமாக எதிர்வரும் திங்கள்கிழமை அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இதற்கான கம்போடியாவும் ஆஸ்திரேலியாவும் இருபக்க ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

கம்போடியாவுக்கு அனுப்பப்படவுள்ளவர்களில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை சேர்ந்தவர்கள் உள்ளனர்.


நவறு தடுப்பு முகாம்களிலிருந்து வெளியேறுபவர்கள் சுய விருப்புடன் செல்பவர்களாக இருக்க வேண்டுமென இந்த ஒப்பந்தம் கூறுகின்றது. தாமாக விரும்பிக் கம்போடியாவில் குடியேறுவோருக்குக் கையில் பணம், வங்கியில் பணம், வேலை வாய்ப்பு, கல்வி வசதி, மொழிப் பயிற்சி, ஆரோக்கிய காப்புறுதி எனப் பல சலுகைகள் கிடைக்கும். இந்த ஏற்பாட்டின் காரணமாக ஆஸ்திரேலியாவுக்கு ஆண்டுக்கு 10 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர் செலவாகும்.

இதேவேளை, கம்போடியாவுக்கு அகதிகளை அனுப்புவதை மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்துள்ளன. (த)

# பசறையில் பஸ் விபத்து: 37 பேர் காயம்

பசறை–மடுல்சீமை வீதியில் இரண்டாம் மைற்கல்லுக்கு அருகில் தனியார் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 37 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்களில் 23 பேர் பெண்கள் என்று தெரிவித்துள்ள பசறைப் பொலிஸார், காயமடைந்தவர்கள் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தனர். (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிலும் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து சாதாரணமாகப் பேசுவது நல்லது. நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும்.

**இடபம்:** வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பலன் தரும். செலவு அதிகரிக்கும். தேவையான உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**மிதுனம்:** அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களைப் பற்றி கூறுவதைத் தவிர்ப்பது நல்லது. எதிர்ப்புகள் அகலும், தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகளும் நீங்கும்.

**கடகம்:** மனக்குறைகள் நீங்கி மனதில் நம்பிக்கை உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் விடா முயற்சியுடன் செய்வதன் மூலம் எல்லா வகையிலும் நன்மை உண்டாகும்.

**சிங்கம்:** எந்த ஒரு வேலையையும் மனத் திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்க பெறுவார்கள்.

**கன்னி:** தொழில், வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான துணி போன்றவைகளை வாங்குவீர்கள். தம்பதிகளிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும்.

**துலாம்:** உங்களைப் பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டுகொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. எந்த சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பணவரத்து கூடும்.


**விருச்சிகம்:** உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் இருக்கும். திடீரென்று அவசர முடிவை எடுக்க வேண்டியிருக்கும். உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். கும்.

**தனுசு:** மனை, வீடு வாங்க எடுக்கும் முயற்சிகள் சற்று தாமதமாக நடக்கும். எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைப்பட்ட பணவரத்து தடைநீங்கி கைக்கு வந்து சேரும்.

**மகரம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும். பிள்ளைகள் பற்றிய மனக்கவலை நீங்கும். நீங்கள் கொடுத்த வாக்கைகக்யற காப்பாற்ற பாடுபடுவீர்கள்.

**கும்பம்:** எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும்.


**மீனம்:** தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும்.



# புதனின் வர்ணம்

மெசஞ்சர் என்பது புதன் கோளின் வேதியியல் கட்டமைப்பு, நிலவியல் அமைப்பு, மற்றும் காந்தப்புலம் போன்றவற்றை அறிவதற்காக நாஸாவினால் 2004 ஆம் ஆண்டு ஏவப்பட்ட ஒரு அமெரிக்கத் தானியங்கி விண்கலம் ஆகும். இதுவே புதனின் சுற்றுப்பாதைக்குச் சென்ற முதலாவது விண்கலமும் ஆகும்.
இந்த விண்கலம் எடுத்து அனுப்பிய ஒளிப்படம் இது.

# சாக்லெட் கணினி



கூகுள் அறிமுகம் செய்துள்ள புதிய சாதனத்தை, 'சாக்லெட் சைஸ் சாதனம்' என்றுதான் தொழில்நுட்ப உலகில் வர்ணிக்கின்றனர். இந்த குரோம்பிட் சாதனம் ஒரு உடனடிக் கணினி. குரோம் இயங்குதளம் அடிப்படையிலான இந்தச் சாதனம் எந்த ஒரு ரி.வியையோ அல்லது லப்ரொப்பையோ குரோம் பிசியாக மாற்றிவிடக் கூடியதாம்.
சாக்லெட் பார் அளவுக்கு இருக்கும் இந்தச் சாதனம் 100 டொலர் விலைக்குள் முழுக் கணினி என்று கூகுள் குறிப்பிட்டுள்ளது. இதை இணைப்பதன் மூலம் எந்த டிஸ்பிளேயையும் கணினியாக மாற்றலாம். ஏற்கனவே உள்ள கணினி மற்றும் லப்ரொப்பை மேம்படுத்தவும் இது உதவும்.
அசெஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தச் சாதனம், 2 ஜிபி ரம் மற்றும் 16 ஜிபி ஸ்டோரேஜ் கொண்டுள்ளது.

# ரிலாக்ஸா வாசியுங்க...

நம்மாளு ஒரு ஹோட்டலுக்குச் சாப்பிடப் போனார். மசாலா தோசை ஓடர் செய்தார். மசாலா தோசை வந்தது. தோசையை விட்டுவிட்டு உள்ளே இருந்த மசாலாவை மாத்திரம் தின்றார். அதன் பின்னர் சமோசா ஓடர் செய்தார். சமோசா வந்தது. மேலே இருந்த சமோசாவை விட்டுவிட்டு உள்ளே இருந்த கிழங்கு வகையறாக்களைத் தின்றார்.
அப்புறம் உளுந்துவடை கேட்டார். வடை வந்தது. மேலே இருந்த முறுமுறு அயிட்டத்தை எடுத்து விட்டு உள்ளே இருந்தவற்றை மட்டும் தின்றார். சர்வருக்கு ஒண்ணும் புரியல்லை. மனசும் கேட்கவில்லை. அவரிடமே கேட்டுவிட்டார்
ஏன்இப்படிமேலேஉள்ளதைஎடுத்துவிட்டுச்சாப்பிடுறீங்க?
'டாக்டர் தான் சொல்லி இருக்கார் வெளியே எதையும் சாப்பிடாதீங்கன்னு. அதான் உள்ளே இருக்கிறதைச் சாப்பிடுறேன்'




திகில் படம் பார்க்க
தியேட்டருக்கு
போனவனுக்கும்...
தன் திருமதிகூட
ஷாப்பிங் பண்ண
போனவனுக்கும்...
மனசு திக்திக்னு
அடிச்சுக்கும்






# காஞ்சனாவுக்கு ரஜினி பாராட்டு

காஞ்சனா 2 இல் ராகவா லோரன்ஸின் வித்தியாசமான தோற்றத்தைப் பார்த்து பாராட்டுத் தெரிவித்துள்ளார் ரஜினிகாந்த். ராகவா லோரன்ஸ் நடித்து இயக்கியுள்ள படம் காஞ்சனா 2. தமிழ், தெலுங்கு என இருமொழிகளில் உருவாகியுள்ள இந்தப் படம் இன்று உலகம் முழுக்க வெளியாக உள்ளது. சினிமா ரசிகர்களிடம் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்தப் படத்தில் லோரன்ஸ் 70 வயது கிழவியாக நடித்துள்ளார். அது தவிர இந்தப் படத்திலேயே 7 வயது சிறுவனாகவும் லோரன்ஸ் நடித்திருக்கிறார்.
அந்த வித்தியாசமான தோற்றத்தை பார்த்த சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், 'இப்படி ஒரு வித்தியாசமான கதாபாத்திரத்தில் நீ நடித்திருக்கிறாய்... உனக்கு அந்த ராகவேந்திர சுவாமிகளின் ஆசி எப்போதும் உண்டு. இந்தப் படம் நிச்சயம் வெற்றிபெறும்,' என்று பாராட்டினார். படம் தமிழ், தெலுங்கு, இரு மொழிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியாகிறது.



# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 40 | 30 | 40 | 20–30 | 40 | 40–50 |
| கத்தரி | 50 | 40 | 50–60 | 60 | 50–60 | 40 | 60 |
| கரட் | 120 | 100 | 100 | 100 | 80–100 | 120 | 200–220 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 30–40 | 60 | 50–60 |
| [illegible]ிற்றை | 80 | 70 | 50–70 | 80 | 90–100 | 80 | 60–80 |
| [illegible]ல் | 80 | 110 | 100 | 100 | 80–100 | 80 | 80–100 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 50 | 60 | 100–120 | – | 80–100 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 80 | 80–90 | 90 | 80–90 |
| சி.வெங்காயம் | 60 | 50–80 | 50–80 | 70 | 50–60 | 100 | 80–100 |
| பூசணி | 40 | 30 | 30 | 20 | 30–40 | 60 | 50–60 |
| தக்காளி | 40 | 60 | 40 | 40 | 40–50 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 30–50 | 50 | 50–60 | 40 | 80 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 25–30 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20–30 | 30 | 10–15 |
| பச்சை மிளகாய் | 40 | 50 | 40 | 40 | 40–50 | 60 | 80 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 | 30–40 | 40 | 60 |
| கோவா | 40 | 40 | 20 | 30 | 25–30 | 70 | 60 |
| வெண்டி | 60 | 40 | 60 | 50 | 80–100 | 40 | 50 |
| போஞ்சி | – | 110 | 100 | 100 | 140 | – | 170 |
| லீக்ஸ் | 140 | 220 | 200–240 | 120 | 180–200 | – | 220 |
| தேங்காய் | 30–60 | 30–48 | 60 | 50 | 50–60 | 60–70 | 50–60 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 80 | 75–80 | 90 | 90–100 |
| தேசிக்காய் | 200 | 120 | 170 | 120 | 130–140 | 80 | 160 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 20–30 | 20 | 20 |
| கறிமிளகாய் | 120 | 70 | 80 | 80 | 80–100 | 80 | 120–140 |
| இராசவள்ளி | 120 | 100 | 120 | 100 | 100–120 | 120 | 160–180 |

# ஆன்மிக சிந்தனை

*அறியும் அறிவு*




பட்டினத்தடிகள் வயல் வரம்பில் தலைக்குக் கீழ் கையை வைத்தபடி, படுத்திருந்தார். அவ்வழியால் கூலி வேலை செய்துவிட்டுப் போன பெண்களில் ஒருத்தி சொன்னாள், முற்றும் துறந்தவர் என்று சொல்லுகிறார்கள், தலை நோகாது கையைத் தலைக்குக் கீழ் வைத்திருக்கிறாரே என்றாள். தான் இன்னும் தன் உடம்பின் சுகத்தை மறக்கவில்லையே என்று அடிகள் வருந்தித் தன் மானசீகக் குருவாக வரித்துக் கொண்டார். அறிவு எங்கு, எப்போது, எவரிடம் இருந்து வருவதென்று தெரியாது.

## நாளை

**சித்திரை - 05**
**சனிக்கிழமை**
**18.04.2015**

திதி: அமாவாசை பி.இ..01.05 வரை
நட்சத்திரம்: ரேவதி மாலை.05.34 வரை
சுபநேரம்: 03.03–04.33 வரை
இராகுகாலம்: 09.03–10.33 வரை
அமாவாசை விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### கொடுத்தால் கிடைக்கும்

நல்வழியில் நடக்கும் ஒவ்வொருவருக்கும் கை கொடுக்கத் தயாராக இருங்கள். இந்த உலகில் தோன்றிய நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் ஒன்றை விட்டுச் செல்லுங்கள்.

துன்பம் அற்ற இன்பம், தீமை இல்லாத நன்மை இதெல்லாம் அடைய முடியாதவை ஆகும். மற்றவர்களை எதிர்பார்த்து நடப்பவன் சத்தியத்தை பின்பற்றி நடப்பது என்பது இயலாது.

அரிய செயல் எதுவானாலும் அதற்கு விலையாக பெரிய உழைப்பைக் கொடுக்க.வேண்டியிருக்கும்.

# இறாலின் நன்மைகள்

ஆட்டிறைச்சி,மாட்டு இறைச்சியை விட கடல் உணவுகளில் உடலுக்கு தேவையான சத்துக்கள் அதிகம் உள்ளன. கடல் உணவுகளில் ஒன்றான இறாலில் அதிகளவு புரதமும், விற்றமின் டியும் அடங்கியுள்ளது, இதில் கார்போஹைதரேட் இல்லாததால் உடல் எடையை குறைக்க விரும்புபவர்களுக்கு உதவியாக இருக்கும். இறாலில் ஹெபாரின் என்ற பொருள் அடங்கியுள்ளதால், கண் பார்வை சிதைவிலிருந்து காக்கும். முக்கியமாக கணினி முன் நீண்டநேரம் வேலை செய்பவர்களுக்குச் சிறந்தது.

இறாலில் உள்ள கனிமங்கள் முடி வளர்ச் சிக்கு உறுதுணையாக இருக்கும், தசைகள் வலுவடையும். இதில் புரதம், கல்சியம், பொட்டாசியம் மற்றும் பல வைட்டமின்கள் உள்ளதால் எலும்பு சிதைவுகள் ஏற்படாமல் பாது காக்கும். இறாலில் அயடீன் இருப்பதால் கர்ப்பிணி பெண் களுக்கு உகந்தது.

சருமம் வயதான தோற்றத்தை பெறுவதற்கு சூரிய ஒளி ஒரு முக்கிய காரணமாக விளங்கு கிறது. எந்தவித பாதுகாப்பும் இன்றி, சூரிய ஒளியில் சிறிது நேரம் சருமத்தை வெளிப்படுத் தினால் போதும், அதன் புறஊதா கதிர்வீச்சுக்கள், சருமத்தில் சுருக் கங்களை ஏற்படுத்தும். ஆனால் இறால்களை தினமும் அல்லது வாரம் ஒரு முறை எடுத்துக் கொண்டால், அவை சருமத்தை அழகாக்க பெரிதும் உதவும். இது ஒரு சக்தி வாய்ந்த நோய் நீக்கி யாக விளங்குகிறது. அதனால் சூரிய ஒளி மற்றும் புறஊதா கதிர் வீச்சுகளால் ஏற்படும் சரும சுருக் கங்கள் மற்றும் வயதான தோற்றத் துக்கு எதிராகச் செயற்படும்.

அதனால் இந்த பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள், ஒவ்வொரு வாரமும் இறாலை உட்கொள்ள வேண்டும்.

அப்படி செய்யும் போது இந்த பிரச்சனை மெதுவாக நீங்கும். இறாலில் புரதம், கல்சியம், பொட்டாசியம் மற்றும் பல விற்றமின்கள் உள்ளதால், எலும்புகள் சிதைவு ஏற்படாமல் அது பாதுகாக்கும். உணவில் போதிய விற்றமின் மற்றும் புரதம் இல்லையென்றால், எலும் பின் தரம், திணிவு, திடம் மற்றும் ஒட்டுமொத்த திணிவில் சிதைவு ஏற்படும். எனவே உணவில் தினமும் அல்லது வாரம் ஒரு முறை இறாலை சேர்த்துக் கொண்டால், எலும்பில் ஏற்பட்டுள்ள இந்த பிரச்சினை நீங்கி, அதற்கு மீண்டும் வலுச்சேர்க்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 5 | | | 4 | 1 | | |
| 2 | | | | | 6 | | 4 | |
| 6 | | 1 | | | | | 9 | 2 |
| 3 | 6 | | | 1 | | 2 | | |
| 5 | | | 2 | | 9 | | | 1 |
| | | 2 | | 3 | | | 7 | 8 |
| 8 | 5 | | | | | 3 | | 4 |
| | 2 | | 3 | | | | | 6 |
| | | 6 | 4 | | | 7 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங் கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும் தர்க்க ரீதி [illegible]யில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 3 | 4 | 8 | 2 | 7 | 6 | 9 |
| 7 | 2 | 4 | 9 | 6 | 5 | 8 | 3 | 1 |
| 6 | 8 | 9 | 1 | 3 | 7 | 2 | 4 | 5 |
| 8 | 9 | 6 | 3 | 1 | 4 | 5 | 2 | 7 |
| 2 | 3 | 7 | 8 | 5 | 6 | 9 | 1 | 4 |
| 1 | 4 | 5 | 7 | 2 | 9 | 3 | 8 | 6 |
| 9 | 6 | 1 | 2 | 7 | 3 | 4 | 5 | 8 |
| 4 | 5 | 2 | 6 | 9 | 8 | 1 | 7 | 3 |
| 3 | 7 | 8 | 5 | 4 | 1 | 6 | 9 | 2 |



# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 700 | 700 | 700 | 550 |
| நண்டு | 250 | 300 | 400 | 300 | 300 | 400 |
| கணவாய் | 500 | 550 | 600 | 600 | 600 | 450 |
| பாரை | 500 | 450 | 600 | 400 | 500 | 350 |
| சுறா | 500 | 500 | 600 | 650 | 500 | – |
| சீலா | 300 | 300 | 500 | 300 | 400 | 350 |
| விளை | 550 | 400 | 550 | 400 | 400 | 320 |
| முரல் | 250 | 300 | 500 | 350 | 400 | 250 |
| கும்பிளா | – | 200 | 550 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 450 | 600 | 500 | – | – | – |
| ஒரா | 350 | 300 | 400 | 250 | – | – |
| திரளி | 150 | 150 | 300 | 150 | 300 | – |
| நகரை | 150 | 200 | 400 | 300 | – | – |
| ஆடை | 100 | 100 | 200 | 100 | 100 | 100 |
| ஒட்டி | 150 | 200 | 250 | 200 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 200 | 200 | 150 |
| பாலை | 300 | 200 | 350 | 400 | 300 | – |
| வாளை | 100 | 100 | 250 | 250 | – | 250 |
| கொய் | 80 | 150 | 80 | 100 | 100 | – |
| மதனம் | 100 | 200 | 350 | 250 | – | 250 |

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வாய்ச் சவடால்களைக் களைந்து மக்கள் நலன் நாடுங்கள்............

இலங்கைக்கு அமைதி காக்கும் படையை அனுப்பியமை இந்தியாவின் வரலாற்றுத் தவறு. அது கொள்கை ரீதியான பெரும் தோல்வி.

இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்து தோல்வியுடன் திரும்பிச் சென்ற 25 ஆண்டுகளின் பின்னர் -- சுமார் மூன்று தசாப்தங்களின் பின்னர் -- பாரதத்தின் முன்னாள் இராணுவத் தளபதிகளில் ஒருவரான வி.கே.சிங் மேற்சொன்ன கருத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தி உள்ளார்.

அமைதி காக்கும் படையினர் என்று பெயரிட்டு அவர்களைக் கடமையில் ஈடுபடுத்துவதற்கு மேற்கொண்ட முடிவு, செயலளவில் பெரும் தோல்வியாகிப் போனதையும், அவர் ஊன்றிப் பதிந்துள்ளார்.

அதற்கும் மேலாக, அப்போதைய இந்திய அரசுக்கும், அப்போதைய இலங்கை அரசுக்கும் இடையிலான இணக்கப்பாடு சரியான முறையில் -- உகந்த வடிவத்தில் -- வகுக்கப்படவில்லை என்றும் வி.கே. சிங் இப்போது சாடியுள்ளார்.

இவர் முன்னாள் இராணுவத் தளபதி மட்டுமன்றி, தற்போது மத்திய அரசின் அமைச்சராகவும் உள்ளார். அவர் இந்திய அரசின் செயற்பாட்டை உயர்மட்டத் திலான பெரும் தவறான கொள்கை என்று மிகக் கடும்தொனியில் கண்டித்திருப்பது சுட்டிக் காட்ட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கையில் அந்த நாட்டு அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், இந்திய இராணுவம் (அமைதிப்படை) அங்கு அனுப்பப்பட்டமை அரசின் கொள்கை நீதியான தவறு என்பதை ஆணித்தரமாக அவர் இப்போது ஒப்புக் கொள்கிறார், அத்தோடு கண்டிக்கிறார்.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனைக் கைது செய்வதற்கு பல தடவைகள் வாய்ப்புக்கள் இருந்த போதிலும், உயர் மட்டத்திலிருந்து அவரைக் காப்பாற்றுமாறு பணிப்புரைகள் விடுக்கப்பட்டதாகவும், அதனால் அரச மட்டத்தில் அவரைக் கண்டுகொள்ளாமல் இருக்குமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாகவும் இப்போதைய அமைச்சர் உறுதிப்படுத்திக் கருத்து வெளியிட்டுள்ளார்.

எவர் எதனைக் கூறினாலும், செய்தாலும், போரினால் ஈடுசெய்ய முடியாத பல்வகை இழப்புக்களைச் சந்தித்தவர்கள், வடக்கு, கிழக்குத் தமிழர்களே.

ஒன்று மாறி மற்றொன்றாகி, பல தடவைகளில் பாதிக்கப்பட்டவர்கள், இதுவரை பாதிப்புற்றவர்கள் தமிழ் மக்களே. அதனை அழித்து எழுத முடியாது. 1956, 1977, 1983, 2009 என்று தொடர்ந்த பாதிப்புக்கள், சிறுநூலிடை மட்டத்திலேயே குறைந்து போயுள்ளது.

ஆயினும், அவற்றிலிருந்து தப்பி, பாதுகாப்பாக வாழ்வதற்கான உத்தரவாதம் இன்னமும் வெகுவெகு தூரத்திலேயே தெரிகிறது; உத்தரவாதமின்மை மேன்மேலும் தொடர்கிறது.

இன்னும் சில மாதங்களில் -- அடுத்த பொதுத் தேர்தல் வருமுன்னர் -- தீர்க்கமான முடிவு தேவை. வெறும் வாய்ச்சவடால்களைத் தூர எறிந்து, மக்கள் நலன்களை நாடி செயற்படுவதே அரசியல் தலைவர்களினதும், சமூகத் தலைவர்களினதும் இலக்காக இருக்க வேண்டும்.

மக்களின் தவிர்க்க முடியாத அரசியல் வாழ்வியல் தேவைகளுக்கு முதன்மைத்துவம் வழங்கியும் முன்னோட்டம் கொடுத்தும், செயற்படுவதே முதன்மைத் தேவை.

இதனை உள்ளார்த்தமாக உணர்ந்து செயற்படுவதற்குத் தமிழ் அரசியலாளர்கள் வேகமாக செயற்படாவிடின், மக்களின் எதிர்பார்ப்புக்கள் இருளடைந்து விடும்.....!



# குற்றவாளிகளுக்கு உதவுவதுதான் நல்லாட்சியின் தத்துவமா?

■ வந்தியத்தேவர்

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காது உள்ளக விசாரணை ஒன்றின்மூலம் அது குறித்த நடவடிக்கையை முன்னெடுக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் நீதியை மூடி மறைக்க முயலும் ஒன்றாகவே தென்படுகின்றது.

போரின்போது காணாமற்போனவர்கள், படையினராலும், அதிகாரத்தில் உள்ளவர்களாலும் கடத்திச் செல்லப்பட்ட பொதுமக்கள் குறித்த ஆணைக்குழுவின் விசாரணைகள் உரியமுறையில்இடம்பெறவில்லை என்பதும், சாட்சியமளிக்க முன்வந்த சிலர் படையினரால் அச்சுறுத்தப்பட்டதால் அதற்குப் பயந்து அனேகர் சாட்சியமளிக்க முன்வராததும் தெரிந்த விடயமே.

காணாமற்போனவர்கள் தொடர்பாக இடம்பெற்ற விசாரணைகளில் மக்கள் நம்பிக்கை இழந்திருக்கும் நிலையில், போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைப்பை வழங்க மறுக்கும் அரசு உள்ளக விசாரணை ஒன்றின் மூலம் அதனை மேற்கொள்ள விரும்புகின்றது.

இந்த நிலையில், போர்க்குற்றம் தொடர்பான விசாரணை சர்வதேச ரீதியாக இடம்பெறவேண்டும் என்பதே பாதிப்புக்குள்ளான மக்களின் விருப்பமாக உள்ளது. சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாகத்தான் தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் சம்பந்தப்பட்ட மக்களிடம் காணப்படுகிறது. இந்த நம்பிக்கையைச் சிதறடித்து போர்க்குற்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களைப் பாதுகாக்க, நல்லாட்சி தருவதாகச் சொல்லிக் கொண்டு பதவிக்கு வந்த மைத்திரி அரசு தனது அன்றைய வாக்குறுதிகளை மறந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா. விசாரணைகளுக்கு இலங்கை அரசு தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும். அதன் மூலமே தாங்கள் எதிர்பார்க்கும் நீதி கிடைக்கும் என்பது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் தமிழ் மக்களினதும் எதிர்பார்ப்பாகும். சர்வதேச விசாரணை என்பது பக்கச்சார்பின்றி நடைபெறக் கூடியது. உள்ளக விசாரணையில் இது சாத்தியமற்றது. பிரிட்டனுக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், இலங்கை அரசு ஐ.நா. விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவதுடன், அதற்கு மேலும் செல்லவேண்டும் என்று கேட்டிருந்தார். இல்ங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர் பில் சுயாதீனமான சர்வதேச விசாரணை தேவை என பிரிட்டிஷ் தொழில் கட்சித் தலைவர் மில்லி பான்ட்டும் தெரிவித்திருக்கிறார். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், போர்க்குற்றம் குறித்த சர்வதேச விசாரணைக்காகவும் தொழிற்கட்சி அழுத்தம் கொடுக்கும் என்றும் – அவர் வலியுறுத்தியுள்ளார். அவரும் ஜனாதிபதி மைத்திரியுடன் இது தொடர்பாகப் பேசியுள்ளார். குற்றச் செயல்களுக்கான தண்டனைகள் குறித்துஅமெரிக்கா இலங்கையுடன் பேச்சுக்களை ஏற்கனவே நடத்தியுள்ளது.



முன்னாள் ஜனாதிபதி உட்பட, முன்னாள்பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் படை அதிகாரிகள் பலர் போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ள நிலையில் அவர்களை உள்ளக விசாரணை ஒன்றின் மூலம் பாதுகாக்க அரசு முயற்சிப்பது தெரிகின்றது.

ஜனாதிபதி மைத்திரிக்கும், பிரதமர் ரணிலுக்கும் போர்க்குற்றவாளிகள் குறித்தும் சர்வதேச விசாரணையின் முடிவுகள் எவ்வாறு அமையும் என்பதும் தெரியாத விடயமல்ல. வேறு நாடுகளின் அரசுத் தலைவர்களுக்கு எதிராக இடம்பெற்ற போர்க்குற்ற விசாரணைகள் அவர்களுக்குத் தண்டனைகளை வழங்கியுள்ளன. இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை ஒன்றின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும், சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனையும் கிடைக்கும் என்பதாலேயே அவற்றில் இருந்து குற்றஞ் சுமத்தப் படுபவர்களைப் பாதுகாக்க இன்றைய அரசு சர்வதேச விசாரணைக்குப் பதிலாக உள்ளக விசாரணை ஒன்றை நடைமுறைப் படுத்த விரும்புகின்றது.

அப்பாவி மக்கள் தாம் தெரியாமல் இழைக்கும் தவறுகளுக்கு நான்கு ஐந்து வருடங்கள் வரை கூட தண்டனை அனுபவிக்கும் நிலைமை காணப்படுகின்றது. ஆனால் இனப் படுகொலையை மேற்கொண்டது மல்லாது நாட்டின் சொத்துக்களையே சூறையாடி குடும்பச் சொத்தாக மாற்றிக் கொண்டவர்களைப் பாதுகாத்து மீண்டும் அவர்கள் அரசியலில் நுழையவும் ஆதிக்கம் செலுத்தவும் ஓர் அரசே வழிவகுத்துக் கொடுப் பதாயின் அதை நல்லாட்சிக்கான அரசு என்று எப்படி எடுத்துக் கொள்ள முடியும்?

பிரிட்டனுக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கை அரசு ஐ.நா. விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவதுடன் அதற்கு மேலும் செல்லவேண்டும் என்று கேட்டிருந்தார்.

# தமிழ்மக்களைப் பாதித்துள்ள துயிலுமில்லங்களின் அழிப்பு

தமது நேசத்திற்குரியவர்கள் உயிர்நீத்த பின்னர் அவர்களை மீண்டும் மீண்டும் நினைவுகூருவதற்கான ஒரேயொரு இடமாகக் காணப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்கள் அழிக்கப்பட்டமை தமிழ் மக்களின் உளவியலை மிகவும் மோசமாகப் பாதித்துள்ளது. இராணுவத்தால் இவை நிர்மூலமாக்கப்பட்டமையால் தமிழ் மக்கள் ஆத்திரமடைந்துள்ளனர்.

எனது சகோதரன் இறந்துவிட்டார். ஆனால் புதைகுழியை அழிப்பதன் மூலம் அவருடைய நினைவுகளை ஒருபோதும் அழிக்க முடியாது. ஓர் இராணுவ முகாமின் கீழேயே எனது சகோதரனின் புதைக்கப்பட்ட உடல் உள்ளமை மிகவும் வலி நிறைந்த சம்பவமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த போராளிகள் உயிர்நீத்த பின்னர் அவர்கள் துயிலுமில்லங்களில் விதைக்கப்பட்டார்கள். இந்த இல்லங்களை மக்கள் அனைவரும் நேசித்தனர்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் புலிகளின் உயிர் நீத்த போராளிகள் விதைக்கப்பட்ட துயிலுமில்லங்கள் இலங்கை இராணுவத்தால் அழிக்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்ட முக்கிய துயிலுமில்லம் அழிக்கப்பட்டு தற்போது அதற்கு மேல் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

போர் முடிவடைவதற்கு முன்னர் புலிகள் அமைப்பிலிருந்து உயிர்நீத்தவர்களை அடக்கம் செய்வதற்கும் அவர்களை நினைவுகூருவதற்காகவும் 25 வரையான துயிலுமில்லங்கள் காணப்பட்டன, ஆனால் அவை எல்லாம் தற்போது எங்கே?

இவை புல்டோசர்களால் துடைத்தழிக்கப்பட்டு அந்த நிலங்களில் இராணுவ முகாம்கள் மற்றும் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமைக்கான நோக்கம் என்ன?

தனிநாடு கோரிப் போராடியவர்கள் நினைவு கூரப்படக் கூடாது என்பதற்காகவும், துயிலுமில்லங்கள் அமைக்கப்பட்ட சில நிலங்கள் அரசுக்குச் சொந்தமானவை என்பதாலுமே தாங்கள் இவற்றை அழித்ததாக பாதுகாப்புப் படையினர் கூறுகின்றனர்.

1980களின் பிற்பகுதியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து உயிர்நீத்த வீரர்கள் துயிலுமில்லங்களில் அடக்கம் செய்யப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 27 ஆம் திகதியன்று அன்று மாவீரர் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டு வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்களால் நினைவுகூரப் பட்டனர்.

அன்றைய தினம் தமிழ் மக்கள் துயிலுமில்லங்களுக்குச் சென்று அன்றைய நாளை எவ்வாறு அனுஷ்டித்தனர் என்பதற்கு சாட்சியமாக இருந்த இந்த இல்லங்கள் இன்று அழிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இராணுவத்தை ஒரு சாதாரண இராணுவக் குழுவாகக் கருதி போரில் உயிர்நீத்த தமது உறுப்பினர்களுக்காகக் கல்லறைகளை உருவாக்கினார்கள்.


மேற்குலக நாடுகளில் பாரம்பரியமாகக் காணப்படும் போர் வீரர்களுக்காக கட்டப்பட்ட கல்லறைகள் போன்று தமிழீழ விடுதலைப் புலிகளும் மிகவும் அழகாக, ஒரே வடிவத்தில் துயிலுமில்லங்களை அமைத்திருந்தனர்.

பளிங்குக் கற்கள், சிமெந்துக் கற்கள் மற்றும் கருங்கற்களால் கட்டப்பட்ட இக்கல்லறைகளில் மிக வரிசையாகவும் நேர்த்தியாகவும் குறியீடுகள் இடப்பட்டு, விவரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. சில கல்லறைகளில் இறந்தவர்களின் படங்கள் கண்ணாடிகளால் உறையிடப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

இந்துக்கள் இறந்தவர்களின் உடலங்களைத் தகனம் செய்வது வழக்கமான ஒன்றான போதிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தனது அமைப்பிலிருந்து மரணித்த இந்துக்களாயினும், கத்தோலிக்கர்களாயினும் அல்லது எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி, அவர்களது உடல்களை துயிலுமில்லங்களில் புதைத்தனர்.

> தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களின் உடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட தீருவில் துயிலுமில்லம், தற்போது விளையாட்டு மைதானமாகப் பயன் படுத்தப்படுகிறது.
> இந்த விளையாட்டு மைதானத்தின் மூலையில் கல்லறைகளின் இடிபாட்டு எச் சங்கள் உடைந்த சிலைகள் போன்றன காணப்படுகின்றன.






இவர்கள் அனைவரும் போரில் இறந்ததால் இவர்களது உடலங்களை கல்லறைகளில் அடக்கம் செய்து மரியாதை செய்வது தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித்த அடையாளமாகக் காணப்பட்டது.

போரின் போது தமது பிள்ளைகள் காணாமற் போகவில்லை என்கின்ற நிச்சயத்தை இவ்வாறான கல்லறைகள் கொடுத்ததாகவும் இதனால் பெற்றோர்களும் உறவினர்களும் நம்பிக்கை அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

தமது பிள்ளைகள் இறந்து விட்டனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கும், தமது வேதனைகள் மற்றும் வலிகளைக் கொட்டித் தீர்ப்பதற்குமான ஒரு இடமாகப் பெற்றோர்கள் துயிலுமில்லங்களைக் கருதினர்.

ஒவ்வொரு ஆண்டும் புலிகள் அமைப்பிலிருந்து போரிட்டு உயிர் நீத்தவர்கள் குறித்த ஓர் தினத்தில் நினைவுகூரப்பட்டனர். அதாவது நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினமாகப் பிர கடனப்படுத்தப்பட்டது.

அன்றைய தினம் போராடி மரணித்த தமது பிள்ளைகளை நினைவுகூருவதற்காகப் பெற்றோர்களும் உறவினர்களும் துயிலுமில்லங்களை நோக்கிச் செல்வர். இவர்கள் துயிலுமில்லங்களில் ஒன்றுகூடுவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளிலிருந்து முதன் முதலாக லெப்ரினன்ட் சங்கர் (சத்தியநாதன் அல்லது சுரேஸ்) 1982 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதியன்று உயிர்நீத்திருந்தார். இவர் உயிர் நீத்த நவம்பர் 27 மாவீரர் நாளாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.

அன்றைய தினம் அனைத்துத் துயிலுமில்லங்களும் மிகவும் அழகாக பல்வேறு விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஒலிபெருக்கிகளில் புலிகளின் சோகப் பாடல்கள் ஒலிபரப்பப்படும்.

மலர்மாலைகள், நெய் விளக்குகள், மெழுகு வர்த்திகள், கர்ப்பூரங்கள், ஊதுபத்திகள் போன்றவற்றைக் கொண்டு தமது அன்புக்குரியவர்களை ஆராதிப்பதற்காக வருகை தரும் பெற்றோரை, உறவினரை வரவேற்பதற்காக துயிலுமில்லங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும்.

மாவீரர் நாள்கள் ஏழு நாள்கள் அனுட்டிக்கப்படும். இவ்வேழு நாள்களும் பாரம்பரிய எண்ணெய் விளக்குகள் ஏற்றப்படும். இந்த நாள்கள் நவம்பர் 27 அன்று முடிவடையும்.

இவ்வாறான துயிலுமில்லங்கள் இருந்த இடத்தில் தாவரவியல் பூங்காக்களை அமைக்க முடியும். ஆனால் இங்கே இராணுவ முகாம் அமைக்கப்படுவதற்கான காரணம் என்ன? இந்நிலையில் போர் முடிவடைந்து விட்டது எனக் கருதலாமா எனவும் இவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

கோப்பாயிலிருந்த துயிலுமில்லம் தனது மகனது நினைவுகளை மீட்டியதாக கோப்பாயைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்த நான்கு மிகப் பெரிய துயிலுமில்லங்களுள் கோப்பாய் துயிலுமில்லமானது 40 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட மிகப் பெரிய துயிலுமில்லமாகவும் இருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களின் உடலங்கள் விதைக்கப்பட்ட செய்யப் பட்ட தீருவில் துயிலுமில்லமானது தற்போது விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தப் படுகிறது. இந்த விளையாட்டு மைதானத்தின் மூலையில் கல்லறைகளின் இடிபாட்டு எச் சங்கள் உடைந்த சிலைகள் போன்றன காணப் படுகின்றன.

தீருவில் துயிலுமில்லத்தில் காணப்பட்ட எச்சங்களை ஒளிப்பதிவு செய்தபோது எம்மைத் தாண்டிச் சென்ற இளம் மனிதர் ஒருவர் ‘இவை வெறும் கற்கள். கவலைப்பட வேண்டாம். இவர்கள் எமது இதயங்களில் வாழ்கிறார்கள்’ எனக் கூறினார்.

விடுதலைப் புலிகளின் துயிலுமில்லங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் தொடர்பாக எந்தவொரு ஊடகங்களும் முதன்மைப்படுத்தவில்லை. யாழ்ப்பாணம், தென்மராட்சி, கொடிகாமத்தில் அமைக்கப்பட்டிருந்த துயிலுமில்லம் அழிக்கப்பட்டு தற்போது அங்கே இலங்கை இராணுவத்தின் மிகப்பெரிய முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி, உடுப்பிட்டியிலிருந்த எள்ளங்குளம் துயிலுமில்லமானது தற்போது இலங்கை இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கோப்பாயில் அமைக்கப்பட்ட புலிகளின் துயிலுமில்லம் 1995ல் புல்டோசரால் நிர்மூலமாக்கப்பட்டது. இதேபோன்று வேலணை, சாட்டித் துயிலுமில்லம் 1995 இலும், தென்மராட்சி, கொடிகாமம் துயிலுமில்லம் 1996 இலும், வடமராட்சி, எள்ளங்குளம் துயிலுமில்லம் 1996 இலும் அழிக்கப்பட்டன.

இக்கல்லறைகள் மீண்டும் 2002 பெப்ரவரியில் போர் நிறுத்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் மீள்வடிவமைக்கப்பட்டன. போரில் மரணித்த கிட்டத்தட்ட 4000 புலி உறுப்பினர்களின் உடலங்கள் விசுவமடுவில் புதைக்கப்பட்டன. கடந்த கால வன்முறைகள் மறக்கப்பட வேண்டும் என்பதற்காகவே புலிகள் அமைப்பின் கல்லறைகளை அழிப்பதாக இராணுவத்தினர் கூறுகின்றனர்.

எனினும், தமிழ் மக்களால் தமது ஆதங்கங்களை அச்சத்தின் காரணமாக முற்றுமுழுதாக வெளிப்படுத்த முடியவில்லை.

இருப்பினும் பெரும்பான்மை சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை அரசானது தமிழ் மக்களின் இதயங்களை வென்றுள்ளதா? என வினவப்படுகிறது. இது இன்னமும் நடைபெறவில்லை என தென்னாபிரிக்காவில் நிலவிய நிறவெறி அரசுக்கு எதிராகப்போராடியவரும், தற்போது மீளிணக்க முயற்சியில் அரசுக்கு ஆலோசகராகவும் செயற்படும் கலாநிதி ஐவர் ஜென்கின்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

*சிலோன் ருடே நாளிதழில்*
*சுலோசனா ராமையா மோகன்*

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் இரத்தினபூபதி பரநிருபசிங்கம்
(புங்குடுதீவு)



பிறப்பு 25.04.1922
இறப்பு 18.03.2015

கடந்த 18.03.2015 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று வெள்ளிக்கிழமை எம் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். இந் நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

56/7, சம்பியன் லேன்,
கொக்குவில். (58855)(4.3.6)

குடும்பத்தினர்.


# சுன்னாகம் குடி தண்ணீர் பிரச்சினையை ஆராய மாகாண சபைக்கு ஆர்வமில்லை

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப், 17

வடமாகாண சபை இது வரையில் சுன்னாகம் குடிதண்ணீர் பிரச்சினை தொடர் பில் தீவிர கவனம் எடுக்க வில்லை. அத்துடன் இது தொடர்பில் விசாரித்தறிவதற்கும் விருப் பமின்மையைக் காட்டி வந்துள் ளது என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளதாவது;

இதுதொடர்பில் அந்தக்கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு:

'2014ஆம் ஆண்டு பிற்பகுதியில் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்துக்கு அருகில் உள்ள பல கிணறுகளில் காணப்பட்ட எண்ணெய்ப்படிமம் தற்போது அவ்விடத்தில் இருந்து பரவலடைகின்றது. இதுவரை கண்டறியப்பட்ட உண்மைகள் குறித்த படிமம் சுன்னாகம் மின் நிலை யத்தில் இருந்துதான் ஆரம்பித் துள்ளது என்பதைச் சுட்டுகின்றது. குடி தண்ணீர் மற்றும் அன்றாடத் தேவைகளுக்காக கிணற்று நீரிலேயே தங்கியுள்ள மக்க ளின் சுகாதாரம், பாதுகாப்பு ஆகியவை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தண்ணீர்த் தேவையை நிறைவுசெய்யும் பொருட்டு தேவையான நடவ டிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது உடனடித் தேவை யாகும்.

நீர் மாசடைந்ததன் மூலம் ஏற் பட்ட பாதிப்பின் அளவு மற்றும் நீர் மாசடைந்து செல்லும் ஆபத்து ஆகியவை தொடர்பில் மதிப்பீடு செய்யவேண்டும். இந்தப் பிரச்சினையின் அடி வேரைக் கண்டறிதல் வேண் டும். அதன் மூலம் மீண்டும் இவ் வாறான பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். பாதிப்புக்குக் காரணமாக இருந்தவர்களை அடையாளம் கண்டு அவர்களை பொறுப்புக் கூற வைக்க வேண்டும்.

வட மாகாண சபை இதுவரை யில் குறித்த பிரச்சினை தொடர்பில் தீவிர கவனம் எடுக்கவில்லை. அத்துடன் இது தொடர்பில் விசாரித்து அறிவதற்கும் விருப்பமின்மையைக் காட்டி வந்துள்ளது. இந்த நிலையில் தண்ணீர்ப் பிரச்சினை தொடர் பில் நிபுணத்துவம் கொண்டவர்கள் அடங்கிய சுயாதீன விசாரணைக்குழுவொன்று அமைக்கப் படவேண்டியது அவசியம். குறித்த ஆணைக்குழுவுக்கு எமது கட்சி முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும்– என்றுள்ளது. (வ–10)


வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி நவமணி இராமச்சந்திரன்



தோற்றம் 18.11.1954
மறைவு 18.03.2015

கடந்த 18.03.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி நவமணி இராமச்சந்திரன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவையொட்டி இன்று (17.04.2015) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்]

எமது குடும்பத்தலைவியின் மறைவுச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும், இணையத்தளம் மூலமும் ஆறுதல் தெரிவித்தோர், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மடத்தடி வீதி,
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

கணவர், இராமச்சந்திரன்,
பிள்ளைகள், சீலன்,
காந்தன், ரஞ்சன.

(சி/16947)(4.3.6)


# நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி,ஏப்.17

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைக்கான நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

சங்காத்தானை மீனாட்சி அம் பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் ஆ.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக சு.துரைராஜ சிங்கம், உப தலைவராக இ.ஜெயபாலன், செயலாளராக சி.வல்லிபுரநாதன்,உதவிச் செயலாளராக வ.இராஜ்குமார், பொருளாளராக த.நடேஸ்வரன், நிர்வாக சபை உறுப்பினர்களாக து.வரதன், ம.தனுஜன், ச.சொரூபநாதன், நா.நந்தபாலன், நா.லக்ஸி, ஸ்ரீ.[illegible]வீந்திரன், இ.சண்முகலிங்கம், இ.விஜிந்தன், திருமதி.நடேசலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ-9)

★★★

வவுனியா, ஏப்.17

முல்லைத்தீவு மாவட்ட கரைத் துறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அரச சேவை ஓய்வு ஓய்வுதியா நம்பிக்கை நிதிய ஆரம்பக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது

இந்தக்கூட்டம் வவுனியா மாவட்ட அரச சேவை ஓய்வு[illegible]தியர் நம்பிக்கை நிதிய[illegible]லை வரும், முல்லைத்தீவு மாவட்ட அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அமைப்பாளருமாகிய எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடை பெற்றது. இதன் போது நிர்வாகக்குழு தெரிவு செய்யப் பட்டது:

தலைவராக மு.குகதாசன், செயலாளராக மு.உதயசங்கர், பொருளாளராக மி.ஞானேந்திரா, உப தலைவராக அ.செல் வரத்தினம், உப செயலாளராக க.இராஜசிங்கம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக க.முருகுப்பிள்ளை, பொ.சேதுபதி, கணக்காய்வாளராக க.மார்க் கண்டு ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். (வ–402)


கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர் இ.இராஜசூரியா அவர்களின் புதல்வி
செல்வி மிதுசுஜி இராஜசூரியா
அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

(58888)(4.3.7)



வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 02.08.1968
இறப்பு 19.03.2015

மகாலிங்கம் கமலராஜ்

கடந்த 19.03.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (16.04.2015) வியாழக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன.

நாளை (18.04.2015) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைக்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கண்ணகி அம்மன் கோயிலடி,
ஏழாலை.

மனைவி, பிள்ளைகள்.



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அராலியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் தற்பொழுது சித்தன்கேணியில் வசித்துவந்தவருமான
விக்னேஸ்வரன் சஞ்சீவன் (கண்ணன்)
(HNB Assurance Group Leader)

தோற்றம் 05.11.1982
மறைவு 18.03.2015

எமது குடும்ப குத்துவிளக்கு - அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

"சிந்துபவனம்"
சிவன்கோயில் வீதி,
சித்தன்கேணி.

(58861)(7)


# Honor அறிமுகம் செய்யும் புதிய ஸ்மார்ட்போன்

சம்சுங் மற்றும் அப்பிள் நிறுவனங்களின் ஸ்மார்ட் கைபேசிக்கு இணையான தொழில்நுட்பத்தைக் கொண்ட புத்தம் புதிய ஸ்மாட் கைபேசி ஒன்றை Honor நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.

Honor 4X எனும் இந்தக்கைபேசியானது 5.5 அங்குல அளவு, 1280 X 720 Pixel Resolution பட அளவுடைய தொடுதிரையைக் கொண்டுள்ள துடன், 1.2GHz வேகத்தில் செயற்படக்கூடிய Octa Core Processor, பிரதான நினைவகமாக 2ஜிபி நினைவகம், 32ஜிபி சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 5 மெகாபிக்சல்களை உடைய காணொலி அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

மேலும் அன்ரோயிட் 4.4 கிற்கற் இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாகக் காணப்படும் இந்தக் கைபேசியின் விலையானது 149.99 டொலர்கள் ஆகும்.



# குழந்தைகளின் மன அழுத்தங்களுக்கு நிவாரணமாகும் வீடியோ கேம்



வீடியோ கேம் விளையாடுவதால் பல்வேறு எதிர்விளைவுகள் காணப்படுவதாகவே பலரும் கருதுகின்றனர். ஆனால் அதிலும் சிறுவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கும் ஆற்றல் இருப்பதாக புதிய ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியிலுள்ள Freiburg பல்கலைக்கழகத்தின் ஆய்வாளரான Daniel Bormann என்பவர் இந்த ஆய்வு முடிவினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆய்வுக்கு இரண்டு வகையான வீடியோ கேம்களையும், இரு வகையான குழுக்களையும் பயன்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு குழுவினரும் 20 நிமிடங்கள் வரை கேம்களை விளையாடிய பின்னர் அவர்களது மனநிலை பற்றி ஆராயப்பட்டுள்ளது. இதன்போது மன அழுத்தத்தை எதிர்நோக்கிய குழந்தைகள் அதிலிருந்து விடுபட்டு புத்துணர்ச்சியுடன் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

# உங்கள் கணக்குகளை வேவு பார்க்கும் பேஸ்புக்

உலகில் அதிகளவானவர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் சமூகவலைத்தளமானது வேவு பார்ப்பதில் ஈடுபட்டுள்ளதாக புதிய அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. இதில் தமது சமூகவலைத்தளத்தில் கணக்கு வைத்திருந்தும் அதனைப் பயன்படுத்தாதவர்களையும், இந்தச்சேவையைப் பயன்படுத்தாதவர்களையும் வேவு பார்ப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



இந்த வேவு பார்ப்பானது தமது வலைத் தளத்தைப் பயன்படுத்தாமைக்கான காரணத்தைக் கண்டறிந்து அவர்களையும் உள்வாங்குவதற்காக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் இது ஐரோப்பிய சட்ட விதிகளை மீறும் செயல் என்பது குறிப்பிடத்தக்கது.

# மலிவான விலையில் உடல் ஆரோக்கியத்தை பேணும் கைப்பட்டி



ஸ்மார்ட் கைபேசிகள் மற்றும் ஸ்மார்ட் கடிகாரங்களைப் போன்று உடல் ஆரோக்கியத்தைக் கண்காணிக்க ஸ்மார்ட் கைப்பட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளமை அறிந்ததே. இந்தநிலையில் தற்போது குறைந்த விலையில் புதிய கைப்பட்டி ஒன்றினை Wowl Tech நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

அகன்ற ஓ.எல்.ஈ.டி. திரையைக் கொண்ட இந்தக் கைப்பட்டியில் பேஸ்புக், டுவிட்டர், வாட்ஸ் அப் போன்ற சமூக வலைத்தளங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் விலையானது 55 டொலர்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

---

உதயன் 30 ஆண்டு

# மாணவர் கலை இலக்கியப் போட்டிகள் - 2015

## ஓவியப் போட்டி – B
## (தரம் 6-9) பிரிவின்

## மாவட்ட மட்ட பெறுபேறுகள்

### யாழ்ப்பாண மாவட்டம்

1 ஆம் இடம் ரா.தர்சிகன், யா/ ஏழாலை ம.வி
2 ஆம் இடம்- ப.மனோஜ்காந், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
3 ஆம் இடம்- ச.கலக்ஷன்.யா/ தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்.

- ❖ மாதங்கி குபேரமூர்த்தி, யா/ இணுவில் இந்துக் கல்லூரி
- ❖ தயாபரன் அனுஜன், யா/ மத்திய கல்லூரி
- ❖ த.அபிஷாக். யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாசாலை.
- ❖ விஜயகுலம் சரணா, யா/ இராமநாதன் கல்லூரி,
- ❖ ராஜன் பெர்னாண்டோ ரம்யா, யா/ இராமநாதன் கல்லூரி,
- ❖ நகுலேஸ்வரன் மதுப்பிரியா, யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி,
- ❖ எழிலோவியா நிக்ஸன் ரஞ்சித்குமார், யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
- ❖ முரளிதரன் நிதுஜன், யா/ இந்துக் கல்லூரி
- ❖ சி.பிரதீபன், யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி,
- ❖ கி.கௌசாந்த், யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி
- ❖ சி.டசிந்தன்யா/ ஏழாலை ம.வி
- ❖ துலக்சினி கோகிலன், யா/ ஏழாலை ம.வி
- ❖ கி.துரைரட்ணம், யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயம்.

### கிளிநொச்சி மாவட்டம்

1 ஆம் இடம் - கங்கேஸ்வரன் டர்ஜிகா, கிளி/ கிளி.மத்திய கல்லூரி
2 ஆம் இடம் - நவரத்தினம் நாவரசி, கிளி/ முருகானந்தாக் கல்லூரி
3 ஆம் இடம் - க.சிந்தினா, கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்

ச் சான்றிதழ் பெறுவோர்.:-

- ❖ சிறிகாந்தன் தியானுகா, கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்
- ❖ ந.கஜதீபன், கிளி/ வினாசியோடை அ.த.க.பாடசாலை
- ❖ அ.கருணன்,கிளி/ முழங்காவில் ம.வி

### முல்லைத்தீவு மாவட்டம்

1 ஆம் இடம் வி.அபிவர்ணா, மு/ உடையார்கட்டு ம.வி

### மன்னார் மாவட்டம்

1 ஆம் இடம் ஆ.ஜொசான் குரூஷ், மன்/ தலைமன்னார் பியர் அத.க.பாடசாலை

### வவுனியா மாவட்டம்

**1 ஆம் இடம்:** வா.தருண், வவு/ நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்.
2 ஆம் இடம்: மு.சாகித்யன் வவு/ தமிழ் மகா வித்தியாலயம்.

இவர்களில் முதலாமிடம் ரூபா 3,000.00 இரண்டாம் இடம் ரூபா 2,000.00 மூன்றாம் இடம் ரூபா1,000.00 பரிசுபெறுபவர்கள் ஆவர்.
இவர்களுக்கான பரிசளிப்பு விழா நிகழ்வு இடம், காலம், உரிய முறையில் அறிவிக்கப்படும்.
**இவர்களில்** மாகாண மட்டத்துப் பரிசு முதலாமிடம் ரூபா 7,000.00 இரண்டாம் இடம் ரூபா 5,000.00, மூன்றாம் இடம் ரூபா 4,000.00 பெறுபவர்கள் தேர்வு செயலொழுங்கு இடம்பெற்று வருகின்றது. **மாவட்ட மட்டத்தில் தேர்வு செய்யப்பட்டவர்களில்** மாகாண மட்டப் பரிசு பெறுவோர் விவரம் பரிசளிப்பு தினத்தன்று நடுவர்களால் தெரிவிக்கப்பட்டு, அன்றைய தினமே பரிசுத் தொகை வழங்கப்படும் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அனுசரணை: PEOPLE'S BANK

# சியாரா லியோன் நாட்டில் பாடசாலைகள் திறப்பு

## 9 மாதங்கள் எபோலாவால் மூடப்பட்டிருந்தன



பிரீடவுன்,ஏப்.17
மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா நோய் தாக்கி ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர். அதில் சியாராலோன் நாடும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு எபோலாவால் பாதிப்புற்று 3 ஆயிரத்து 831 பேர் உயிரிழந்துள்ளனர். நோயின் தாக்கம் காரணமாக 9 மாதங்களுக்கு முன்னர் அனைத்துப் பாடசாலைகளும் மூடப்பட்டன. அந்த நாட்டில் 18 லட்சம் சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வது நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது எபோலா நோயின் தாக்கம் குறைந்துள்ளது. அதனையடுத்து பாடசாலைகளும் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது அனைத்துப் பாடசாலைகளும் திறக்கப்பட்டுள்ளன. ஆனாலும் 10 சதவீத மாணவர்கள் மட்டுமே பாடசாலைகளுக்குச் சென்றுள்ளனர். பாடசாலைகளுக்குச் செல்ல முன்னர் மாணவர்களுக்கு நுழைவு வாயிலிலேயே தினமும் மருத்துவ சோதனைகளும் நடத்தப்படுகின்றன. இதற்காக 9 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அனைவரும் முக கவசம் அணிய வேண்டும், கைகளை அடிக்கடி சுத்தப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பள்ளி வகுப்பறையில் மாணவர்களை ஒருவருக்கொருவர் இடைவெளி விட்டு அமர வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (14)

# ஈராக் தலைநகருக்கு மீண்டும் ஆபத்து

பாக்தாத்,ஏப்.17
ஐ.எஸ். தீவிரவாதிகள் சிரியா மற்றும் ஈராக் நாட்டில் பல பகுதிகளைக் கைப்பற்றியுள்ளனர். ஈராக்கில் பெரிய நகரங்களில் ஒன்றான திக்ரித் உட்பட பல இடங்கள் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்தது.



திக்ரித், தலைநகரம் பாக்தாத்துக்கு அருகில் உள்ள இடமாகும். அதைக் கைப்பற்றியதை அடுத்து பாக்தாத்துக்குள் நுழையும் ஆபத்து இருந்தது. எனவே திக்ரித்தில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகளை விரட்ட இராணுவம் தீவிர தாக்குதல்களை நடத்தின. அதில் இராணுவத்துக்கு வெற்றி ஏற்பட்டது. திக்ரித்தில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகள் முற்றிலும் விரட்டப்பட்டனர். ஆனால் பாக்தாத் அருகில் உள்ள ரமாதி நகருக்குள் தற்போது ஐ.எஸ். தீவிரவாதிகள் புகுந்துள்ளனர். அந்த நகரம் பாக்தாத்தில் இருந்து 113 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது.
3 பிரிவாக ஐ.எஸ். தீவிரவாதிகள் அந்த நகருக்குள் புகுந்துள்ளனர். அவர்களை விரட்டுவதற்கு ஈராக் இராணுவம் கடுமையாகப் போரிட்டு வருகிறது. எந்த நேரத்திலும் முழு நகரமும் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடும் என்று, எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நகரம் வீழ்ந்தால் அடுத்து தலைநகரம் பாக்தாத்தை நோக்கி அவர்கள் முன்னேறி வருவார்கள். அதனைத் தடுக்க ஈராக் அரசு தீவிர நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது. ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்க இராணுவம் தங்களது தாக்குதலை மேலும் அதிகரிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (14)

# பெண்களைப் பாலியல் அடிமையாக்கி அட்டூழியம்



நைஜீரியாவில் 2000 இற்கும் மேற்பட்ட பெண்களை போகோ ஹராம் தீவிரவாதிகள் பாலியல் அடிமைகளாக்கியுள்ளதாக சர்வதேச மன்னிப்பு சபை அதிர்ச்சி தகவல்களை வெளியிட்டுள்ளது.
கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நைஜீரியாவின் சிபோக் நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் நுழைந்த போகோ ஹராம் தீவிரவாதிகள், பரீட்சை எழுதிக் கொண்டிருந்த 276 மாணவிகளைக் கடத்தி சென்றுள்ளனர்.
மாணவிகள் கடத்தப்பட்டு ஒரு வருடம் ஆன நிலையில் அவர்களைப் பற்றி இன்னும் எந்தவித தகவல்களும் இல்லை. தற்போது அவர்களை மீட்கும் பணியில் நைஜீரிய இராணுவம் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் கடத்திச் செல்லபட்ட சிறுமிகள் பாலியல் அடிமைகளாகவும், தற்கொலை படைத் தீவிரவாதிகளாகவும் மாற்றப்படுவதாகச் சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.
இதுவரை தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகள் 2 ஆயிரத்துக்கும் மேல் இருப்பார்கள் என தெரிவிக்கப்பட்ட அந்த அறிக்கையில், அதிர்ச்சி அளிக்கும் புகைப்படங்கள் மற்றும் நைஜீரியா முழுவதும் தீவிரவாதிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள்உள்ளிட்டவைசாட்சியாகக்காட்டபட்டுள்ளது. (14)

# சவூதியில் பணிப் பெண் தலைத் துண்டித்துக் கொலை

ரியாத்,ஏப்.17
சவூதியில் எஜமானியைக் கொன்றதாக பெண் ஒருவர் அளித்த வாக்குமூலத்தையடுத்து அவருக்குத் தலைத் துண்டித்து சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.
சவூதியில் கொலை, கற்பழிப்பு, போதைப்பொருள் கடத்தல், விபச்சாரம் உள்ளிட்ட குற்றங்களுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்படுகிறது. இந்த நிலையில் இந்தோனேஷியப் பெண்ணான சிட்டி ஜைனப் என்ற பணிப்பெண், தனது எஜமானியைக் கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் கொலை செய்ததாக ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் தனது எஜமானி தன்னை மிகவும் மோசமாக நடத்தியதால் அவரை ஆத்திரத்தில் கத்தியால் குத்திக் கொன்று விட்டதாக வாக்குமூலம் அளித்திருந்தார். ஆனால் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவராக இருந்ததால் அவரை மன்னித்து விடுதலை செய்ய வேண்டும் என சர்வதேச பொது மன்னிப்பு சபை வேண்டுகோள் விடுத்திருந்தது.
எனினும் அந்த வேண்டுகோளை ஏற்காது சவூதி அரசு நேற்று முன்தினம் மதினா நகரில் தலையைத் துண்டித்து அவருக்கு சாவுத் தண்டனையை நிறைவேற்றியுள்ளது. இதற்கு உலகின் பல நாடுகளில் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அவரையும் சேர்த்து இந்த வருடத்தில் சவூதியில் 35 பேருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)



# பாகிஸ்தானில் ஏவுகணை சோதனை

இஸ்லாமாபாத்,ஏப்.17
சுமார் ஆயிரத்து 300 கி.மீ. தூரம் வரை சென்று தாக்கும் சக்தி கொண்ட ஏவுகணையை, பாகிஸ்தான் நேற்று முன்தினம் சோதனை செய்துள்ளது. அதன் மூலம், இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களை தாக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் இராணுவம் தனது வலிமையை அதிகரிக்கும் விதமாக, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவற்றில் முக்கியமாக, நீண்ட தூரத்துக்கு சென்று தாக்குதல் நடத்தக் கூடிய ஏவுகணைகளை தயாரிப்பதில், அந்த நாட்டின் இராணுவம் மும்முரம் காட்டி வருகிறது. (14)


எரிபொருள் சிக்கனத்தின் முதல்வன்!

DIVI SHAKTHI POWERTRAC®



- என்ஜின் மூலம் அதிகமான சுழற்சி வலு கிடைப்பதால் அதிக பலத்துடன் இழுத்துச் செல்லும் ஆற்றல்.
- சிறப்பான டீசல் சேமிப்பு
- அதி சிறப்புவாய்ந்த ஃபோர்ட் பரம்பரையின் சொத்து.

2 வருட உத்தரவாதம்

துரித அழைப்பு : தீபால் 071 0 321 447

DIVI SHAKTHI POWERTRAC
பணம் விளையும் இயந்திரம்

DIVI SHAKTHI

16, துனாதுவ வீதி, நீர்கொழும்பு. தொ.பே: 031 1875714. பெக்ஸ்: 031 2226365
ஈ—மெயில்: agrocon2@sltnet.lk



## அகழ்வாராய்ச்சியின் போது மனித எலும்புக்கூடுகள் மீட்பு

சார்,ஏப்.17
அரியானா மாநிலம் சார் நகரில் இருந்து 60 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ராக்கி கார்கி என்ற கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில், பண்டைய காலத்தில் ஹரப்பா நாகரிகம் சிறந்து விளங்கியதாக கருதப்படுகிறது.
அதனைத் தொடர்ந்து அது தொடர்பான விவரங்களை அறிவதற்காக அரியானா மாநிலத்தின் தொல்லியல் துறையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அந்தப் பகுதியில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.
அண்மையில் அங்கு அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டபோது, 4 மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 2 ஆண்களின் எலும்புக்கூடுகளும், ஒரு பெண் எலும்புக்கூடும், குழந்தையின் எலும்புக்கூடு ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டன. அந்த பகுதியில் அகழ்வாராய்ச்சியின் போது மனித எலும்புக்கூடுகள் கிடைத்தமை இதுவே முதல் தடவை ஆகும்.
4 எலும்புக்கூடுகளும் மரபணு சோதனைக்காக தற்போது ஆய்வு கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (14)

# தீவிரவாதத்துக்கு எதிராகப் போரிட ஐ.நா.சபையில் தீர்மானம் தேவை

## பிரதமர் மோடி வலியுறுத்தல்



ஒட்டாவா,ஏப்.17
தீவிரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் ஒன்று பட்டுப் போரிட ஐ.நா.சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.
பிரான்ஸ், ஜேர்மன் ஆகிய நாடுகளின் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் கனடா சென்றுள்ளார்.
கனடாவின் பிரதமர் ஸ்டீபன் ஹார்பருடன் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு நடத்தினார். அதில், அணு மின்சாரம் உற்பத்தி செய்யத் தேவையான மூலப்பொருளான யுரேனியத்தை இந்தியாவுக்கு கனடா விநியோகம் செய்வது தொடர்பாக உடன்பாடு காணப்பட்டுள்ளது.
தீவிரவாதத்துக்கு எதிராக உலகநாடுகள் ஒன்றுபட்டு போரிட ஐ.நா.சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார். மனிதத் தன்மையின் மீது நம்பிக்கை வைத்துள்ள அனைவரும் தீவிரவாதத்துக்கு எதிராக ஒன்றாக கைகோர்க்க வேண்டும்.
தீவிரவாதத்துக்கு எதிராக உலகம் ஒன்றிணைந்து போராட ஐ.நா.வில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.
தீவிரவாதம், உலகத்துக்கே அச்சுறுத்தலாக வளர்ந்துள்ளது. அதனை ஒடுக்க எங்களது ஒத்துழைப்பை வலுப்படுத்துவோம் என்றும் பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார். (14)

## பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறித் துப்பாக்கிச் சூடு

ஜம்மு,ஏப்.17
போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி பாகிஸ்தான் இராணுவத்தினர் அடிக்கடி இந்திய எல்லைப் பகுதியில் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் காஷ்மீரில் ஜாதுவா மாவட்டத்தின், சர்வதேச எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி துப்பாக்கிச் சூடுகளை நடத்தியுள்ளனர். அந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது இந்தியப்பாதுகாப்புப் படை வீரர்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## அமெரிக்காவின் புதிய திட்டம்

நியூயோர்க், ஏப்.17
சிலை கடத்தல் மன்னன் சுபாஷ் கபூரால் கடத்தப்பட்ட 600 கோடி ரூபா மதிப்புள்ள பழங்கால கலைப் பொருள்களை அந்தந்த நாடுகளிடம் ஒப்படைக்க அமெரிக்க அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.
அமெரிக்காவில் வசித்து வந்த இந்திய வம்சாவளி தொழிலதிபரான சுபாஷ் கபூர், இந்தியாவில் தமிழ் நாடு உள்ளிட்ட மாநிலங்களிலும் மற்றும் பாகிஸ்தான் போன்ற தெற்கு ஆசிய நாடுகளில் இருந்தும் ஏராளமான சிலைகள் மற்றும் பழங்கால கலைப்பொருள்களைக் கடத்திச்சென்று, உலகம் முழுவதும் விற்பனை செய்து வந்துள்ளார்.
கடந்த 2011ஆம் ஆண்டு ஜேர்மனியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர் இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டுள்ள அவர் தற்போது சென்னை புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
தற்போது அவர் அமெரிக்காவில் தங்கியிருந்த நிறுவனத்தில் சோதனை நடத்திய போது, அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரத்து 622 பழங்காலக் கலைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
அமெரிக்க வரலாற்றிலேயே மிக அதிக அளவில் கைப்பற்றப்பட்டுள்ள அந்தக்கலைப்பொருள்களின் மொத்த மதிப்பு 107.6 மில்லியன் டொலர் ஆகும். வெண்கலம் மற்றும் கல்லால் ஆன ஆலயச் சிலைகள் உள்ளிட்ட அந்தப் பழங்கால பொருள்கள் அனைத்தும் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், கம்போடியா, இந்தோனேஷியா, திபெத், நேபாளம் உள்ளிட்ட தெற்கு ஆசிய நாடுகளில் இருந்து களவாடப்பட்டு அமெரிக்காவுக்குக் கடத்தப்பட்டவை ஆகும். அவற்றை அந்தந்த நாடுகளிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது. (14)

## இந்தியாவுக்குச் சொந்தமான சிற்பம் ஒப்படைப்பு



ஒட்டாவா,ஏப்.17
இந்தியாவில் உள்ள கஜுராஹோ ஆலயத்துக்குச் சொந்தமான நடன நங்கை ஒருவரின் சிற்பத்தைப் பிரதமர் மோடியிடம், கனடாவின் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் ஒப்படைத்துள்ளார்.
இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட கிளிப்பெண் என்ற அந்தச் சிற்பம் எவ்வாறோ கனடாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. 1970 ஆம் ஆண்டு யுனெஸ்கோ மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி, கடந்த 4 வருடங்களாக தங்கள் வசம் இருந்த அந்தச் சிற்பத்தை கனடா, பிரதமர் மோடியிடம் நேற்று முன்தினம் ஒப்படைத்துள்ளார்.
கடந்த 2011 ஆம் ஆண்டு கனடாவைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் அந்தச் சிற்பம் இருந்ததைக் கண்ட இந்திய அதிகாரிகள், பின்னர் இந்திய அரசுக்குச் சிற்பம் குறித்த தகவல்களை வழங்கியிருந்தனர். இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களுக்குப் பின்னர் தற்போது அந்தச் சிற்பம் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## ஈராக்கில் தொடரும் தாக்குதல்

பாக்தாத்,ஏப்.17
ஈராக் மற்றும் சிரியாவில் பல நகரங்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்கள் அந்த நாடுகளில் தொடர்ந்து தாக்குதல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். தீவிரவாதிகளை ஒடுக்கும் அரசின் நடவடிக்கைக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஆதரவு கொடுத்து வருகின்றன.



இந்த நிலையில் ஈராக் ஜனாதிபதி ஹைதர் அல்-அபாதி அமெரிக்காவுக்குச் சென்று ஜனாதிபதி ஒபாமாவைச் சந்தித்தார். அதன்போது ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைக்கு கூடுதல் நிதி உதவி கோரினார். அதன்போது 200 மில்லியன் டொலர் நிதி உதவி அளிக்கப்படும் என்று ஒபாமா தெரிவித்தார்.
இதற்கிடையே தலைநகர் பாக்தாத்தில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து 5 இடங்களில் கார்க்குண்டுகள் வெடித்துச் சிதறியதில் அப்பாவிப் பொது மக்கள் 28 பேர் சாவடைந்துள்ளனர். (14)

# தீவிரவாத நாடுகள் பட்டியலிருந்து கியூபா நீக்கம்: ஒபாமா அறிவிப்பு

வொஷிங்டன்,ஏப்.17
தீவிரவாத நாடுகள் பட்டியலில் இருந்து கியூபாவை நீக்குவதற்கு முடிவு செய்திருப்பதாக அமெரிக்க நாடளுமன்றத்தில் ஜனாதிபதி ஒபாமா அறிவித்துள்ளார்.
அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையே அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக தீராத பகை நிலவி வந்தது. கியூபாவுடனான ராஜ்ய ரீதியிலான உறவை 1961ஆம் ஆண்டு அமெரிக்கா முறித்துக்கொண்டது. அது மட்டுமல்லாமல் அந்த நாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் அமெரிக்கா விதித்தது.
இந்த நிலையில் கடந்த 2013ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் தென் ஆப்பிரிக்காவில் நெல்சன் மண்டேலா மறைந்தபோது, அவரது



இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளச் சென்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, கியூபா அதிபர் ராவுல் காஸ்ட்ரோவுடன் கை குலுக்கினார். சர்வதேச அளவில் அந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து, கடந்த டிசெம்பர் மாதம் ராவுல் காஸ்ட்ரோவை ஒபாமா தொலைபேசியில் அழைத்துப் பேசியுள்ளார். இரு தரப்பு உறவுக்கும் அது நல்லதொரு அடித்தளமாக அமைந்தது. அந்த வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று அப்போது இரு தலைவர்களும் முடிவு எடுத்தனர். இந்த நிலையில், கடந்த 11 ஆம் திகதி பனாமா நாட்டில் நடைபெற்ற உச்சி மாநாட்டின்போது, ஒபாமாவும், ராவுல் காஸ்ட்ரோவும் நேருக்கு நேர் சந்தித்து பேசினர். 60 வருடங்களில் இரு நாடுகளின் தலைவர்களும் நேருக்கு நேர் சந்தித்துப் பேசியது அதுவே முதல் முறை. அந்தப் பேச்சு, இரு நாட்டு உறவில் ஒரு திருப்புமுனை என ஒபாமா வர்ணித்துள்ளார்.
தீவிரவாதத்துக்குத் துணை போகிற நாடுகள் இடம் பெற்றுள்ள கறுப்புப் பட்டியலில் இருந்து தங்களை நீக்க வேண்டும் என்று அமெரிக்காவிடம் கியூபா தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. 1982 ஆம் ஆண்டு, ஆபிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் கிளர்ச்சியாளர்களின் இயக்கங்களுக்கு கியூபா உதவியதாகக் கூறி, அமெரிக்கா அந்த நாட்டைத் தீவிரவாதப் பட்டியலில் சேர்த்தது. ஆனால், தீவிரவாத அமைப்புகளுக்கு உதவுவதை நீண்ட காலத்துக்கு முன்பாகவே நிறுத்தி விட்டதாக கியூபா கூறியது.
இந்த நிலையில், தீவிரவாத நாடுகள் பட்டியலில் இருந்து கியூபாவை நீக்க முடிவு செய்திருப்பதாக அமெரிக்க நாடளும்மன்றத்தில் ஒபாமா அறிவித்துள்ளார். அதன்மூலம் இருநாடுகளுக்கும் இடையே மீண்டும் தூதரக உறவுகள் மலருவதற்கான வாய்ப்புகள் கனிந்துள்ளன. (14)

# வங்கி வாடிக்கையாளர்களும் பிடித்து வைத்தல் வரியும் (with holding tax)

நடேசன் உதயசேகர்

வங்கி வாடிக்கையாளர் மத்தியில் நிதியாண்டின் இறுதிக் காலப் பகுதியில் அல்லது வரும் நிதியாண்டின் ஆரம்பத்தில் ஏற்படும் பதட்டம் என்னவாக இருக்கும் என வினவினால், அது பிடித்து வைத்தல் வரியும் அதன் சம்பந்தமான வரி மதிப்பு பிரகடனத்தை மேற்கொள்வதாகவுமே அமையும் எனலாம்.

இது சரியானதே என்பதை உறுதிப்படுத்தும் முகமாக வெவ்வேறு வங்கிக் கிளைகள் தோறும் படி ஏறி இறங்கும் முதியவர் கூட்டம், எத்தனையோ விசாரணைகள் தொலைபேசி அழைப்புகள் என சல்லடை போட்டுத் துளைக்கும் கேள்விகளும் அதற்கேற்ப தொடர் அலையான விளக்கங்களும் இவற்றுக்கு மேலான விமர்சனங்களும் காலத்துக்குக் காலம் நாம் கண்ட அனுபவங்களாகவே அமைந்து கிடக்கின்றன.

இவ்வாறானதோர் நிலையில் வாடிக்கையாளர்களுக்கு இந்த வரிவிதிப்பு பற்றி நிதிசார் அறிவை வழங்குவதற்கும் அவர்கள் தம் வங்கி வைப்பாளர்களின் மேல் அதீத நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் தற்காலபோட்டி மிகு நிலையில் உள்ள வங்கித் தொழிற்பாடுகளின் ஒரு வலுவூட்டப்பட்ட சேவையாக நிதிசார் அறிவுரையை மேற்கொள்ள வேண்டியகட்டாயத்தில் அனைத்து வங்கிகளும் தள்ளப்பட்டுள்ளன என்ற உண்மையைக் கூறவேண்டியது வங்கியாளன் ஆகிய எனது கடமையாகும்.

அந்த வகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுநிருபத்தின் இல SEC/ 2015/02 – பிரிவு 133 இன் சட்ட இல.10 இன் 2006 கூறப்பட்ட விடயங்கள் இந்த நிதியான்டின் பிடித்து வைத்தல் வரி முறைமை பற்றி விளக்கமாகக் கூறுகின்றது. குறிப்பாக இலங்கைப் பிரஜைகள் அனைவரும் இந்த நாட்டின் வர்த்தமானியில் அறிவிக்கப்படும் விடயங்களை அறிந்து கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ள அதேவேளை, இந்த அறிவுறுத்தல்களுக்கு அமைய தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான கடமையையும் கொண்டுள்ளனர்.

இந்தக் குறித்த வரிவிதிப்பு முறையானது மேற் கூறப்பட்ட சுற்றுநிருபத்தின் படி, தனிநபர், கூட்டுக் கணக்கு உடையோர், தனியுடமையாளர், பங்குடமையாளர் கணக்குகள் சேமிப்புக் கணக்குகளாக அமையும் பட்சத்தில் அந்தவைப்புகளின் மொத்த வட்டி ரூபா ஐயாயிரத்தை விட அதிகமாகும் பட்சத்தில் 2.5வீதம் வட்டி மீதான வரி விதிப்புக்கும் நிலையான வைப்புகளாயின் மொத்த வட்டியின் முதிர்வுத்திகதியில் அல்லது மீளப் பெறுகையில் 2.5வீதமாகவும் அமையும். இவ்வாறே பொதுவான கழகங்கள் சமூக அமைப்புகள் சங்கங்கள் ஆக இருப்பின் சேமிப்பு வட்டி ரூ. ஐயாயிரத்துக்கு மேற்படின் வட்டியின் மீது 8.0 வீதமும் நிலையான வைப்பின் முதிர்வின் போது அல்லது மீளப் பெறுகையின்போது வட்டியின் மீது 8வீதமாகவும் அமையும். இந்த நிலைமை கம் பனிகளைப் பொறுத்தவரையில் 10 வீதம் ஆகும். எனினும் சேவை சார் கழகங்கள் பொது நிறுவனங்கள் தாம் மேற்கொள்ளும் சேவைகள் குழந்தை பராமரிப்பு, முதியவர்களைப் பேணுதல், மாற்றுத் திறனாளிகளுக்கு சேவைகளை வழங்குதல் சம்பந்தமாக அமையும் என்பதனை உறுதிப்படுத்துமிடத்தும் தமது நிறுவன சேவையை உரிய அரச ஆணையாளர் ஊடாகப் பதிவினை மேற்கொள்வதன் மூலமும் இந்த விதிப்பினை 2.5வீதத்துக்குக் குறைக்க முடியும்.

மேலும், மேற்குறித்த தகைமைகளுடன் இறைவரித் திணைக்களத்தின் வரிவிலக்கைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் முற்றாகவே பிடித்துவைத்தல் வரிவிலக்கைப் பெறுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளதென்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இதற்கு மேலாக இம்முறை வாடிக்கையாளருக்கு உள்ளசௌகரியமான விடயம் என்னவெனில், தமது வருமானம் சம்பந்தமான வெளிப்படுத்தல்களையோ அல்லது வரிமதிப்புக்கான பிரகடனங்களையோ மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதாகும்.

மேலும் 60 வயதைப் பூர்த்தி செய்யும் (2015.04.01இல்) நபர்கள் அவர்கள் மேற்கொள்ளும் வைப்புக்கள் முதலீடுகளுக்கு முற்றாகவே பிடித்து வைத்தல் வரி விலக்கைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

எனவே, இம்முறை அனைத்து வங்கி வாடிக்கையாளர்களும் பிடித்து வைத்தல் வரி சம்பந்தமாகவோ அல்லது அதன் வரிமதிப்பீட்டுப் பிரகடனம் சம்பந்த




> “ இந்த வரி விதிப்பு பற்றி நிதிசார் அறிவை வழங்குவதற்கும் அவர்கள் தம் வங்கி வைப்பாளர்களின் மேல் அதீத நம்பிக் கையை ஏற்படுத்து வதற்கும் தற்கால போட்டி மிகு நிலையில் உள்ள வங்கித் தொழிற்பாடுகளின் ஒரு வலு வூட்டப் பட்ட சேவையாக நிதிசார் அறிவு ரையை மேற் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் அனைத்து வங்கி களும் தள்ளப் பட்டுள்ளன என்ற உண்மையைக் கூறவேண்டியது வங்கியாளன் ஆகிய எனது கடமையாகும்.






## கடற்பாசி செய்கையாளர்களுக்கு வலுவூட்டிய கொமர்ஷல் வங்கி

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் கடற்பாசி செய்கையாளர்களுக்கு கொமர்ஷல் வங்கி அண்மையில் ஆதரவுக் கரம் நீட்டியுள்ளது. தற்போது வங்கி நடைமுறைப்படுத்திவரும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கும் மற்றும் நுண் தொழில் முயற்சியாளர்களுக்கும் அவர்களின் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் தொழில்நுட்ப மற்றும் நிதி அறிவையூட்டி அவர்களுக்கு வலுவூட்டும் திட்டத்தின் கீழ் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை கொமர்ஷல் வங்கியின் மன்னார் கிளையும், வங்கியின் வவுனியா மன்னார் பிரிவுகளின் விவசாய மற்றும் நுண் நிதிப் பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

சிலாவத்துறை, முத்தரிப்புதுறை, அரிப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 120 கடற்பாசி செய்கையாளர்கள் இதன் மூலம் நன்மை அடைந்தனர். ஹேலீஸ் அக்குவாரி தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம், இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய அலுவலகம் என்பனவற்றின் உதவியோடு இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது. இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய (நிதி அறிவூட்டல்) பிரிவு சிரேஷ்ட முகாமையாளர் திருமதி. ரன்ஜினி விஜயாலன், அக்கு வாரிபுரொஸஸிங் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் அபிவிருத்தி மற்றும் ஆய்வு பிரிவு பொது முகாமையாளர் டொக்டர்.எம் ஷண்முகம், ஹேலீஸ் அக்குவாரி நிறுவனத்தின் வர்த்தக செயற்பாட்டு பிரிவு தலைவர் கே.சிவராம் ஆகியோர் விளக்க உரைகளை வழங்கினர்.

கொமர்ஷல் வங்கியின் வட பிராந்தியத்துக்கான பிராந்திய முகாமையாளர்றோய் நிக்கலஸ், ஹேலீஸ் அக்குவாரி தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் பணிப்பாளர்றுவான் ராஜபக்ஷ வங்கியின் அபிவிருத்திகடன் பிரிவு நிறைவேற்று அதிகாரி பிரசன்ன ஜயமஹ ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் விஷேட அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

நுண் தொழில் முயற்சியாளர்களுக்கு வங்கி அறிமுகம் செய்துள்ள விஷேட சேமிப்புத் திட்டமான திவிசறு திட்டமும் இந் நிகழ்வில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. மேலும் அபிவிருத்திக் கடன் திட்டத்தின் மூலம் வங்கியில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய கடன் திட்டங்கள் பற்றியும் இதில் பங்குபற்றியவர்களுக்கு விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

மன்னார் கடல் பிரதேசம் கடற்பாசிகளை வளர்ப்பதற்கு மிகவும் உசிதமான இடமாக இனம் காணப்பட்டுள்ளது. கடற்பாசி மிகக் கூடிய அளவு மருத்துவ குணம் கொண்டதாகும். பல்வேறு வகையான மருந்துப் பொருட்களையும் உணவுப் பொருட்களையும் தயாரிக்க இது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கான ஏற்றுமதி தேவையை உரிய முறையில் கட்டி எழுப்பினால் இதன் மூலம் நாட்டுக்கு அதிகளவு வெளிநாட்டு நாணய மாற்றையும் உழைக்கலாம்.

கொமர்ஷல் வங்கி ரீனிசி க்களுக்கான இது போன்ற வேலைத் திட்டங்களை இதற்கு முன் நாரம்மல, காலி, மொனராகலை, வெள்ளவாய, பதுளை, பசறை, பண்டாரவளை, வெலிமடை, வெலிகம, கொக்கல, கராப்பிட்டிய, மாத்தறை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் அண்மைக் காலங்களில் நடத்தியுள்ளது.

வங்கியின் விவசாய மற்றும் நுண் நிதி பிரிவுகள் இரத்தினபுரி, நாரம்மல, கண்டி, அநுராதபுரம், கிளிநொச்சி, பண்டாரவளை, வெல்லவாய, ஹிங்குராக்கொட, களேவெல, அச்சுவேலி, வவுனியா மற்றும் திஸ்ஸமஹாராம ஆகிய இடங்களில் உள்ளன. புதிய வியாபாரங்களைத் தொடங்க முயற்சி செய்பவர்களை அல்லது இருக்கின்ற வர்த்தகத்தை விரிவாக்கம் செய்ய முயற்சிப்பவர்களை அடையாளம் கண்டு அவர்களுள் நிதி தேவைப்படுகின்றவர்களுக்கு தேவையான உதவிகளை இந்தப் பிரிவுகள் வழங்கி வருகின்றன. வர்த்தக விரிவாக்கத்துக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பனவற்றை வழங்குவதோடு வர்த்தக பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் இந்தப் பிரிவுகள் வழங்குகின்றன.

கொமர்ஷல் வங்கி உலகின் தலை சிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக (2011–14) இடம் பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியாகும். அது நாடு முழுவதும் 242 கிளைகளுடனும், 610 ஏ.ரி.எம் வலைய மைப்புக்களுடனும் செயற்படுகின்றது. கடந்த பல வருடங்களாக இலங்கையின் மிகச் சிறந்த வங்கி என்ற ரீதியில் பல விருதுகளையும் அதுவென்றுள்ளது. அத்தோடு 2013 மற்றும் 2014ம் ஆண்டில் இலங்கையின் மிகச் சிறந்த பத்து கூட்டாண்மை பிரஜைகளில் ஒன்றாகவும் இலங்கை வர்த்தகச் சபையால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த பத்தாண்டுகளாக இலங்கையின் மிகவும் கௌரவத்துக்குரிய வங்கியாக எல்.எம்.டி தரவரிசையில் தொடர்ந்து இடம்பிடித்துள்ளது.

அத்தோடு கடந்த நான்கு வருடங்களாக இதே தரவரிசையில் இலங்கையின் ஒட்டுமொத்த கூட்டாண்மை நிறுவனங்களுள் மிகவும் கௌரவத்துக்குரிய இரண்டாவது நிறுவனம் என்ற இடத்தையும் தக்கவைத்துள்ளது. 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் இதே எல்.எம்.டி சஞ்சிகையின் தரவரிசையில் மிகவும் நேர்மையான நிறுவனங்களுள் முதலாவது இடத்தையும் தன்னகத்தே தக்கவைத்துள்ளது. (த)

## மதுபாவனையை அரசு கட்டுப்படுத்துமா?

புதுவருடப் பிறப்புத் தினத்துக்கு மறுநாள் மாலைவேளையில் கஸ்தூரியார் வீதியூடாக பஸ் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். அப்போது கடையொன்றின் முன்பாக வீதியோரத்தில் ஒருவர் படுத்துக் கிடப்பது தெரிந்தது. அவர் வேட்டி சட்டை அணிந்திருந்தார். இந்த உலகையே மறந்து அவர் ஒரு இறந்தபிணம்கிடப்பதைப்போன்று காட்சி தந்தார். அவர் படுத்துக் கிடந்த இடத்துக்கு அண்மையில் மதுபான விற்பனை நிலையங்களும் காட்சி தந்தன. இதனால் அவற்றுக்கும் அவருக்கும் இடையில் ஒரு முடிச்சை எனது மனம் போட்டுக் கொண்டது.

கையில் இருந்த காசையும் செலவழித்து புதுவருடம் மலர்ந்த வேளையில் அந்தமனிதர் கிடந்த கோலத்தை அவரது குடும்பத்தினர் கண்டுவிட்டால் தாங்கமுடியாத வேதனையை அவர்கள் அனுபவித்திருப் பார்கள். இது தேவைதானா? இதைவிட மதுபாவனை காரணமாக நோய்த் தாக்கத்துக்குள்ளாகும் இலங்கையரின் சதவீதம் உலகளவில் முதலிடத்தை வகிப்பதாக செய்திகள் மேலும் வந்துள்ளன. இந்த நாட்டுக்கு இதைவிட வேறு பெருமை என்னதான் வேண்டும்? மதுபான நிலையங்களை முக்கிய அரசியல்வாதிகளே நடத்துகின்ற நிலை இந்த நாட்டில் இருக்கும்போது இத்தகைய பாதிப்புக்கள் ஏற்படத்தான் செய்யும்.

ஆனால் இந்த நாட்டின் சுகாதார அமைச்சர் இப்பொழுதுதான் விழிப்பு வந்தவர் போன்று மது பாவனையைக் குறைப்பதற்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத்தாம் சமர்ப்பித்து, அதற்கான அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டதாகக் கூறுகிறார். கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் என்பதற்கு இதனை உதாரணமாகக் கூறலாம்.

அதிகளவில் வருமானம் கிடைக்கின்றது என்பதற்காக மதுவிற்பனையை அரசுதான் ஊக்குவிக்கின்றது. அரசு விரும்பினால் அதனைக் கட்டுப்படுத் தவும் முடியும்.

*மு.தயாளன்,குருநகர்.*

## மக்களைக் காப்பாற்றுவது யார்?

குடாநாட்டின் நிலத்தடி நீர், பல்வேறு வகையிலும் பாதிப்படைந்துள்ளதால் மக்களின் ஆரோக்கியம் கேள்விக்குறியாக மாறி நிற்கின்றது. விவசாயிகளின் அதிகரித்த உரப்பாவனையும் கிருமிநாசினிகளின் பாவனையும் நீரை மாசுபடுத்துவதாக எப்போதோ கூறப்பட்டு விட்டது. ஆனால் இவை மட்டுப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக அதிகரித்துச் செல்வதையே அவதானிக்க முடிகின்றது.

இரசாயன உரங்களாலும், கிருமிநாசினிகளாலும் நிலத்தடி நீர் மட்டுமல்லாது, மனிதர்களின் ஆரோக்கியமும் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது. புற்றுநோய், சிறுநீரகக் கோளாறுகள் இன்றுமக்களைமோசமாகப்பாதித்து வருவதற்கு இவற்றின் பாவனையும் ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. மேலைத்தேய நாடுகள் இயற்கை உரங்கள் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பழவகைகள், மரக்கறி வகைகள் என்பனவற்றையே இறக்குமதி செய்கின்றன. செயற்கை உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அவை முற்றாகவே புறக்கணித்து விடு கின்றன.

ஆனால் எம்மவர்கள் எதனையும் கவனத்தில் கொள்ளாது சகலதையும் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் ஏற்படப்போகும் பாதிப்புகள் மோசமானவையாகவே இருக்கப் போகின்றன.




மேலைத்தேய நாடுகளைப் போன்று நாமும் நடந்துகொள்வதில் என்ன தடைகள் உள்ளன என்பது புரியவில்லை.

அரசும் இந்த இரசாயனப் பொருள்களின் உற்பத்தியையும் விற்பனையையும் அதிகரிப்பதிலேயே நாட்டம் செலுத்தி வருவதைக் காண முடிகின்றது.

விவசாயிகள் கூட தமது உற்பத்தியை அதிகரிப்பதிலேயே நாட்டம் கொண்டிருக்கின்றனர். மக்களின் நலன்களை இவர்கள் எண்ணிக்கூடப் பார்ப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே அரசு இந்த விடயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அதிகாரிகளும் விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவதன் மூலமாக மக்களைப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியும்.

*மு.சத்தியசீலன்,மல்லாகம்.*

## இளைஞர்கள் திருந்த மாட்டார்களா?


புதுவருடப் பிறப்புத் தினத்தன்று மினிபஸ்ஸில் பயணித்த இளைஞர்கள் சிலரின் நடவடிக்கைகள் மனதை வேதனையில் ஆழ்த்தி விட்டது.

மேற்படி தினத்தில் மாலைநேரம் நான் யாழ்ப்பாணத்திலிருந்து மாவிட்டபுரம் செல்லும் மினிபஸ்ஸில் பயணத்தை மேற்கொண்டிருந்தேன். அப்போது பஸ்ஸின் பின்பக்கத்திலிருந்து பலத்த குரல்கள் எழுந்து கொண்டிருந்தன. திரும்பிப் பார்த்தபோது இளைஞர்கள் சிலர் பெண்களைக் கிண்டல் செய்யும் விதமாகத் தமக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர். அங்கே இளம் பெண் பிள்ளைகள் சிலரும் காணப்பட்டனர். ஆனால் அவர்கள் அந்த இளைஞர்களின் கேலிப் பேச்சுக்களால் சங்கடப்பட்டு நெளிந்து கொண்டிருந்ததைக் காண முடிந்தது. நேரம் செல்லச் செல்ல இளைஞர்களின் அட்டகாசம் கூடியதே தவிர குறைந்தபாடாகக் காணப்படவில்லை.

பிரயாணிகள் பலர் பயணத்தை மேற்கொண்டிருந்த அந்த வேளையில் பெண்களும் இருக்க அந்த இளைஞர்கள் அநாகரிகமாக நடந்து கொண்டமை ஆத்திரத்தை ஏற்படுத்தவே செய்தது. பொது இடங்களில் எவ்வாறு நடந்து கொள்வது என்பதுகூடத் தெரியாத இவர்கள் தமது வாழ்க்கையை எவ்விதம் கொண்டு செல்லப் போகின்றார்களோ தெரியவில்லை. இத்தகைய இளைஞர்கள் திருந்தாது விட்டால் எதிர்காலச் சமூகமே நாசமாகிவிடும்.

ம. கற்பகம், *தாவடி*

கேலிச் சித்திரம்




*நன்றி: மவ்பிம*

# வலுக்கும் முரண்பாடு நாட்டுக்கு ஆபத்து

புதிய அரசு ஆட்சிக்கு வந்தும், இலங்கை அரசியலில் இன்னும் ஒரு ஸ்திரநிலை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இலங்கை அரசியல் தொடர்ந்தும் தளம்பல் நிலையிலேயே இருந்து வருகிறது.

ஆட்சியில் உள்ள தற்போதைய அரசில் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்படுகின்றபோதும் இருகட்சி உறுப்பினர்களிடையேயான முரண்பாடுகள் முடிவுக்கு வந்ததாக இல்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிக் கதிரையில் இருந்து தூக்கி எறியப்பட்ட முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்குள் நுழைவதற்காக இரகசியக் காய் நகர்த்தல்களை முன்னெடுத்து வருகிறார். அவரை மீண்டும் இலங்கை அரசியல் சகதிக்குள் தள்ளி விடுவதற்கு விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, மஹிந்தானந்த அளுக்கமகே, கெஹலிய ரம்புக்வெல் போன்றவர்கள் மிக மும்முரமாக உள்ளனர். அடுத்த தேர்தலில் மஹிந்தவைப் பிரதமர் வேட்பாளராகக் களம் இறக்குவதற்கான முன்னெடுப்புக்களை இவர்கள் தீவிரமாக ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்களின் ஆதரவை வைத்து அரசியலுக்குள் மீண்டும் நுழைந்து விடுவதற்கு மஹிந்தவும் படாத பாடு படுகிறார்.

முன்னர் ஆட்சியில் இருந்தவேளை அதிகாரங்கள் அனைத்தையும் தனது கையில் வைத்துக்கொண்டு, கொடுங்கோல் ஆட்சி புரிந்த அவரால் இப்போது எதுவுமே இல்லாமல் வெறும் கையுடன் இருக்க முடியவில்லை போலும். அதனால் தான் அவர் மீண்டும் அரசியலுக்குள் நுழைய முயற்சிக்கிறார். தனது குடும்பத்தை வைத்தே இலங்கை அரசியலை ஒரு கை பார்த்த அவர், இப்போது அதிகாரம் இழந்து, தனித்துப் போய் விட்டார் என்று யாரும் எண்ணிவிட முடியாது. அவருக்குப் பின்னால் ஒரு கூட்டம் இருந்து அவரை மீண்டும் அரசியலுக்குள் கொண்டுவந்து நிறுத்தக் கடுமையாகப் போராடிக்கொண்டிருக்கிறது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இரண்டாகப் பிளவுபட்டுவிட்டது. மைத்திரியுடன் ஒரு தரப்பு, மஹிந்தவுடன் ஒரு தரப்புப் பிரிந்து நின்று மோதிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. மஹிந்தவுடன் இருக்கும் கூட்டத்தைப் பிரித்துத் தன் வசமாக்க உத்தியொன்றை வகுத்தார் மைத்திரி. அதன் பயனாகச் சுதந்திரக் கட்சியில் மஹிந்தவின் பக்கம் இருந்த பலருக்கு அமைச்சுப் பதவிகள் பரிசாகக் கிடைத்தன. மைத்திரி பக்கம் தாவினார்கள் அவர்கள். ஆனாலும் மஹிந்தவுக்கான ஆதரவு இன்னும் குறைந்ததாக இல்லை.

அரசியல் களத்தில் மஹிந்த மீண்டும் பிரவேசிப்பதற்கான சமிக்ஞைகள் நாளுக்கு நாள் வலுப்பெற்று வரும் நிலையில் அவ்வாறு ஒன்று நடந்தால் அதனை எதிர்கொள்வதற்கான காய் நகர்த்தல்களை மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்திருக்கிறார். மஹிந்த தனது செல்வாக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு முற்படுகிறார் என்று விமர்சனங்கள் முன்வைக்கப்படும் நிலையிலேயே மைத்திரியின் இந்தக் காய்நகர்த்தல்களும் ஆரம்பமாகியுள்ளன. மைத்திரிக்கு எதிராக மஹிந்தவை மீண்டும் ஒரு அரசியல் சக்தியாக்க முன்னின்று செயற்படுபவர் விமல் வீரவன்ச. அதேபோன்று முன்னாள் அமைச்சர்களான பந்துல குணவர்த்தன, நிமால் சிறிபால டி சில்வா, ரோஹித அபேகுணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, டி.பி.ஏக்கநாயக்க, ஹெகலிய ரம்புக்வெல, ஜி.எல்.பீரிஸ், மஹிந்தானந்த அளுக்கமகே, சாலிந்த திஸ்ஸநாயக்க, அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோர் உட்பட பலர் மஹிந்தவை மீண்டும் அரசியலுக்குள் இழுக்கக் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை மைத்திரிபால ஏற்ற பின்னர், அவர் தனது அதிகாரத்தை வெளிக்காட்டாமல் அமைதியாக இருந்தமை குறித்துப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. இது குறித்து சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் விமர்சனங்களை முன்வைத்திருந்தன. ஆயினும் அந்த அமைதிக்குப் பின் திடீரெனப் புயல் ஒன்றைக் கிளப்பி விட்டிருக்கிறார் மைத்திரி. சுதந்திரக் கட்சியில் இருந்துகொண்டு மஹிந்தவுக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஐவரைக் கட்சியின் மத்திய குழுவில் இருந்து உடனடியாக நீக்குவதற்கு அவர் உத்தரவிட்டுள்ளார். இதன்மூலம் கட்சிக்குள் இருக்கும் மஹிந்த ஆதரவாளர்களுக்கு பாடம் கற்பிக்கத் தொடங்கிவிட்டார் அவர். அமைதியாக இருந்த அவர், இப்போது புயலாகக் கிளம்பியுள்ளமை மஹிந்தவின் அரசியல் பிரவேசத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான வியூகமே என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

ஆயினும் இலங்கை அரசியலில் தொடரும் இந்த முரண்பாட்டு நிலை நாட்டில் ஒரு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆட்சிக் கதிரையைப் பிடிப்பதற்காகத் தமக்குள் மோதிக்கொள்ளும் இவர்கள் மக்களின் நலனில் அக்கறை கொள்ளாமல் தமது நலனையே நோக்காகக் கொண்டிருப்பது நாட்டைப் படுகுழியில் தள்ளிவிடும் செயற்பாடாகவே அமையும். நீண்ட நெடுங்காலமாக நாட்டில் தொடரும் இனப் பிரச்சினைக்கு ஒரு உறுதியான தீர்வை முன்வைப்பதற்கு ஆட்சிக்கு வரும் எந்த அரசுகளும் அக்கறை காட்டியதாக வரலாறு இல்லை.

இதனால் ஒரு நிரந்தரத் தீர்வு இன்றித் தொடர்ந்தும் அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறார் கள் தமிழர்கள். ஆகவே தமக்குள் மோதிக்கொள்வதை விடுத்து, நாட்டின்நலனில் அக்கறை கொள்வதற்கு முன்வரவேண்டும்.


# கிறிஸ்மஸ் தீவு அகதி முகாமில் ஈழ அகதி மாரடைப்பால் சாவு

சிட்னி, ஏப்.17
ஆஸ்திரேலியா கிறிஸ்மஸ் தீவில் உள்ள கர்ட்டின் அகதி முகாமில் ஈழத்தைச் சேர்ந்த அகதியொருவர்மாரடைப்பால்உயிரிழந்துள்ளார். 50 வயதுடைய இராமையா மகேந்திரன் என்பவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு மே மாதம் படகுப் பயணத்தின் மூலம் புகலி டம் கோரி ஆஸ்திரேலியாவில்அவர்தஞ்சமடைந்தார். அதனை அடுத்து அவர் தொடர்ந்து கொக்கோஸ் தீவில் தங்க வைக்கப்பட்டதன் பின்னர் கிறிஸ்மஸ் தீவுக்கு மாற்றப்பட்டு கர்ட்டின் தீவில் தங்க வைக்கப்பட்டார்.

இந்தநிலையில் மாரடைப்பு ஏற்பட்டதன் காரணமாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டவேளை உயிரிழந் துள்ளார்.

எனினும் ஆஸ்திரேலியாவுக்கு சென்றது முதல்அவருக்கு சரியானமுறையிலேயே மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வந்துள்ளதாக சடலத்தைப் பரிசோதனை செய்த அதிகாரி தெரிவித்துள்ளார்.(வ)



வட மாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவுக்கு 2014 ஆம் ஆண்டு ஓதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து கொந்தக்காறங்குளம் முன்பள்ளிக்கான தளபாடம் பாடசாலை ஆசிரியரிடம் வழங்கப்பட்டது. (வ–402)


## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 01 . 06 . 1934 — இறைவன் அடியில் 14 . 04 . 2015

### மடுத்தீன் பாவிலுப்பிள்ளை
(செல்லையா)
(இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மாத கலை வசிப்பிடமாகவும் தற்போது நீர் கொழும்பு குடாப்பாடுவவில் வசித்தவரு மான மடுத்தீன் பாவிலுப்பிள்ளை (செல் லையா) 14.04.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி மடுத் தீன் அவர்களின் அன்பு மகனும், காலஞ் சென்ற திரு. திருமதி சுவாம்பிள்ளை அவர் களின் பாசமிகு மருமகனும், திருமதி லூசியாவின் பாசமிகு கணவரும், காலஞ் சென்றவர்களான மனுவல்பிள்ளை, அன்னம்மா, தொம்மைப் பிள்ளை, அருளம்மா, சாமிநாதர், சவிரிமுத்து, திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதர ரும், டொறின் பியாற்றிஸ் (பபி), காலஞ் சென்ற அகஸ்ரா (றதி), பேர்லின் (சுமதி), றெஜினோல்ட் (ஜெயபாலன்), காலஞ்சென்ற ஜறின் (சாந்தி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அம்புறோஸ் ஜோண்சன், கியூபேட் அருள்தாஸ், மாலா ஆகியோரின் அன்பு மாமனும், கறோலின், கமிலா, தொம் சன், கஜிபேர்ட், அனட், டயஸ், டினேஸ், டிசாந் தன்,டினுஜா, டிலக்சன், விதுஷா ஆகியோ ரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19 A1, துஷாரா மாவத்தை குடாப்பாடுவ நீர்கொழும்பில் உள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 18.04.2015 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லடக்கத்துக் காக நீர்கொழும்பு பொதுச் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P. 031 492 5019, (58808)
031 222 8682 (45.7.3)



## மரண அறிவித்தல்



### அம்பிகாவதி மகாதேவன்
(ரயர் கடை உரிமையாளர்)

இல.45, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பிகாவதி மகாதேவன் நேற்று (16.04.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நளாயினியின் பாசமிகு கணவரும், அரங்கநாதன் (லண்டன்), அரங்கநாயகி (லண்டன்), ஜெகநந்தன் (லண்டன்), ஜெகதீஸ்வரி (லண்டன்), ஜனார்த்தனன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம்பின்னர் அறிவிக்கப்படும்.

53, நாவலர் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
077 0 77 8707 (58885)(4.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.


# பாலமுனையில் நடைபெற்ற தலைமைத்துவ பயிற்சி முகாம்



காத்தான்குடி, ஏப்.17
காத்தான்குடி இஸ்லாமிய கலை கலாசார பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் தலைமைத்துவ ரீதியில் பயிற்றுவிக்கும் வகை யிலான ஒருநாள் தலைமைத் துவ பயிற்சி முகாம் செவ்வாய்க் கிழமை நடத்தப்பட்டது.

பாலமுனை கடற்கரை வளா கத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமில் தரம் 9, 10 ஆகிய தரங்களில் கல்வி கற்கும் மாண வர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இளைஞர்களைத் தயார்ப்படுத் துவது அவர்களின் எதிர் காலத்தைத் தீர்மானிப்பதற்காக' என்ற தொனிப்பொருளில் நடை பெற்ற இந்தப்பயிற்சி முகாமில் சுமார் 43 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் தலைமைத் துவப் பண்புகள், தலைமைத்துவ ஆற்றல்கள் போன்ற அம்சங்கள் விளையாட்டுக்கள் மூலம் செய்முறை விளக்கங்களுடன் கற்பிக்கப்பட்டன.

பயிற்சியின்போது வெற்றிகர மானதலைமைத்துவம், "உலகை மாற்றிய தலை வர்கள்" போன்ற தலைப்புக்களில் விசேட உரை களும் இடம்பெற்றன.

இதன்போது மாணவர்களின் ஆற்றல்களை பிரதிபலிக்கும் வகையில் கலை நிகழ்வுகளும் நடைபெற்றதுடன் முகாமில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சான்றிதழ் கள்வழங்கப்படவுள்ளன.(வ–10)


## மரண அறிவித்தல்

### அ.அலோசியஸ் ஞானராஜா



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதி விடமாகவும் கொண்ட அலோசியஸ் ஞான ராஜா 14.04.2015 இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந் தோனிப்பிள்ளை இசபெலாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நேசராணியின் அன்புக்கணவரும், காலஞ் சென்றவர்களான பொன்ராஜா, தங்கராணி, யோகராஜா மற்றும் கனடாவில் வசிக்கும் இந்திராணி (மணி), நவரட்ணராஜா (ஒலி வர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், செலன்ராணி, காலஞ்சென்ற ஜோசேப் சேவியர், வயலெற், அல்பேர்ட், நந்தினி ஆகியோரின் மைத்துனரும், ஜெறி, ஜெமி, ஜொனி, ஜீறி, ஜெப்றி, ஜீடி, சமி, பமிலா, நிஷா, சுதர்சன், யாழினி, அனுஜா, அஜந்தன், அபிஷா ஆகியோரின் ஆசையப்பாவும், றோசான்யூட், றொபின்சன் யூட், றொபேட்சன்யூட், மரியகமலின், நோயல்ரா ஆகியோரின் ஆசை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.04.2015) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து திருப்பலி பூசைக்காக புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்பு நல்லடக்கத் துக்காக கரவெட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராஜ் மகால்,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.
(சி/18946)(4.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி எல்சபெத் ஞானதீபம் அருட்பிரகாசம்



சாவகச்சேரியைப் பிறப் பிடமாகவும், ஏழாலை வடக்கை வசிப்பிடமாகவும், டென் மார்க்கில் தற்பொழுது வசித்த வருமான திருமதி எல்சபெத் ஞானதீபம் அருட்பிரகாசம் 11.04.2015 கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சின்னத்துரை - நேசம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற அருட்பிரகா சத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்ன தானம் - கதிராசிப்பிள்ளை தம் பதியரின் மருமகளும், கிறிஸ்ரி அருள்ராஜின் (டென் மார்க்) அன்புத்தாயும், ஜெயந் தினியின் மாமியும், அபித்தா, கிறிஸ்தா, பிறித்திகா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற வர்களான செல்வ ரட்ணம், தங்கமலர், தேவதாசன் மற்றும் பாலரட்ணம், யோகமலர் அரச ரட்ணம், ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (18.04.2015) சனிக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும். அன்றையதினம் பிற்பகல் 4.00 மணிக்கு 'ஜெப இல்லம்' ஏழாலை வடக்கு, ஏழாலையில் ஆத்ம இளைப்பாறு தலுக்கான ஜெப ஆராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜெப இல்லம்,
ஏழாலை வடக்கு,
(கலாநிதி சனசமூக நிலையம் அருகில்) (58887) (45.3.7)

தகவல் :
அ.தவப்பிரகாசம்
(மைத்துனர்).


# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப், 17
பருத்தித்துறை மெத டிஸ்ட் உயர்தரப் பாடசா லையில் க.பொ.த உயர் தரம் 2017 இல் தொழில் நுட்பப் பாட நெறியைத் தொடரவிரும்பும் மாண வர்களுக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள் ளன.

விண்ணப்படிவங்களை பாடசாலைக் காரி யால யத்தில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் காரி யாலயத்தில் ஒப்ப டைக்கும் படியும் மேற்படி பாட நெறியைத் தொடர் வதற்கு 2014 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை யில் கணிதம், தமிழ், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்திய டைந்திருப் பதோடு அவற் றுள் மூன்று பாடங்க ளிலாவது திறமைச் சித்தி (சி) பெற்றிருத்தல் வேண் டும் என்று பாடசாலை அதிபர் ஜி.டி.தேவராஜா தெரிவித்துள்ளார்.(வ–10)

## நக்ஸல்களுக்கு ஆயுதங்கள் இலங்கை ஊடாக கடத்தல்?

புதுடில்லி, ஏப் 17

நக்ஸல்கள் இலங்கையின் ஊடாக அதி நவீன ஆயுதங்களைக் கடத்தி வருவதாக வெளியான தகவல்களையடுத்து, இந்திய மத்திய உளவுத்துறையினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முன்னதாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களே இவ்வாறு இந்திய நக்ஸல் தீவிரவாதிகளுக்கும் ஆயுதங்களை வழங்குவதாகத் தகவல் கிடைத்துள்ளதாக இந்திய மத்திய உளவுத்துறையை மேற்கோள் காட்டி வெளிநாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் நேபாளம் மற்றும் மியன்மார் ஊடாக நக்ஸல்கள் பெற்றுக் கொள்வது ஆதாரங்களுடன் உறுதியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தற்போது மற்றுமொரு புதிய வழியின் ஊடாகவும் ஆயுதங்களைக் கடத்தப்படுவதாக வெளியான தகவல்கள் குறித்து உளவுத்துறை அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.


நக்சலைட் போராளிகளுக்கு நிதியும் ஆயுதங்களும் கிடைத்து வருவது பாதுகாப்புப் படையினருக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என சிரேஷ்ட இந்திய உளவுத்துறை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (த)

## மினிசூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி இல்லை

வவுனியா, ஏப்.17

வவுனியா பறநட்டகல் பகுதியில் அண்மையில் மினி சூறா வளியொன்று வீசியது. இதனால் 10 இற்கு மேற்பட்ட வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கு வதாகவும், தமக்கு அரச உதவிகள்எவையும்கிடைக்கவில்லை என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளன.

மிக வறுமையில் வாடும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமது வீடுகளுக்கான கூரை அமைப்பதற்கு போதிய பொருளாதார வசதியின்றி அவதியுற்று வருகின்றனர். இதனை வன்னி மாவட்ட நாடாளுமன்ற



உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை உறுப்பினர், எம்.பி.நடராஜ் ஆகியோர் அடங்கிய குழுவினர் பார்வையிட்டவேளை பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தோர் தமக்கு அரச உதவிகள் எதுவும் கிடைக்காமை தொடர்பாக எடுத்துக்கூறினர். (வ-402)

## விகிதாசார தேர்தல் முறைமையை மாற்ற யாருக்கும் உரிமையில்லை


### விக்ரமபாகு கருணாரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஏப் 17

விகிதாசாரத் தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாதென விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமையை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாக இருந்தபோதிலும் விகிதாசார முறைமையை மாற்றியமைக்க யாருக்குமே உரிமையில்லை.



விகிதாசாரத் தேர்தல் முறைமை ஜே.ஆர்.ஜயவர்த்தனவால் மக்களுக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதம். இதை யாரும் மாற்றியமைக்க நினைத்தால் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமது கட்சியின் தலைவர் ஒருவரால் பெற்றுக்கொடுக்கப்பட்ட தேர்தல் முறையை மாற்ற ஐக்கிய தேசியக்கட்சி உடன்படும் பட்சத்தில் அது கட்சிக்கும் கட்சித் தலைவருக்கும் இழைக்கும் துரோகம் எனவும், அதனைத் துரோகிக் கட்சியாகத்தான் நாம் நோக்குவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் நடைபெற்ற தேசிய நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

மூளைக் கோளாறு உள்ளவர்கள் தான் இரண்டு கட்சிகளும் ஒன்றென இவ்வாறு தெரிவிப்பார்கள்.

கடந்த 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து அவருக்காகத் தேர்தல் பிரசார பணிகளில் அனுரகுமார திசாநாயக்க முழுமூச்சுடன் செயற்பட்டார். மஹிந்த அன்று எந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தார் என்பது அனுரகுமாரவுக்குத் தெரியாமல் போய்விட்டதா? அன்று மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு இன்று இரு கட்சிகளும் ஒன்றெனத் தெரிவிக்கின்றார்.

தேசிய நிறைவேற்றுச் சபையை உருவாக்குவதற்கு யோசனை முன்வைத்ததும் அவரே தான். ஜனாதி பதித் தேர்தலில் தோல்வியடைந்திருந்தால் மஹிந்த தமது குடும்பத்தை வேரோடு அழித்திருப்பார் என ஜனாதிபதி மைத்திரி தெரிவித்திருந்தார்.

தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த சமயம் தான் நண் பரின் வீட்டில் மறைந்திருந்ததாக அவர் உலகத்திற்கே அறிவித்தி ருந்தார். அவ்வாறானதொரு கொடுங்கோல் ஆட்சியே கடந்த 10 வருடங்களாக இந்த நாட்டில் நடைபெற்றது.

மற்றையது வெள்ளை வானில் மக்களைக் கடத்திச் சென்றார்கள், அவன்காட் ஆயுத களஞ்சியசாலையைக் கடலில் மட்டுமன்றி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் வைத்திருந்தனர்.

சுமார் 3 ஆயிரத்திற்கும் அதிகமான நவீன ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன, இவற்றை வைத்து கடந்த ஆட்சிக் காலத்தில் என்ன வெல்லாம் செய்தார்கள் என்று யாருக்குத் தெரியும். இவ்வாறான ஒரு ஆட்சியை வேறு எந்த ஆட்சியுடனும் ஒப்பிட முடியாது.

அநுரகுமார ஆரம்பம் எது முடிவு எது என்று அறிந்து கொள்ளாமல் இரு கட்சிகளும் ஒன்றெனக்கூறி வருவது முட்டாள் தனமானது.

எதிர்வரும் 19 ஆம் திகதி தேர்தல் முறை குறித்து கலந்துரையாடி முக்கிய தீர்மானங்கள் எட்டப்படும்-என்றார். (த)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.17

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாலர் பாடசாலை தைமானத்தில் செ.ருவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினர்களாக கைதடி விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் சு.சிவானந்தம், தென்மராட்சி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி த.சுபத்திராதேவி, கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் எஸ்.பவளகுமாரன் ஆகியோரும் கலந்துகொள்வ்ர். (வ)






## நீக்கப்பட்ட எம்.பிக்களுக்காக குமார வெல்கம சமரசப் பேச்சு

கொழும்பு, ஏப் 17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து நீக்கப்பட்ட 5 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்துவதன் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என அந்தக் கட்சியின் உப தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நெகிழ்வான போக்குவடையவர் என்பதால், அவருடன் பேச்சு நடத்திப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் எனவும் வெல்கம கூறியுள்ளார்.

பந்துல குணவர்த்தன, சாலிந்த திஸாநாயக்க, டி.பி. ஏக்கநாயக்க, ரோஹித்த அபேகுணவர்த்தன, எஸ்.எம். சந்திரசேன ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பி னர் பதவியில் இருந்து நீக்கப்பட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் எனக் கோரி இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டமையே தாம் மத்திய செயற்குழுவில் இருந்து நீக்கப்பட காரணம் என அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப் பினர் டி.பி. ஏக்கநாயக்கவும் தானும் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசியல் எதிர்காலம் குறித்து பேசியதாகவும் குமார வெல்கம குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாகப் போட்டியிடுவதில் எந்த தடையுமில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதாகவும் வெல்கம தெரிவித்துள்ளார். (த)




## தேயிலை ஆலையில் தீ விபத்து

கொழும்பு, ஏப் 17
ராகலை – சூரியகந்த பகுதியிலுள்ள தேயிலை தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
நேற்றுக் காலை தேயிலையை உலர்த்துவதற்காகப் பயன் படுத்தப்படும் இடத்திலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.
குறித்த தொழிற்சாலை அதிகாரிகள், பொலிஸார் மற்றும் பொது மக்களும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.
மேலும் சம்பவத்தால் தொழிற் சாலையில் இருந்த பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை ராகலைப் பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (த)

## சட்டவிரோத சுரங்கத்தில் 200 கோடி பெறுமதியான நீல இரத்தினக் கல் மீட்பு

கொழும்பு, ஏப். 17
அவிசாவளை நீதிமன்றத் திற்கு உட்பட்ட பரக்கடுவ போஹரபாவ ஹிந்தல என்ற பிரதேசத்தில் சட்ட விரோத இரத்தினக் கல் சுரங்கத்தில் இருந்து 200 கோடி ரூபாவுக்கும் மேல் பெறுமதியான நீல இரத்தினக் கல் கிடைத்துள்ள தாகத் தகவல்கள் வெளி யாகியுள்ளன.
இந்த இரத்தினக் கல்லை அகழ்ந்து எடுத்த தரப்பினரும் அதனைக் கொள்வனவு செய்த இரத்தினக் கல் வர்த்தகரும் தலை மறைவாகி யுள்ளனர்.
குறித்த நீல இரத்தினக் கல் கிழங்கு ரொட்டி ஒன்றின் அளவை போல் இருக்கும் எனச் சுரங்கத்தில் பணியாற்றியவர்கள் தெரிவித்துள்ளனர்.
இந்தக் கல் 18 கோடி ரூபாவுக்கு குருவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
சட்டவிரோத இரத்தினக் கல் சுரங்கத்தை வைத்திருப்பது, அதில் எடுக்கப் பட்ட இரத்தினக் கல்லை கொள்வனவு செய்வது சட்ட விரோதம் என்பதால், வர்த்தகரும், மாணிக்கல் சுரங்கத்துடன் சம்பந்தப் பட்டவர்களும் தலைமறைவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. (த)


### பெயர்மாற்றம்
ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தம்பு பரமு ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை தம்பு தியாகராஜா என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
தம்பு தியாகராஜா

### மணமகள் தேவை
1963, தாரமிழந்த மணமகனுக்கு மணமகள் தேவை. சாதி, மதம் பார்க்கப்படமாட்டாது.
தொடர்பு: 076 837 9443, 077 171 1386
(58882)(4.3.7)

### காணி விற்பனைக்கு
பொன்னையா லேன், ஆனைக்கோட்டையில் நான்கு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
(58879)(4.3.7) தொடர்பு: 077 061 1416

### வெளிவந்துவிட்டது
### புதிய பாடத்திட்டம் 2015 நூல்கள்
பிரபல முன்னணி ஆசிரியர் முதுமாணிப் பட்டதாரி இ.க.சிவஞானசுந்தரம் M.A அவர்களின் இலக்கியத்தொகுப்பு 10/11, தமிழ் இலக்கியநயம் 10/11, தமிழ் மொழியும் இலக்கியமும் தரம்-06 சகல புத்தக நிலையங்களிலும் கிடைக்கும் சைவ நெறி தரம்-06 சைவநெறி தரம்-10
ஆசிரியர் இ.க.சிவஞானசுந்தரம் M.A
(58815)(4.3.7)

### மணப்பெண்கள் தேவை
1979 ENGINEER LONDON PR
40, 1984 சட்டத்தரணி 7 இல் செவ்வாய் 54 பாவம், 1977 விரிவுரையாளர் பாவம் 15 இக்குரிய மணப்பெண்களும் செவ்வாய் சூரியன் சேர்க்கையுள்ள முப்பது வயதுக்குள் தொழிலுள்ள மணப்பெண்களும் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
075 097 9712, 077 211 5783 (58872)(4.3.7)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

Majestic
Cineplex Jaffna
கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
VENGEANCE HITS HOME
FAST & FURIOUS 7
CEYLON THEATRES
3D
UNIVERSAL

பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30
ராகவா லாரன்ஸின்
வித்தியாசமானத் தோற்றத்தில்

சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணைகளுக்கு ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


## வேகக்கட்டுப்பாட்டை மீறிய ஓட்டோ மதிலுடன் மோதியது

### மூவர் காயம்



வலி வடக்கு ஏப் 17
வேகமாக வந்த ஓட்டோ கட்டுப்பாட்டை மீறி பாதையை விட்டு விலகியதால் அருகில் உள்ள மதிலுடன் மோதுண்டு தடம் புரண்டதில் மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் தெல்லிப்பளை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8.15 மணியளவில் காங்கேசன் துறைவீதியில்தெல்லிப்பழைதுர்க்கையம்மன் ஆலயத் துக்கு அண்மையாக இந்த விபத்து இடம்பெற்றது.
ஓட்டோவில் வந்த மூவரும் மது போதையில் காணப்பட்டதுடன் சாரதி நிலை தடுமாறியமை யால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.
உடனடியாக விபத்து நடை பெற்ற இடத்துக்கு விரைந்த தெல்லிப்பளை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு பொறுப் பதிகாரி ராஜபக்ஸ தலைமையிலான குழுவினர் காயப்பட்டவர்களை உடனடியாக மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற் கொண்டனர்.
காயப்பட்டவர்களில் ஒருவர் தென்னிலங்கையைச் சேர்ந் தவர் என்றும் மற்றைய இருவரும் யாழ்ப் பாணம் கொட்டடியைச் சோந்தவர்கள் என்றும் தெரிய வருகின்றது. (வ–86)

## தந்தையைக் கொன்ற தனயன் ரயில் முன் பாய்ந்து தற்கொலை

மட்டக்களப்பு, ஏப் 17
தந்தையை அடித்துக் கொலை செய்த மகன், தானும் ரயில் முன் பாய்ந்து தற்கொல்ல செய்து கொண்ட சம்பவம் மட்டக்களப்பில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக் குட்பட்ட திருப்பெருந்துறை, மயான வீதியில் உள்ள ஞானமுத்து விஜயன் என்ற 60 வயதுடைய முதியவர் ஒருவர் குடும்பத் தகராறு காரணமாக தனது மகனினால் கடுமையான முறையில் தாக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.
இதனைத்தொடர்ந்து வீட்டை விட்டு வெளியேறிச் சென்ற குறித்த மகன் மது அருந்திய நிலையில் நேற்று முன்தினம் இரவு மட்டக் களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். விஜயன் இருதயநாதன் என்ற 24 வயது மகனே இவ்வாறு உயிரி ழந்ததாக மட்டக்களப் புப் பொலிஸார் தெரிவித்தனர்.
தந்தைக்கும் மகனுக்கும் இடையில் இடம்பெற்ற பணப் பிரச்சினை தொடர்பான வாக்கு வாதத் தைத் தொடர்ந்து பொல்லினால் தந்தை கடுமையர்கக் தாக்கப்பட்டுள்ளார்.
இதன் பின்னர் குறித்த நபர் மட்டக் களப்பு போதனா வைத்திய சாலைக்குச் சிகிச்சைக்காக கொண்டு செல் லப்பட்டபோதும் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அதனைத் தொடர்ந்து வீட்டை விட்டு வெளியேறிய மகன் மதுபோதை யில் திராய் மடு,குமார வீதியில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் மட்டக்களப்பு பொலிஸார் கூறினர்.
உயிரிழந்தவர்களின் சடலம் மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையில் வைக் கப் பட்டுள்ளதுடன் இது தொடர் பான விசார ணையை, மட் டக்களப்பு பொலிஸார் மேற்

## சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சி ஆரம்பம்

கொழும்பு, ஏப் 17
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நான்கு சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து நீக்கிய நடவடிக்கைக்கு எதிராக எதிர்காலத்தில் பதில் தாக்குதலை நடத்தப் போவதாக அந்த கட்சியின் இறக்குவானை தொகுதி அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் டி சொய்சா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்,
கட்சியில் அனுபவங்களை கொண்ட சிரேஷ்ட உறுப்பினர் களை நீக்கி விட்டு, ஆமாம் சாமிகளை மத்திய செயற்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கக் கட்சியின் தலைவர் எடுத்த தீர்மானத்தைப் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்துள்ளனர். இப்படியான கீழ்த்தரமான நடவடிக்கைகளினால், எமது முன்னோக்கிய பயணத்தைத் தடுத்து விட முடியாது.
உள்ளூராட்சி மட்டத்தில் இருந்து நாடாளுமன்ற வரை வந்து அமைச்சரவை அமைச்சர் பதவிகளை வகித்த பந்துல குணவர்த்தன, சாலிந்த திஸாநாயக்க, டி.பி.ஏக்கநாயக்க, எஸ்.எம். சந்திரசேன ஆகியோரை மத்திய செயற் குழுவில் இருந்து நீக்கி விட்டு, அரசியலில் அனுபவங்கள் குறைந்த ஹிருணிகா, சோலங்க ஆராய்ச்சி போன்றவர்களை நிய மித்தது கேலிக்குரியது.
இப்படியான செயற்பாடுகள் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மண் பிட்டு செய்யும் விளையாட்டு வீடாக மாறிவிட்டது. அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சியின் ஆரம்பம்–என்றார்.(த)

## றோஹிதவும் நீக்கப்பட்டார்

கொழும்பு, ஏப் 17
ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவில்இருந்துநாடாளுமன்ற உறுப் பினர் ரோஹித அபேய குணவர்த்தன நீக்கப்பட்டுள்ள தாக அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.
ஜனாதிபதி கையொப்ப மிட்டகடிதம் ஒன்றின் மூலம் இதனைத் தனக்குத் தெரியப் படுத்தி யுள்ளதாக அவர் கூறியுள்ளார்.
ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற் குழுவில் இருந்து பந் துல குணவர்த்தன, சாலிந்ததிஸா நாயக்க, ரி.பீ.ஏக்க நாயக்க, எஸ். எம்சந்திர சேன, ஆகியோர் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


### திருநாவலூர்
### திருநாவலர் விளையாட்டுக்கழகம்
வடிவேலு இலங்கேஸ்வரன் (ரமேஸ்) அவர்களின் ஞாபகார்த்தமாக திருநாவலர் விளையாட்டுக் கழகம் நடத்தும் ரமேஸ் கிண்ண சுற்றுப்போட்டிகள்
1. மென்பந்து 5 பந்து பரிமாற்றம் 6 பேர் கொண்ட போட்டியும்
2. சதுரங்கப் போட்டி (வயது பிரிவு அடிப்படையில்)
3. காப்பந்தாட்டப் போட்டி (மின்னொளியில்)
கிரிக்கெட் போட்டி
மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில்
18.04.2015, 19.04.2015 ஆம் திகதிகளில் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடத்தப்படும்.
ஏனைய போட்டி விவரங்களுக்கு கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
T.P: 077 0593809
077 9785703
திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறை.

"கர்த்தரின் வெளிச்சத்தில் நடப்போம் வாருங்கள்"
இயேசு கிறிஸ்து விடுதலை தருகிறார்
வாருங்கள்!!! கேளுங்கள்!!! நல்வா... ண்டடையுங்கள்!!!
வருடாந்த சுவிஷேச ...மலிக்கும் ஆராதனைகள்
ஏப்ரல் 16ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரை
இலங்கை பெந்தெகொஸ்தே சபை
இளையதம்பி வீதி, அரியாலையில்
தினமும் மாலை 5.30 மணிக்கு


## ஓட்டோ விபத்தில் சிறுமி சாவு

கொழும்பு, ஏப் 17
ஹபரண – அதருஸ் பகுதியில் இடம் பெற்ற ஓட்டோ விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள் ளது டன் 5 பேர் காயமடைந்து வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்தில் காயமடைந்தவர்கள் ஹபரண வைத்தியசாலை மற்றும் தம் புள்ளை வைத்தியசாலையில் அனு மதிக் கப்பட்டுள்ளனர். பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# மன்மத வருட பலன்கள்



**மேடம்** மனதில் தெளிவு பிறக்கும். அலைச்சல்கள் குறையும். தாமத மாக நடந்துகொண்டிருந்த செயல்கள் துரிதமாக நடக்கத் தொடங்கும். மனதை ஒருமுகப்படுத்தி உழைக்கத் தொடங்குவீர்கள். மற்றவர்களின் மனதைத் துல்லியமாக அறிந்துகொள்வீர்கள். பிள்ளைகளை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவீர்கள். அவர்களும் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். உங்களின் மனதை அழுத்திக் கொண்டிருந்த பல பிரச்சினைகள் விலகும். வம்பு, வழக்குகளில் ஓரளவு சாதகமான திருப்பங்கள் ஏற்படும். அதனால் விட்டுக் கொடுத்துச் சென்று வழக்குகளை முடித்துக் கொள்ளவும்.

நீங்கள் பிடிவாதங்களைத் தளர்த்திக் கொண்டு அனைவரிடமும் ஒற்றுமையை வளர்த்துக் கொள்வீர்கள். தற்பெருமை பேசுபவர்கள் கூட உங்களின் பெருந்தன்மையை உணர்ந்து, பணிந்து போவார்கள். உங்கள் பேச்சில் கடமை உணர்ச்சி மிகுந்திருக்கும். நியாயவாதி என்று பெயரெடுப்பீர்கள். வெளியில் கொடுத்திருந்த கடன்கள் திரும்பவும் உங்கள் கை வந்துசேரும். சிலதடைகள் ஏற்பட்டாலும் உங்களின் முயற்சிகள் அனைத்தும் வெற்றி வாகை சூடும். உங்களின் கவலைகள் படிப்படியாகக் குறையும். புதிய வீட்டுக்குக் குடிபெயரும் வாய்ப்பு உண்டாகும்.

ஒரு சிலருக்கு வழக்கொன்றில் வழங்கப்படும் சாதகமான தீர்ப் பினால் வருமானம் பெருகும். தடைப்பட்டிருந்த பயணங்களை மேற்கொள்வீர்கள். நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் ஏற்பட்ட விரோதங்கள் மறையும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். நண்பர்கள் எதிர்பார்த்ததற்கும் மேலான உதவிகளைச் செய்வார்கள். உடல் ஆரோக்கியம் சிறப்படையும். உத்தியோகத்தர்களுக்கு இந்த ஆண்டில் பதவி உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் பேச்சுக்கு செவி சாய்ப்பார்கள். அலுவலகத்தில் உங்கள் மரியாதை உயரும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். அதேநேரம் எவரைப் பற்றியும் புறம் பேசாமல், சக ஊழியர்களின் நட்பைக்காப்பாற்றிக் கொள்ளுங்கள்.



வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் நிதானமாகவும், கோபப்படாமலும் நடந்துகொண்டால் நல்ல லாபங்களை அள்ளலாம். கடுமையான போட்டிகளையும் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் வெற்றிகரமாக முடிவடையும். கூட்டாளிகள் உங்களுக்குச் சாதகமாக நடந்து கொள்வார்கள். அதேசமயம் புதிய முதலீடுகளில் கவனமாக இருக்கவும்.

**கலைஞர்கள்**

கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். அவற்றில் உங்கள் திறமையை வெளிப்படுத்தி ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். பண வரவு அமோகமாக இருக்கும். புதிய வாகனம் வாங்குவீர்கள். ரசிகர்களின் ஆதரவோடு வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் வாய்ப்புகளும் கிடைக்கும்.

**பெண்கள்**

கணவரிடம் அன்பும், பாசமும் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். பண வரவு சீராக இருக்கும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக அமையும். ஆன்மீகச் சுற்றுலா சென்று வரும் ஆண்டாக இது அமையும். எங்கும், எப்போதும் பேசும் நேரத்தில் நிதானம் தேவை.

**மாணவர்கள்**

கல்வியிலும், விளையாட்டிலும் வெற்றிக்கொடி நாட்டுவீர்கள். ஆசிரியர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். யோகா, ப்ராணாயாமம் போன்றவைகளைச் செய்து மனதை ஒருநிலைப் படுத்துவீர்கள்.

**அதிர்ஷ்ட எண்கள்: 1, 3, 9**

**அதிர்ஷ்ட ஹோரைகள்:** சூரியன், செவ்வாய், குரு
**அதிர்ஷ்ட திசைகள்:** கிழக்கு, தெற்கு
**அதிர்ஷ்ட கிழமைகள்:** வளர்பிறை: செவ்வாய், வியாழன்; தேய்பிறை: செவ்வாய், புதன், வெள்ளி;
**அதிர்ஷ்ட மாதங்கள்:** சித்திரை, ஆவணி, மார்கழி
**கவனமாக இருக்க வேண்டிய மாதங்கள்:** கார்த்திகை, பங்குனி

# பெண்களும் சமையலறையும்



மனித சமுதாய வரலாற்றில், சமயம், பண்பாடு, அரசியல் முதலிய காரணங்களால் செயற்படுத்தப்பட்டு வந்துள்ள பல கருத்தாக்கங்களை இன்றைய சமூகச் சிந்தனைகள் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளன. மனித இனத்தில் சாதியின் அடிப்படையிலும், இனத்தின் அடிப்படையிலும் ஆதிக்கச் சமூகத்தினரால் ஏற்படுத்தப்பட்ட ஏற்றத்தாழ்வுகளையும், புனையப்பட்ட கருத்தமைவுகளையும் புரிந்துகொள்வதற்கு இன்றைய புதிய சிந்தனைகள் அடித்தளமாய் அமைந்துள்ளன. இப்புதிய சிந்தனைகள் வழிப் புரிந்து கொள்ளப்பட்ட ஒன்றே பெண்ணியமாகும். பெண்களுக்குச் சமூகத்தில் உரிய இடம் மறுக்கப்பட்டதை வெளிப்படுத்தி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. ஆண்– பெண் இருப்பு சமூகத்தில் எப்படி கட்டமைக்கப்படுகிறது? என்பதே பெண்ணியத்தின் மையக் கருத்தாக அமைந்துள்ளது. இந்தச் சமுதாயம் ஆணை எவ்வாறு ஏற்றுக் கொள்கிறது? பெண் எங்கு தடை செய்யப்படுகின்றாள்? எங்கு அவள் உரிமை மறுக்கப்படுகிறது? எங்கு அவளுடைய சுதந்திரம் பறி போகிறது? என்ற கேள்விகளுக்குப் பதில் ஒரு ஆணை மையமாகக் கொண்டே கூற முடிகின்றது. ஏனென்றால் பெண் என்பவள் பல நூற்றாண்டுகளாக ஆணின் பார்வையிலேயே சித்தரிக்கப்பட்டவள். இன்றைய சமூக அமைப்பில் பெண்களை அடிமைப்படுத்துவதற்கு முதன்மையாகப் பயன்படுவது குடும்பம் என்ற அமைப்பு எனப் பெண்ணியவாதிகள் நம்புகின்றனர். குடும்பம் என்பது ஒரு அதிகார உறவுகளின் படிநிலை கொண்ட (தலைவன், தலைவி, குழந்தைகள்) ஆணாதிக்கத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு அமைப்பு முறையாகும். காலம் காலமாகக் குடும்பச் சூழலில் சிக்கி வீட்டு வேலைகளில் உழன்று கொண்டிருக்கும் ஒவ்வொரு பெண்ணும், அதிலிருந்து விடுபட முடியாதபடி பொருளாதார உரிமையின்மை, பெற்றோரைச் சார்ந்து வாழும்படி கட்டமைக்கப்படும் சமூக ஒழுக்கம், பெண்கள் தன்னெழுச்சி பெறுவதை அனுமதிக்காத சாதிய குடும்ப அமைப்பு முதலியவற்றின் காரணமாக பெண்ணின் சுய அறிவும், இயல்பும் சுதந்திரமானதோர் ஆளுமை பெற்று விடாதவண்ணம் கணவனும், புகுந்த இடமும் அடக்குகின்றன. இன்றைய சமூக அமைப்பின் அடிப்படை அலகாகக் குடும்பம் என்ற நிறுவனம் செயல்படுகின்றது. இச்சமூகம் தொடர்ந்து தன்னை மறு உற்பத்தி செய்து கொண்டு நிலை பெறுவதற்குக் குடும்பம் என்ற நிறுவனம் அவசியமாகின்றது. தந்தை வழிச்சமூகத்தின் அதிகார அமைப்புக்குள் அடங்கிய புனிதத்தன்மை வாய்ந்த நிறுவனம் குடும்பமாகும். மரபு ரீதியான கருத்தாக்கங்கள் ஆணாதிக்கச் சமூக அமைப்பில் பெண்கள் தாம் ஒடுக்கப்படுகின்ற ஜீவிகளாக இருப்பதை உணராமல் தடுக்கின்ற திரைகளாக அமைகின்றன. 'பிள்ளை பெறுதல், ஆக்கிப் போடுதல்' என்பதே பெண்களின் வாழ்வியல் கடமை என்று சமூகத்தால் விதிக்கப்பட்டு விட்டது. இதில் ஆக்கிப் போடுதல் என்னும் கடமையே பெண்களின் இருப்பிடத்தைத் தீர்மானிக்கின்றன. இதனால் ஆக்கிப் போடுதலோடு தொடர்புடைய 'சமையலறை' பெண்களின் இருப்பிடமாகக் கருதப்பட்டன. சமையலறை பெண்களுக்கு உரித்தாகியும் ஆண்கள் நுழையக் கூடாத இடமாகவும் தீர்மானிக்கப்பட்டன. இன்றைய நிலையில் பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரச் சுதந்திரம் பெற்ற நிலையிலும் சமையலறை பெண்களுக்குரிய இடமாகவே கருதப்படுகின்றது என்பதே யதார்த்தம் ஆகும்.

# பெண்ணுரிமையைப் பாதுகாப்போம்




பெண்களுக்கு உரிமை கிடைக்கப் போராடுவோம். வாருங்கள் பெண்களே. நமக்கு முதல் எதிரி ஆண்கள் தான். ஆண்களை எதிர்த்துப் போராடுவோம். பெண்ணுரிமை வாழ்க! ஆண்கள் ஒழிக! ஆண்கள் ஒழிக!! இன்று இதுதான் பெண்ணுரிமைக்காக போராடும் பெரும்பாலான அமைப்புகளின் கோஷமாக உள்ளது. பெண்ணுரிமை என்றாலே அது ஆண்களுக்கு எதிரானது என்பதற்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது. இந்த வகையான தவறான புரிதல்தான் ஆணுக்கும் பெண்ணுக்குமான கருத்து வேறுபாட்டையும் அதிகார மனப்பான்மையையும் அதிகரிக்குது. அதாவது சமுதாயத்துல பெண்களின் உரிமைகளுக்காக போராடனுமேயொழிய, ஆண்களை எதிரியா நினைத்துப் போராடுவதில் தான் அடிப்படைத் தவறே உள்ளது.

பெண்களை சக மனுஷியா நடத்தும் அவர்களது, உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கும் ஆண்களும் இருக்கத்தான் செய்கிறார் கள். அதே சமயம் பெண்கள் தாழ்ந்து தான் இருக்க வேண்டும் என்று அடிமைப் படுத்தும் பெண்களும் சமூகத்தில் இருக் கிறார்கள். வார்த்தைக்கு வார்த்தை விதண்டாவாதம் போட்டு சண்டை போடுவதும் எதிர்த்துப் பேசுவதும் பெண்ணுரிமை கிடையாது. சமுதாயத்தில் கல்வித் தகுதிய மேம்படுத்திக் கொண்டு வெளியேறி, அலுவலகத்தில் வேலை பார்த்து, தனக்கான, தனது குடும்பத்துக்கான முன்னேற்றத்துக்கு பாடுபடும் ஆண் பெண் இரண்டு பேருக்குமே சம பொறுப்பு இருக்க வேண்டும். நீ பெரியவனா. நான் பெரியவளா? என்பதற்கு வாக்குவாதம் வலுப் பெறும் போது அந்த இடத்துல சமநிலை வரவே வராது. பெண் சராசரி உணர்வுகளும் உணர்ச்சி களும் நிறைந்த தனிப்பட்ட, சக மனுஷி என்பதை புரிய வேணடும். தனக்குரிய எல்லா உரிமை களும் கடமைகளும் அவளுக்கும் உண்டு என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். குறை சொல்லியும் தாழ்த்தியும் பெண்களை மட்டப்படுத்தாமல் சகஜமாக ஏற்றுக் கொள்ளும் பக்குவம் பரவலாக ஆண்களிடம் பேச வேண்டும். பெண்ணுரிமை, ஆணுரிமை என்பது தனிப் பட்ட ஆணுக்கும் பெண்ணுக்கு நடுவில் மட்டும் நடக்கும் சண்டை கிடையாது. அது ஒரு சமூ கம் சார்ந்தது. சமூக அங்கீகாரம் என்பது இருவருக்குமே கிடைக்க வேண்டும். அடிமைப் பட்டுக் கிடக்கும் ஆண்களும் உண்டு பெண்களும் உண்டு. யாரிடம், எதனிடம் என்பதில் தான் இருக்கு கேள்வி. சிலர் எதிர்பாலினரிடமாக இருக்கலாம். சிலர் பொதுவான ஏதாவதொரு விடயத்திலிருக்கலாம். அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளுக்காகவும் ஜாதி.. மதம். குடும்பப் பின்னணி. சுயநிரூபனம். கல்வி தொடர்பான உரிமைகளுக்காகவுமாக இருக் கலாம். அடிப்படைப் புரிதல் சரியானதாக இருக்கும்பட்சத்தில், பெண்ணுரிமையோ ஆணு ரிமையோ. இருபாலினரும் தாராளமாக இணைந்து போராடலாம்.



# வர்ணம் தீட்டலாம் வாங்க...







# நன்மைக்கு நன்மையே நடக்கும்

ஒரு நாள் கந்தன் தந்தையுடன் மலைகள் இருந்த பகுதி ஒன்றில் நடந்து சென்றுகொண்டிருந்தான்.அப்போது கால் தடுக்கி விழ நேரிட்டது...வலியால் 'ஆ'எனக் குரல் கொடுத்தான்.. 'ஆ' என எதிரொலியும் கேட்டது... கந்தனுக்கு ஒரே ஆச்சரியம்..'யார் நீ 'என்றான் பதிலுக்கு 'யார் நீ' என்று கேட்டது. 'உன்னை பாராட்டுகிறேன்; என்றான். அதுவும் அப்படியே கூறிற்று. அப்பாவிடம் கந்தன்..'அப்பா..என்ன இது;என்றான். அவன் அப்பா சொன்னார்..'கந்தா..இதன் பெயர் எதிரொலி' ஆகும். உண்மையில் நாம் என்ன சொல்கிறோமோ..அதையே அது திரும்பச்சொல்லும். நீ இப்போது..'நீ சொல்கிறபடி செய்கிறேன்' என்று சொல் என்றார்..கந்தனும் ..அப்படியே சொல்ல..திரும்ப எதிரொலியும் 'நீ சொல்கிறபடி செய்கிறேன் 'என்றது. கந்தா...இதிலிருந்து தெரிந்து கொள்..நல்லதோ..தீமையோ எது நாம் செய்தாலும் அதுவே நமக்குத் திரும்ப நடக்கும். இதைத்தான் இந்த எதிரொலி உணர்த்துகிறது. ஆகவே எப்போதும் நாம் அனைவருக்கும் நல்லதையே செய்ய வேண்டும் என்றார்.

# வேண்டும்!



கன்னித் தமிழ் மொழியினிலே
பேசிட வேண்டும்– அதைக்
கருத்துடனே படித்து வளம்
பெருக்கிட வேண்டும்!

உலக மறை திருக்குறளை
உணர்ந்திட வேண்டும்!–அதை
உள்ளத்திலே பதித்துப் பலன்
கண்டிட வேண்டும்!

தெள்ளு தமிழ் கம்பன் கவி
தெரிந்திட வேண்டும்!–அதைத்
தெளிவுடனே பயின்று இன்பம்
அடைந்திட வேண்டும்!

ஆய கலைகள் கற்க என்றும்
முயன்றிட வேண்டும்!–அதைத்
தூய மனதில் நிறுத்தி தினம்
தெளிவுற வேண்டும்!

# வெற்றிக்கும், ஆசைக்குமான வித்தியாசம்



எவர் ஒருவர் தன்னுடைய இலக்கை மிகக்குறைந்த காலத்தில் அடைகிறாரோ அதுவே அவருடைய வெற்றியாகும். உதாரணமாக 20 வயது இளைஞன், 'தான் ஒரு கார் வாங்கவேண்டுமென்று' ஒரு குறிக்கோளை வைத்துக் கொள்கிறான். எப்போது அதை நிறைவேற்றுவான்? என்கிற கேள்வி வருகிறது. 25 வயதில்... 30 வயதில்... 40 வயதில்... இப்படிக் காலவரையறை இல்லாமல் குறிக்கோளை வைத்துக்கொள்வதில் எவ்வித அர்த்தமுமில்லை. அதாவது 5 ஆண்டுகளில் அவன் நிறைவேற்றினால் அது வெற்றி. 25 ஆண்டுகளில் அதை நிறைவேற்றினால் அதற்குப் பெயர் ஆசை. கால வரையறை கொண்ட எந்தச் செயலும் வெற்றிக்கான குறிக்கோளாகும். கால வரையறையற்ற அல்லது அதிக காலம் கொண்டு செய்யும் செயல் ஆசை எனலாம். வெற்றிக்கு முழு முயற்சி, அறிவும், திறமையும், கடின உழைப்பும், ஆர்வமும் இருக்கும். தோல்வி ஏற்பட்டாலும் மீண்டும் மீண்டும் முயற்சித்து வெற்றி அடைந்தே தீருவர். ஆனால் ஆசைப்பட்டதை அடைவதற்கு மேற்கூறிய வைகள் அவ்வளவாகத் தேவைபடாது. ஆசையை அடைந்தாலும் பெரிதாக மகிழ மாட் டார்கள். அடையாவிட்டாலும் அதிகமாக அலட்டிக்கொள்ள மாட்டார்கள். கிடைக்கும் வரை லாபம் என்கிற மனப்பான்மையே இருக்கும். தினமும் கடின உழைப்பின் மூலம் ஒரு படி மேலே ஏறு கிறவனால் மட்டுமே, தான் இருக்கும் இடத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியும். ஏதாவது காரணத்தினால் மேலே முயற்சிப்பதை நிறுத்தினாலோ அல்லது முய லாமல் முன் வைத்த காலைப் பின் வாங்கிவிட்டாலோ அவன் வாழ்கையில் முன்னேறுவது கஷ்டம்தான். அதே போல் எவர் ஒருவர் புதிய புதிய முயற்சி களை சோதித்து பார்க் கின்றனரோ, வித்தியாசமாய் செய்ய வேண்டு மென்று கடுமையாய் முயல்கின்றனரோ அவர்களுக்குத் தான் மிகப் பெரிய வெற்றி காத்திருக்கிறது.

அதேபோல் நான் எப்படியும் முயன்று என்னு டைய குறிக்கோளை அடைந்தே தீருவேன் என் கிற தன்னம்பிக்கையும் துணிச்சலும் வேண்டும். துணிச்சல் இல்லாமல் சாதனை செய்யமுடியாது. சரித்திரம் படைக்கமுடியாது. அதாவது உனது திட்டம் என்ற கயிற்றை குறிக்கோளில் கட்டி விடு. உனது முயற்சி, தன்னம்பிக்கை, விடாமுயற்சி கொண்டு, அறிவையும் ஆற்றலையும் பயன் படுத்தி அந்தக் கையிற்றை தினமும் மெல்ல மெல்ல இழு. தானாகவே நீ உனது குறிக் கோளை அடைந்து விடுவாய்! வெற்றிக்கு எப்போதும் முடிவே இல்லை! தோல்விகள் எப்போதும் முடிவும் அல்ல! ஆசைப்படுவதை விட குறிக்கோள் கொள். அது உன் முன்னேற்றத்திற்கு உதவி செய்யும்.



# கிறிஸ்மஸ் தீவு அகதி முகாமில் ஈழ அகதி மாரடைப்பால் சாவு

சிட்னி, ஏப்.17

ஆஸ்திரேலியா கிறிஸ்மஸ் தீவில் உள்ள கர்ட்டின் அகதி முகாமில் ஈழத்தைச் சேர்ந்த அகதியொருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

50 வயதுடைய இராமையா மகேந்திரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு மே மாதம் படகுப் பயணத்தின் மூலம் புகலிடம் கோரி ஆஸ்திரேலியாவில் அவர் தஞ்சமடைந்தார்.

அதனை அடுத்து அவர் தொடர்ந்து கொக்கோஸ் தீவில் தங்க வைக்கப்பட்டதன் பின்னர் கிறிஸ்மஸ் தீவுக்கு மாற்றப்பட்டு கர்ட்டின் தீவில் தங்க வைக்கப்பட்டார்.

இந்தநிலையில் மாரடைப்பு ஏற்பட்டதன் காரணமாக அவர் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்ட வேளை உயிரிழந்துள்ளார்.

எனினும் ஆஸ்திரேலியாவுக்கு சென்றது முதல் அவருக்கு சரியான முறையிலேயே மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வந்துள்ளதாக சடலத்தைப் பரிசோதனை செய்த அதிகாரி தெரிவித்துள்ளார். (வ)

# மினிசூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவியில்லை

வவுனியா, ஏப்.17

வவுனியா பறநட்டகல் பகுதியில் அண்மையில் மினி சூறாவளியொன்று வீசியது. இதனால் 10 இற்கு மேற்பட்ட வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், தமக்கு அரச உதவிகள் எவையும் கிடைக்கவில்லை என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளன.

மிக வறுமையில் வாடும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமது வீடுகளுக்கான கூரை அமைப்பதற்கு போதிய பொருளாதார வசதியின்றி அவதியுற்று வருகின்றனர். இதனை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை உறுப்பினர், எம்.பி.நடராஜ் ஆகியோர் அடங்கிய குழுவினர் பார்வையிட்டவேளை பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தோர் தமக்கு அரச உதவிகள் எதுவும் கிடைக்காமை தொடர்பாக எடுத்துக் கூறினர். (வ-402)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.17

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாலர் பாடசாலை மைதானத்தில் செ.ருவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினர்களாக கைதடி விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் சு.சிவானந்தம், தென்மராட்சி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி த.சுபத்திராதேவி, கைதடி முத்துக் குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் எஸ்.பவளகுமாரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கந்தையா செல்லையா
திதி சித்திரை அபரபக்க சதுர்த்தசி
17.04.2015

நானிலத்தில் நன்றாய் நாம் வாழ
நல்வழி காட்டிய எம் தந்தையே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 11.11.1926 மறைவு 04.05.2008

சித்தம் பாதி,
கர்ணவாய் தெற்கு, கரவெட்டி

குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



தோற்றம் 17.03.1983

மறைவு 05.03.2015

கடந்த 05.03.2015 சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வம்

### கிருஸ்ணபிள்ளை செல்வகுமார் (குகன்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (18.04.2015) சனிக் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்திய கிரியைகள் அன்று முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துக் கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சர்வோதயா வீதி,
ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால்.

கிருஷ்ணபிள்ளை இராஜமணி (அம்மா)
குகன்பிரியா (மனைவி-பெல்ஜியம்)

## மரண அறிவித்தல்

### தளையசிங்கம் அகத்தியர்

(ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர் ICSC சாஜன்மேஜர்)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், கற்குளி வடக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தளையசிங்கம் அகத்தியர் நேற்று (16.04.2015) வியாழக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குளி வடக்கு,
சாவகச்சேரி.
0771387212, 0779266741

தகவல் :
ஆனந்தராசா (மகன்)

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை கனகசபை

கரவெட்டி கிழக்கைப் பிறப் பிடமாகவும் கவுந்தில் கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கனகசபை நேற்று (16.04.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி -செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சத்தி யசீலன் (அதிபர், யா/கேவில் அ.த.க. பாடசாலை), சத்தியபாமா (கொழும்பு), சத்தியரூபன் (லண்டன்), சத்திய பாலன், தனமதி, சத்தியநாதன் (லண்டன்), யோகரதி ஆகி யோரின் அன்புத் தந்தையும், சுந்தரராஜா (கொழும்பு), சிவசங்கரி, ரஜனி (லண்டன்), சிவாஜினி, ஐங்கரன், பிரதீபன் (பாடசாலைப் பணியாளர், அம்பன் அ.மி.த.க. பாடசாலை), கெங்காதேவி(லண்டன்) ஆகியோரின் மாமனும், சிவக்கொழுந்து, மாணிக்கம் (லண்டன்), வீரகத்தி, சிவராசா, இராஜேஸ்வரி (லண்டன்), சிவபாக்கியம் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர் களான தம்பையா, அன்னலட்சுமி, சிவ பாக்கியம் மற்றும் இராசையா, செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்பி.ப. 2.00 மணியளவில் தகனக் கிரியைக்காக சோணப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கவுந்தில், கரவெட்டி மத்தி, கரவெட்டி.
021 2056400, 077 8463806

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



கலாபூஷணம்

### செல்லர் பொன்னுத்துரை

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கலாபூஷணம் செல்லர் பொன்னுத்துரை (ஓகன் மாஸ்டர், ஓய்வு நிலை பரிசாரகர், யாழ். போதனா வைத்தியசாலை ) நேற்று (16.04.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான செல்லர் சோதி தம்பதிய ரின் கனிஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற செல்வநாயகியின் அன் புக் கண வரும், காலஞ்சென்றவர்களான நாகன்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பிறேமலதாவின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணகுமாரின் மாமனும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மைத்துனரும், காலஞ் சென்றவர்களான அன்னப் பிள்ளை, அம்பலம், நேசமலர் மற்றும் தியாக ராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விதுஷிகா, கஜானன், சுவேதா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2015) வெள்ளிக் கிழமை மு.ப. 11.00 மணிக்கு 186, ஆசீர்வாதப்பர் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

186, ஆசீர்வாதப்பர், வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### அன்னக்கொடித்தேவர் மாயாண்டித்தேவர்

(பார்த்திபன்)(உரிமையாளர், வேல்மீடியா)



தோற்றம்:- 30.10.1960

மறைவு:- 16.04.2015

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், K.K.S வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னக்கொடித்தேவர் மாயாண்டித் தேவர் (பார்த்திபன்) நேற்று (16.04.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னக்கொடித் தேவர் மற்றும் பேச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், திருமதி மகேஸ்வரி தேவியின் அன்புக் கணவரும், நிக்ஷலா (JNCOE), வேணிதன், ஜீவிதன் (யா/நா.ம.வி), தர்னிதன் (யா/கொ.இ.க) ஆகி யோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் சறோஜா, சண்முகவல்லி, ரோகினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், உதயகுமார், சங்கரலிங்கம் காலஞ்சென்றவர்களான நிசலிங்கம் இலங்கேஸ்வரன் மற்றும் K. கங்காதரன் தாமோதரம், சொக்கலிங்கம், கிருஷ்ணா, வாகீசன் ஆகியோரின் மைத்துனரும், தர்ஷிகா, கீர்த்தனா, தரன்சிகா,தர்சிகன், வசுந்தரா, சிவருக்ஷன் அஜிகரன், சரண்யன், யாதவி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2015) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.59/1, K.K.S வீதி, கொக்குவில்
மேற்கு கொக்குவில். 0773604424

தகவல்:
குடும்பத்தினர்.

காணி விற்பனைக்கு
மானிப்பாய், கனகசபை வீதியில் அமைந்துள்ள 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 670 1233

முன்பள்ளி ஆசிரியர் தேவை
உடுப்பிட்டி கிட்ஸ் பார்க்
உரிய ஆவணங்களுடன் 21.04.2015 முற்பகல் 11.30 மணிக்கு நேரில் வரவும்.
தொடர்பு:- 077 6565258

வீடு வாடகைக்கு
திருநெல்வேலி (பாம்ஸ்கூல்) முன்பாக பலாலி வீதியில் (C.E.B) சுற்றுலா விடுதிக்கு வடக்கில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடு வாடகைக்கு வழங்கப்படும்.
தொடர்பு: 071 841 4142 (58893) (45.3.7)

முன்பள்ளி ஆசிரியர் தேவை
(திருநெல்வேலி சிமாட்கிட்ஸ்
(ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
ஆங்கிலம் மற்றும் பொது பாடநெறி களுக்கு உரிய ஆவணங்களுடன் 20.04.2015 முற்பகல் 11.30 மணிக்கு நேரில்வரவும்.
தொ.பே. 077 386 7458, 021 205 2262
(58893) (45.3.7)

# விக்ரோறியின் கிண்ணத்தை வென்றது ஆவரங்கால் மத்தி



யாழ்ப்பாணம், ஏப். 17
மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகம் அமரர் சி.ராகவன் ஞாபகார்த்தமாக நடத்திய கரப்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மூளாய் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. தொடரின் சில லீக் ஆட்டங்களில் இந்த இரண்டு அணிகளின் திரில் ஆட்டத்தை ருசித்த காரணத்தி னால் திரில் ஆட்டம் ஒன்றுக்காக மைதானத்தில் ரசிகர்கள் காத்துக்கிடந்தனர். ஐந்து செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதலா வது சுற்றை வசந்த ஸ்ரீ 25:23 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது சுற்றை ஆவரங்கால் 25:19 என்ற அடிப்படையில் கைப் பற்ற முதல் இரண்டு செற்களின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு செற்களைக் கைப் பற்றியிருந்தன.

ஆட்டத்தில் பதற்றம் பற்றிக்கொள்ள ஆரம்பமாகின மிகுதி செற்களும். மூன்றாவது செற்றை ஆவரங்கால் 25:23 என்று கைப்பற்ற அந்த அணி 2:1 என்ற அடிப்படையில் ஆட்டத்தில் முன்னிலை பெறத் தொடங்கியது. வசந்த ஸ்ரீ அணிக்கு வாழ்வா சாவா நிலைமையில் ஆரம்பமானது ஆட்டத்தின் நான்காவது செற். நான்காவது ஆவரங்கால் ஹற்றிக்காக கைப்பற்ற ஆட்டத்தில் 3:1 (23:25, 25:19, 25:23, 25:23) என்ற அடிப்படையில் ஆதிக்கம் செலுத்திக் கிண்ணத்தைக் கொண்டு சென்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம். (த-ரி)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப்.17
யாழ்ப்பாணம் கல்விவலய பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத்தொடரின் 19 வயதுப்பிரிவினருக்கான இறுதியாட்டம் இன்று யாழ்.இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 3மணிக்கு மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்.திருக்குடும்ப கன்னி யர் மட அணியை எதிர்த்து யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அணி மோத வுள்ளது. இதேவேளை மாலை 5 மணிக்கு நடைபெறும் ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி மோதவுள்ளது.

.................................................

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர்பங்கு பற்றும் உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள்; கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொட ரில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் மாலை 3.30 மணிக்கு பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

.................................................

கைதடி நவபுரம் நவசனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நவசக்தி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக மின்ஒளியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நவசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-ரி-23)

# எல்லே கிண்ணத்தைக் கைப்பற்றின பாரதி, குமிழமுனை அணிகள்

மாங்குளம், ஏப். 17
முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான எல்லே தொடரின் 19 வயது ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் விசுவமடு பாரதி வித்தியாலய அணியை எதிர்த்து வித்தியானந்தா அணி மோதியது.

பாரதி வித்தியாலய அணியின் களத்தடுப்பால் ஓட்டங்களை எடுப்பதில் வித்தியானந்தா அணியினர் சிரமப்பட்டு ஒருவாறு மூன்று ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாரதி அணியினர் முதலில் ஓட்டம் எடுப்பதில் சிரமப்பட்டபோதிலும் 8ஆவது, 12ஆவது, 14ஆவது, 20ஆவது பந்துகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 4 ஓட்டங்களைப் பெற்று சம்பியனாகியது. 3 ஆம் இடத்தை வெலிஓயா எதஸ்வெள மகாவித்தியாலய அணி பெற்றுக் கொண்டது.

19 வயது பெண்களுக்கான இறுதியாட்டத்தில் குமிழமுனை மகாவித்தியாலய அணியை எதிர்த்து வெலிஓயா எதஸ்வெள மகாவித்தியாலய அணி மோதியது. இதில் குமிழமுனை அணியின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் வெலிஓயா அணியினர் திண்டாடினர். இதனால் நிர்ணயிக்கப்பட்ட 25 பந்துகளில் 8 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் இருந்தது.

பதிலுக்கு களம் இறங்கிய வெலிஓயா அணி ஓட்டங்களை எடுப்பதற்கு சிரமப்பட்டது. இதனால் அவர்களது இலக்குகளும் மளமளவென சரியத் தொடங்க நிர்ணயிக்கப்பட்ட 25 பந்துகளில் 3 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. 3ஆம் இடத்தை விசுவமடு பாரதி வித்தியாலய அணி பெற்றுக்கொண்டது. (ரி-422)

# இந்திரா இமாலய வெற்றி



யாழ்ப்பாணம், ஏப். 17
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்திரா விளையாட்டுக் கழகம் 37 ஓட்டங்களால் வெற்றிபெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட இந்தத் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்திரா விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு பல்லைசுட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும் மோதின. முதலில் துடுப் பெடுத் தாடிய கொக்குவில் இந்திரா அணி நிர்ணயிக்கப்பட்ட 7 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைக் குவித்தது. 42 பந்துகளில் 105 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பல்லைசுட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணி ஆரம் பத்திலிருந்து சற்று தடுமாறவே செய்தது. இந்திரா அணியின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க காந்தி ஜியின் தோல்வி படிப்படியாக உறுதியாக ஆரம்பித்தது. முடிவில் பல்லைசுட்டி காந்திஜி அணி 37 ஓட்டங்களில் சுருண்டது. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகனாக இந்திரா அணியின் பானுவும் தொட ராட்ட நாயகனாக பல்லைசுட்டி காந்திஜி கழகத்தைச் சேர்ந்த வின்சனும் தெரிவானார்கள். சம்பியனான அணிக்கான கிண்ணத்தையும் ஏனைய கௌரவிப்பு விருது களையும் இறுதியாட்டத்தின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வழங்கிக் கௌரவித்தார். (த-ரி-4)

# ஐ.பி.எல்லாக மாறியது ஆசியக் கிண்ணம்

ஆசியாக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் காலங்களில் 'ரி-20' தொடராக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஆசியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

1984 ஆம் ஆண்டிலிருந்து ஆசியக் கிண்ணத் தொடர் 50 பந்துப்பரிமாற்றங்களாக நடைபெற்று வந்தது. இந்த நிலையில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஆசியக் கிண்ணத் தொடர் 'ரி-20' தொடராக அமையும் என்று உத்தியோகபூர்வமாக ஆசிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இறுதியாக நடைபெற்ற ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் ஆகிய நாடுகளுடன் ஆப்கானிஸ்தானும் இடம்பெற்றுக் கொண்டது. எதிர்வரும் காலங்களில் ரி-20 முறையில் நடைபெற இருப்பதனால் 'ரி-20' அங்கத்துவம் பெற்ற ஐ.அ.இராச்சியம், ஹொங்கொங், நேபாளம் ஆகிய நாடுகளும் ஆசியக்கிண்ணத் தொடரில் இணைக்கப்படலாம் என்று பரவலான எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. (த-ரி)

# வல்வை மரணஅடி றேஞ்சர்ஸ் அபாரம்



யாழ்ப்பாணம்,ஏப். 17
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர்பங்கு பற்றும்; உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலையங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கழுகுகள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் வல்வை விளையாட்டுக்கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-ரி-23)

## எவ்.ஏ கிண்ணத் தொடரில் கில்லறி அபாரமாக வெற்றி

எவ்.ஏ. கிண்ணத்துக்கான நாடளாவிய உதைபந்தாட்டத் தொடரின் மன்னார் மாவட்ட ஆட்டமொன்றில் சென்.அன்ரனிஸை இலகுவாக வீழ்த்தியது கில்லறி அணி.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் ஏவ்.ஏ கிண்ணத்துக்காக நாடளாவிய ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் மன்னார் உதைபந்தாட்டலீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆட்டமொன்றில் மன்னார் சாவற் கட்டு கில்லறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-ரி-23)




# ரஹானேயினால் தப்பியது ராஜஸ்தான்



குல்கர்னியினதும் ரம்பியினதும் கட்டுக்கோப்பான பந்துவீச்சும் ரஹானேயின் நிதான ஆட்டமும் கைகொடுக்க ஹைதரபாத்தை இலகுவாக வீழ்த்தி வெற்றி பெற்றது ராஜஸ்தான்.

ராஜஸ்தான் எதிர் ஹைதரபாத் அணிகளுக்கிடையிலான ஆட்டம். அனைத்து வீரர்களும் திறனில் நின்று அசத்திக்கொண்டிருக்கும் அணி ராஜஸ்தான். பலமிக்க பெங்களூருக்கே தண்ணிகாட்டிய அணி ஹைதரபாத். இரண்டும் பலம் பொருந்திய அணிகள் என்பதில் சந்தேகமில்லை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. கள வியூகங்கள் கச்சிதமாக அமைந்திருந்தது. ஆஸி அணித்தலைவர் என்பதை சிமித் மீண்டும் ஒரு தடவை நிரூபித்தார். ஹைதராபாத்தின் அதிரடி வீரர்கள் எல்லைக்கு பந்தை விரட்டுவதில் அல்லோலகல்லோலப்பட்டனர். தவான் டெஸ்ட் பாணியில் ஆடிக்கொண்டிருந்தார். வோர்ணரின் ஆட்டமும் எடுபடவில்லை. ராகுல் வந்த வேகத்தில் திரும்ப ஹைதராபாத் 35–3. மத்திய வீரர்களின் ஆட்டமும் சொல்லிக் கொள்ளும் படியாக அமையவில்லை. பெற்ற ஓட்டங்களைவிட வீணடிக்கப்பட்ட பந்துகளின் எண்ணிக்கை அதிகமாகவே இருந்தது. இந்த நிலைமை தொடர முடிவில் ஹைதரபாத் 125–5.

126 ஓட்டங்கள் ராஜஸ்தானுக்கு ஒரு இலக்கேயில்லை. வெற்றி பெறும் என்ற முடிவு ராஜஸ்தானின் இன்னிங்ஸ் ஆரம்பமாகும் முன்னரே எடுக்கப்பட்டுவிட்டது. அதற்கேற்ப நன்கு திட்டமிட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள் ரஹானேயும் சாம்சனும். அதிரடி என்று கூறிவிட முடியாது. ஆனால் வெற்றி பெறுவதற்கு ஏற்ற சராசரி. இணைப்பாட்டமாக 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுது சாம்சன் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த சிமித் நேற்றைய ஆட்டத்தில் ராஜஸ்தானை கைவிட்டுச்சென்றார். ராஜஸ்தான் சற்று தடுமாறினாலும் ஒருமுனையில் ரஹானே பொறுமையாக ஆடி அரைச்சதத்தை கடந்து நம்பிக்கை கொடுத்தார். ரஹானே ஆட்டமிழந்ததும் ஆட்டத்தின் போக்கு அப்படியே தலைகீழானது. ஹைதராபாத்தின் பக்கமும் காற்று வீசத் தொடங்கியது. இலகுவாகக் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட வெற்றியை தட்டித்தடுமாறி இறுதிப் பந்திலேயே எட்டியது ராஜஸ்தான். (ரி)


# மும்பைக்கு நெருக்கடி



ஐ.பி.எல். லீக் ஆட்டமொன்றில் காயமடைந்த பிஞ்ச் தொடரில் இருந்து விலகும் வாய்ப்பு ஏற்படலாம் என்று ருவிட்டரில் கவலை தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தின் போது மும்பை இந்தியன்ஸ் வீரரான அரோன் பிஞ்ச் (ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்) காயமடைந்தார். இடது காலில் தசைப்பிடிப்பால் பாதிக்கப்பட்ட அவருக்கு நேற்று 'ஸ்கேன்' எடுத்து பார்க்கப்பட்டது. இதன்போது பின்ஞ் சற்று அதிக நாள்கள் ஓய்வில் இருக்க வேண்டும் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பிஞ்ச் 'பாதிப்பு கொஞ்சம் அதிகம்தான். இப்போதைக்கு எஞ்சிய ஐ.பி.எல். ஆட்டங்களில் விளையாடுவதற்கு வாய்ப்பு இருப்பது போல் தெரியவில்லை' என்று தனது ருவிட்டர் பக்கத்தில் வேதனையுடன் குறிப்பிட்டிருக்கிறார். (த–ரி)

# ரோகித்தை வைத்து மும்பை தொடர் வியூகம்



நடப்பு ஐ.பி.எல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணி தொடர்ந்து தடுமாறிவரும் நிலையில் மும்பையின் துடுப்பாட்ட வரிசையைப் பலப்படுத்த அணித்தலைவர் ரோகித் சர்மாவை ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தைப்போல் தொடர்ந்து மத்திய வரிசையில் களமிறக்க பரிசீலித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடப்பு ஐ.பி.எல் தொடரில் இது வரைகாலமும் இல்லாத அளவுக்கு மும்பையின் துடுப்பாட்டம் மிகவும் பலவீனமாக உள்ளது. ஒரு ஆட்டத்தில் எவராவது ஒரு வீரர் மட்டுமே அணியைக் கொண்டு செல்கிறார். முதலாவது ஆட்டத்தில் கொல்கத்தா அணிக்கு எதிராக ரோகித் சர்மா 98 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் மும்பை 168 ஓட்டங்களைக் குவித்தது. ஆனால், பஞ்சாப் அணிக்கு எதிராக டக் அவுட் ஆனார். இதனால் மும்பை 59 ஓட்டங்களை எடுப்பதற்குள் 6 இலக்குகளை இழந்து தத்தளித்தது. இதனை வைத்துப்பார்க்கும்பொழுது ரோகித் தொடக்க வீரராக களம் இறங்கி ஓட்டங்களைக் குவிக்கும் பட்சத்தில் மும்பை அதிக ஓட்டங்களைப் பெறுகின்றது. சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தால் மும்பை தத்தளிக்கிறது என்பது தெளிவாகின்றது. இதனால் சர்மாவை மத்திய வரிசை வீரராக களம் இறக்க பயிற்சியாளர் பொண்டிங் விரும்புகிறார். இதனை சச்சினும் ஆமோதித்துள்ளார். ரோகித் தொடக்க வீரராக உருவெடுப்பதற்கும் சச்சினும் பொண்டிங்குமே காரணமாக இருந்தனர். ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்த வியூகத்தைப் பரிசோதிக்கும் விதமாக ரோகித் மத்திய வரிசையில் களமிறங்கினார். ஆனால் 'டக்'கில் ஆட்டமிழந்தார். இதனால் சர்மாவை வைத்து அமைக்கப்பட்ட மத்திய வியூகம் தொடர்ந்தும் கைகொடுக்குமா என்பது சந்தேகமே. (த–ரி)

# சென்னையின் கொட்டம் அடக்கிவிடுமா மும்பை?



நடப்பு ஐ.பி.எல் தொடரின் இன்றைய லீக் ஆட்டங்களில் சென்னை மற்றும் மும்பை அணிகள் பலப்பரீட்சை செய்யவுள்ளன. நடப்பு ஐ.பி.எல் தொடரில் எதிர்கொண்ட அனைத்து ஆட்டங்களிலும் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் முதலாவது இடத்தில் உள்ள அணியாக சென்னையும் அனைத்து ஆட்டங்களிலும் தோல்வி கண்டு புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் உள்ள அணியாக மும்பையும் உள்ளன.

மும்பையின் தோல்விகளை வைத்து அந்த அணியை இலகு வாக எந்த அணியும் ஊதித் தள்ளி விடும் என்று நினைப்பது பெரும் தவறு. ஏனெனில் கடந்தகால ஐ.பி.எல் வரலாறுகளில் புள்ளிப்பட்டியலில் எங்கோ ஒரு மூலையில் எட்டாப் பொருத்தத்தில் இருந்த மும்பை தொடரின் இறுதி ஆட்டங்களில் அசத்தல் வெற்றிகளுடன் அடுத்த சுற்றுக்கு முன்னேறியிருப்பது மறக்க முடியாத ஒன்று. நடப்பு தொடரில் மும்பை தடுமாறுகிறது என்று பார்த்தால் நீண்டகாலமாக உடற்தகுதி இல்லாமல் அவதிப்பட்ட ஹர்பஜன்சிங், பொலார்ட், அண்டர்சன், மலிங்க ஆகியோர் உடற் தகுதிக்குத் திரும்பிவிட்டனர். எனவே இவற்றையெல்லாம் வைத்துப்பார்க்கும் போது முப்பையின் மூர்க்கத்தனமான ஆட்டத்துக்கு நேரம் வந்ததைப்போல தோன்றுகின்றது.

மறுபுறம் தமிழ் அணியான சென்னை. சென்னையின் நிலைமையைச் சற்று அலசினால் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று மூன்றையும் கலந்து கச்சிதமாகக் காட்டிக்கொண்டிருக்கிறது சென்னை. துடுப்பாட்டத்தின் சிறந்த நிலையில் மக்கலம், டோனி; பிளசிஸ், ரெய்னா போன்றவர்கள் உள்ளனர். மேற்கிந்தியத்தீவுகளின் சிமித் சற்று திறனற்ற தன்மையில் உள்ளார். பந்துவீச்சில் மோகித் சர்மாவும் நெஹ்ராவும் எதிரணியை ஆட்டிப் படைக்கின்றனர். சகலதுறைகளிலும் பலம் காட்ட ஜடேஜா, அஸ்வின், பிராவோ போன்றவர்கள் உள்ளனர். இவர்களுடன் மற்றொரு சகலதுறை வீரரான இர்பான் பதான் இணைந்தால் 'இப் படைதோற்கின் எப்படை வெல்லும்' என்றே எண்ணத் தோன்றுகின்றது. (த–ரி)

# வலுவான நிலையில் இங்கிலாந்து



மேற்கிந்தியத் தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 245 ஓட்டங்கள் முன்னிலையுடன்வலுவானநிலையில் உள்ளது.

மே.தீவுகள் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டம் மே.தீவுகளில் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி இங்கிலாந்துஅணி முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 399 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தீவுகள் தொடக்கத்தில் சிறப்பாகச் செயற்பட்டு இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 155–4 என்ற நிலையில் இருந்தது. இந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்துக்காக களமிறங்கியது தீவுகள். வதை மன்னன் சந்திரபோல் அரைச்சதத்தை தவறவிட்டு ஆட்டமிழந்தார். ஆனால் பிளக்வூட் நங்கூரம் போட்டு நின்று கொண்டிருந்தார். பிளக்வூட்டுக்கு கைகொடுக்க பின்வரிசை வீரர்கள் எவரும் தயாராக இல்லை. ரம்டின், ரோச், ரெய்லர் என்று அனைவரும் ஒற்றையிலக்கங்களுடன் ஓடி மறைந்தனர். ஒரு முனையில் இலக்குகள் விழுந்தாலும் ஓட்டங் களைக் குவித்துக்கொண்டிருந்தார் பிளக்வூட். ஒருவாறு சதத்தை எட்டினார். பிளக்வூட் ஆட்ட மிழக்காது நின்றாலும் மறுமுனையில் இலக்கு கள் சரிந்து முடிந்தன. முடிவில் தீவுகள் சகல இலக்குகளையும் இழந்து 295 ஓட்டங்களை மட்டுமே பெற்று 104 ஓட்டங்களால் பின்தங்கியது.

104 ஓட்டங்கள் முன்னிலை என்ற பலமான நிலையுடன் களமிறங்கியது இங்கிலாந்து. வழக்கம்போல குக்கும் ருரொட்டும் ஏமாற்றவே செய்தனர். முதல் இன்னிங்ஸில் சதமடித்த பெல் 11 ஓட்டங்களுடன் ரன்அவுட் ஆனார். பலன்ஸுடன் இணைந்த ரூட் பலமான இணைப்பாட்டம் அமைத்தார். பலன்ஸ் அரைச் சதம் கடந்து 56 ஓட்டங்களு டனும் ரூட் அரைச்சதத்தை நோக்கி 45 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். மூன்றாம்நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 141–3 என்ற ஓட்டங்களுடன் 245 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. (ரி)


## தவறிவிட்டது

ராஜேந்திரா மாகரன் ஆகிய எனது கைத் தொலைபேசி, தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ், ரக்ஸ், JOP IC, IESL IC, என்பன யாழ்ப்பாணம் முல் லைத்தீவு வீதியில் தவறிவிட்டது கண்டெடுத் தவர்கள் தந்துதவவும் சன்மானம் வழங்கப் படும்.

தொடர்பு:- 0773660790

JAFFNA FUN FAIR CARNIVAL

...க் குதூகலம், 2015'

...ட மற்றும் விநோத நிகழ்வுகள்

எதிர்வரும் சித்திரை வசந்தம்

23 24 25 26 திகதிகளில்

...நகரசபை திறந்தவெளி மைதானத்தில்"

...unicipal Ground - Jaffna (Opp. Subramanium Park)

...u 2.00 மணிமுதல் இரவு 12.00 மணிவரை

Official Print Media Sponsor தினக்குரல்

Event Organizer SC CREATIONS

... அழைக்கவும்: Vimal on 077 913 1735 / Susantha on 077 229 8014

## வெளிவாரிப் பட்டப்படிப்பை கற்கக் காத்திருக்கும் மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி

- தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் (ஒலுவில்) கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L மூன்று பாடங்களும் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- பதிவுகள் எமது நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. (18.04.2015) சனி காலை 8.00 மணி முதல்....
- பதிவுகளுக்கு மேலதிகமான கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

**NJT பட்டப்படிப்புகள்**

(இல.55, பலாலிறோட், இலுப்பையடிச் சந்தி)

மேலதிக தகவல்களுக்கு 0776624387

## மெமோறியன்ஸ் பழைய மாணவர் சங்கம்

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு-2014/2015

வெற்றி பெற்றோர் விவரம்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | 4571 | ஆறுதல் பரிசு |
| இரண்டாம் பரிசு | 0169 | 1) 5781 2) 4213 3)1073 |
| மூன்றாம் பரிசு | 5243 | 4) 5962 5) 2383 |

அனுசரணையாளர்கள்:

1) ஸ்ரீ சாய்பவன் சைவ உணவகம், யாழ்ப்பாணம்.
2) விநாயகர் பட்டுச்சோலை - மானிப்பாய்.
3) பிறேம் நகைமாடம் - மானிப்பாய்.

அனுசரணையாளர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்

தொடர்புகளுக்கு: 077 1010431 மெமோறியன்ஸ்

யாழ்ப்பாணத்தில்.. பிரவேசம் இலவசம்

## சுகமளிக்கும் நற்செய்திக் கூட்டம்

உள்ளத்தில் சமாதானம் நோயிலிருந்து பில்லி சூனியக்கட்டுக்களிலிருந்து பாவப்பழக்கங்களிலிருந்து விடுதலை பெற்றுக்கொள்ள வாருங்கள்

இயேசுக்கிறிஸ்து உங்களை அன்புடன் அழைக்கின்றார்.

தேவ செய்தி

இயேசுவின் ஊழியங்கள் (uk)

சுவிசேஷகர்கள்

Bro.s.சுபகரன். uk(தொழிலதிபர்)

Sis Mrs. சுபகரன். uk (விஞ்ஞானி)

இடம்:– வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.

காலம்:– 2015 ஏப்ரல்18–19(சனி ஞாயிறு) மாலை 4.00மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

## ஆங்கிலம் கற்பித்தல் ஓர் இல்லத்தொழில்

## Making English Teaching a Home Profession

வடமாகாணக் கல்வி அமைச்சினால் இரு மொழிக் கல்வியில் ஒரு மாற்றீடாக கற்பிக்கப்படக் கூடிய ஒரு கற்கைநெறி என்ற பரிந்துரையின் அடிப்படையில் ஆங்கிலம் கற்பித்தலை ஓர் இல்லச் சுயதொழிலாக கொள்ளமுடியும் என்ற நோக்கில் இவ் ஆங்கிலக் கற்கை நெறியினை உங்களுக்காக நெய்தலம் தொடங்கியிருக்கிறது. கற்றபின்னர் சுயதொழிலாக உங்கள் இல்லங்களிலேயே கற்பிக்கக் கூடிய செயற்திட்டம் இது.

ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி என்:

0770739904

இடம் : கலைக்கோட்டம் (திருமறைக் கலாமன்றம்) டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

கல்வித் தகைமை: O/L படித்தவர்கள்

வயது எல்லை : 18 இக்கு மேற்பட்டவர்கள்

வகுப்புக்கள் இடம்பெறும் காலம்:- கிழமைநாள்கள்

பிரிவு : 1. காலை 8.00 - 10.30

பிரிவு : 2. காலை 10.30-1.00

ஆங்கிலம் கற்பித்தலை ஓர் இல்லத்தொழிலாக்குவோம்!

இயக்குநர், நெய்தலம்.

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு அமைய

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை விசேட இறுதிக் கருத்தரங்கு

காலம்: 18.04.2015 சனி 9.00 - 4.00 மணிவரை

விரிவுரையாளர்

P. உ.மாசங்கர் P. கமல்நாதன்

முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட இறுதி மாதிரி வினாவிடைகள் ஆராயப்படும்.

கட்டணம் : 500/-

**நாவலர் கல்வி நிலையம்**

ஆனைப்பந்தி, யாழ். நகர்.

0774696695

## மெற்றோ தொழிநுட்பக் கல்லூரி

பொருளியற் கல்லூரியின் இணை நிறுவனம்

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

A/L 2017 தொழிநுட்பப்பிரிவு

விசேடமாக உயர் தொழிநுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள் இங்கு வருகைதந்து கற்பிக்கின்றார்கள்

புதிய பிரிவுகள் நாளை ஆரம்பம்

18.04.2015 சனி 8.00 am

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் நவீன வசதிகளுடன் ஆரம்பமாகின்றன.

- A/L 2015, 2016 சனி, ஞாயிறு பிரிவுகள் வழமையான நேரப்படி நடைபெறுகின்றன.
- உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

## வவுனியாவில் புதிய ஆடைக் காட்சியறைக்கு பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை

- வவுனியா நகரில் வசிப்பவர்கள் விரும்பத் தக்கது.
- புடைவை விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: சரவணா சில்க்ஸ்

இல. 90, பசார் வீதி, வவுனியா.

024 222 7965

உதயன் advt@uthayan.com 0215671111

G.C.E (O/L) பரீட்சை எழுதிய மாணவர்களின் உயர் கல்வி மற்றும் எதிர்கால நலன் கருதி குறுகிய காலப் பயிற்சிநெறிகள்

பல்கலைக்கழக கல்வி,
வேலைவாய்ப்பு,
வெளிநாட்டில் உயர்கல்வி,
ஏனைய கற்கை நெறிகளை
மேற்கொள்ள காத்திருக்கிறீர்களா?



ஆங்கில அறிவு இல்லாமல் இவை எதுவுமே சாத்தியப்படாது.

சர்வதேச தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் உங்களுக்காக எமது நிறுவனம் வழங்கும்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick Learning Course) 80 Hours

**DIPLOMA IN ENGLISH** 110 Hours

- இப்பாடநெறிகளை பூர்த்தி செய்பவர்கள் City & Guilds இன் English examக்கு தோற்ற முடியும்.
- British Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சைகளுக்கும் தோற்ற முடியும்.
- Excellent Teachers' Panel & Individual attention

NEW BATCHES START ON

Batch I : 17.04.2015
Batch II : 18.04.2015
BatchIV : 20.04.2015
Batch V : 21.04.2015

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

BCHS

No.15 2/1, Chirambiyadi Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel : 021-2224550

Hotlines: 0777585913, 0777222422, 0714299935


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.